# உதயன்

கூ.வெ. 31 °C
கு.வெ. 24 °C
மேகமூட்டம்

சுடர் 30 | கதிர் 103 | வள்ளுவர் ஆண்டு 2046 | மாசி 25, திங்கட்கிழமை 09.03.2015


## மூன்றாவது நாளாகவும் நல்லூரில் போராட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 9
காணமல் போனவர்களை கண்டறிந்து தருமாறும், அவர்கள் தொடர்பான நிலைப்பாடுகளை தெரிவிக்குமாறும் போர்க்குற்றம் தொடர்பான சர்வதேச விசாரணையை முன்னெடுக்க வலியுறுத்தியும் நல்லூர் கோவில் முன்றிலில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமான உணவுதவிர்ப்புப் போராட்டம் தொடர்ந்து மூன்றாவது நாளாக நேற்றும் முன்னெடுக்கப்பட்டது. முல்லைத்தீவில் இருந்து வந்திருந்த, காணாமற்போனோரின் உறவினர்கள்சிலரும்இந்தப்போராட்டத்தில் நேற்று இணைந்து கொண்டனர்.

பக்.24

# விதவைகளை மறுமணம் செய்ய இளைஞர்களே முன்வாருங்கள்

### மாவை எம்.பி. உருக்கமான அழைப்பு
### சமூக மாற்றம் வேண்டும் எனவும் அறைகூவல்

யாழ்ப்பாணம், மார்ச் 9
இளம் விதவைகளை மறுமணம் செய்து கொள்ள தமிழ் இளைஞர்கள் முன்வர வேண்டும் என்று உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளார் தமிழரசுக் கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராசா. விதவைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் அவர்களின் பிள்ளைகளைப் பாதுகாப்பதற்கும் இதுவே சிறந்த வழி என்றும் அவர் தெரிவித்தார்.

யாழ். நகரில் அமைந்துள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற உதவி வழங்கும் நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் உரையாற்றினார்.

சுவிஸின் செந்தமிழ்ச் சோலை நிறுவனத்தால், 25 பேருக்குதலா 2 ஆயிரம்ரூபாவீதம் ஒவ்வொரு மாதமும் நிதி உதவி வழங்கும் திட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டது. இதில் முல்லைத்தீவைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட சிறுவர்களின் கல்வி வளர்ச்சிக்காக மேற்படி நிதி வழங்கப் பட்டது.

பக்.24

## 27ஆம் திகதி ரணில் வருகின்றார் வடக்கே

யாழ்ப்பாணம், மார்ச் 9
வடபகுதி மக்களைச் சந்திப்பதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த மாத இறுதியில்வடக்குக்குவருகை தரவுள்ளார்.
புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்றதைத் தொடர்ந்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த 3ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு முதன்முறையாக வந்திருந்தார். வடக்கு மாகாண ஒருங்கிணைப்புக் கூட்டத்தினையும் யாழ். மாவட்டச் செயலகத்தில்

பக்.24

## மூடப்படுகிறது மத்தள விமான நிலையம்

மத்தல மஹிந்த ராஜபக்ஷ விமான நிலையத்தின் பயணிகள் சேவைகள் அனைத்தும் ஏப்ரல் மாதம் 1ஆம் திகதியுடன் முடிவுறுத்தப்படவுள்ளது என்று தெரியவருகின்றது. கடந்த இரு மாதங்களில் இரு பயணிகளே இந்த விமான நிலையத்துக்கு வந்துள்ளனர். விமான நிலையப் பராமரிப்புக்காக மாதாந் தம் 250 மில்லியன்ரூபா செலவிடப்படுகின்றது.

பக்.21

## உதவி பெற இதுவரை 40 ஆயிரம் பேர் பதிவு

### போராளி, மாவீரர், அரசியல் கைதிகளின் குடும்பங்களைச் சேர்ந்தோர்

யாழ்ப்பாணம், மார்ச் 9
முன்னாள் போராளிகள், மாவீரர் குடும்பங்கள், தமிழ் அரசியல் கைதிகளின் குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவியைப் பொறுவதற்கு இதுவரையில் 40 ஆயிரம் பேர் பதிவு செய்துள்ளனர். இந்தப் பதிவுகளை மேற்கொள்வதற்கான கால எல்லை இந்த மாதம் 31ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நாளையுடன் பதிவுகளுக்கான காலம் முடிவடைவதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.
உதவிகளைப் பெறப் பதிவு செய்பவர்களுக்கு கொழும்பு அரசின் புலனாய்வாளர்கள் எந்த அச்சுறுத்தல்களையும் விடுக்கவில்லை என்பதால் உதவியை எதிர்பார்க்கும் ஏனையோரும் பதிவுகளை மேற்கொள்ளலாம் என்று அறிவித்துள்ளார் வடக்கு மாகாண சபை மீன்பிடித்துறை அமைச்சர் பா.டெனீஸ்வரன்.
வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து, வீதி அபிவிருத்தி, வர்த்தக – வாணிப, கிராமிய அபிவிருத்தி அமைச்சினால், முன்னாள் போராளிகள், மாவீரர் குடும்பங்கள் மற்றும் தமிழ் அரசியல் கைதிகளின்

பக்.24

## மனிதாபிமானத்துடன் அணுகக் கோரிக்கை

### எல்லை தாண்டும் மீனவர்களின் பிரச்சினையை



கொழும்பு, மார்ச் 9
இந்திய மீனவர் பிரச்சினையை மனிதாபிமான ரீதியில் அணுக வேண்டும் என்று இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் வலியுறுத்தியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. இந்திய மீனவர்கள் எல்லை தாண்டும் பிரச்சினை அவர்களின் வாழ்வாதாரத்துடன் தொடர்புபட்டது என்பதால் அதனை மனிதாபிமான ரீதியிலேயே அணுக வேண்டும் என்று சுஷ்மா வலியுறுத்தினார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பக்.24

## ரணிலுடன் சீனத் தூதுவர் அவசர பேச்சு!

சீனாவால் முன்னெடுக்கப்பட்ட கொழும்பு துறைமுக நகரத் திட்டத்தை இலங்கை அரசு இடைநிறுத்தியுள்ளதை அடுத்து, இலங்கைக்கான சீனத் தூதுவர் அவசர அவசரமாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

பக்.02

**13 லட்சம் வெல்லுங்கள்**
விவரங்கள் உள்ளே!

## வட இலங்கையில் நடந்தேறும் மிகப் பெரிய சூழல் இடர்

வட இலங்கையில் மிகப் பெரிய சூழல் இடர் ஒன்றுக்கான....

விரிவு - பக்கம் 16

## மோடியின் பயணத்தை இறுதி செய்யக் குழு

### இன்று வடக்கே வருகிறது

யாழ்ப்பாணம், மார்ச் 9
இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் வடபகுதிக்கான பயண ஒழுங்கை இறுதி செய்வதற்காக இந்திய அதிகாரிகள் குழுவொன்று இன்றைய தினம் வடமாகாணத்துக்கு வருகை தரவுள்ளது.
இந்தக் குழுவில் பாதுகாப்புத்துறை சார்ந்தவர்களும், வெளிவிவகார அமைச்சைச் சார்ந்தவர்களும் இடம் பெற்றிருப்பர்.
இந்தியப் பிரதமர் இரு நாள் பயணமாக எதிர்வரும் 13 ஆம் திகதி கொழும்புக்கு வருகிறார். இந்தப் பயணத்தின்போது வடபகுதிக்கும் அவர் வரவுள்ளார். தற்போதைய பயண ஒழுங்கில், எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை வடக்கு மாகாணத்திற்கு வருவதற்கான ஒழுங் குகள் குறிக்கப்பட்டுள்ளன.

பக்.24



## லண்டனில் மைத்திரிக்கு சிறப்பான வரவேற்பு தமிழர்களின் ஆர்ப்பாட்டமும் கைவிடப்பட்டது

லண்டன், மார்ச் 9
பொதுநலவாய அமைப்பின் நிகழ்வுகளில் பங்கேற்பதற்காக பிரிட்டன் சென்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு லண்டனில் ஹீத்ரோ விமான நிலையத்தில், இலங்கை தூதரக அதிகாரிகளும் பிரித்தானிய அரச பிரதிநிதிகளும் சிறப்பான வரவேற்பு அளித்தனர்.
பொதுநலவாய அமைப்பின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, லண்டனில் உள்ள வெஸ்ட்மினிஸ்டர் தேவாலயத்தில் இன்று நடைபெறும் பொதுநலவாய தின நிகழ்வுகளில் பங்குபற்றவுள்ளார்.
அதேவேளை, பிரிட்டனுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக லண்டனில் நடத்தப்படவிருந்த

பக்.24

## ஜனாதிபதியிடம் இனி கேள்வி எழுப்பலாம்

கொழும்பு, மார்ச் 9
"புதிய அரசமைப்புச் சீர்திருத்தத்தின்படி, ஜனாதிபதியின் செயற்பாடுகள் குறித்து நீதிமன்றத்தின் அடிப்படை உரிமை மனுவின் ஊடாக கேள்வி எழுப்ப முடியும்" – இவ்வாறு ஜனாதிபதியின் அரசமைப்புத் தொடர்பான ஆலோசகர் ஜெயம்பதி விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.
"புதிய அரசமைப்புச் சீர்திருத்தத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஜனாதிபதியின் 100 நாள் வேலைத்திட்டத்தின் கீழ், இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. தற்போதுள்ள அரசமைப் பின்படி,

பக்.24

## 29 புதிய தூதுவர்கள் விரைவில் நியமனம்

கொழும்பு, மார்ச் 9
"வெளிநாடுகள் பலவற்றுக்குப் புதிய தூதுவர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன" என்று வெளிவிவகார பிரதி அமைச்சர் அஜித் பீ. பெரேரா

பக்.24

# ரணில், மங்களவை அவசரமாக சந்தித்து சீனத் தூதர் நேரில் பேச்சு

**நெருக்கமடையும் இந்திய - இலங்கை உறவால் சீற்றத்துடன் காய் நகர்த்துகிறது சீனா**

சீனாவினால் முன்னெடுக்கப்பட்ட கொழும்பு துறைமுக நகரத் திட்டத்தை இலங்கை அரசு இடைநிறுத்தியுள்ளதை அடுத்த, இலங்கைக்கான சீனத் தூதுவர் அவசர அவசரமாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இலங்கை – சீனா இரு நாடுகளுக்கும் நன்மையான உடன்பாடுகளை இலங்கை மதிக்க வேண்டும் என்று, சீனத் தூதுவர் இதன் போது வலியுறுத்தியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

மஹிந்த அரசின் காலத்தில், கொழும்பு துறைமுக நகரத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது. சீன ஜனாதிபதி இலங்கைக்கு வருகை தந்து இதனை ஆரம்பித்து வைத்திருந்தார். இந்தத் திட்டத்தால் ஏற்படக்கூடிய சுற்றுக் சூழல் பாதிப்புக் குறித்த விரிவான அறிக்கை கிடைக்கும் வரையில் திட்டத்தை நிறுத்தி வைக்க புதிய அரசு முடிவு செய்தது. கடந்த புதன் கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த முடிவு எட்டப்பட்டது. இதனை அடுத்து, திட்டத்தை முன்னெடுத்து வந்த நிறுவனம் தனது பணிகளை நிறுத்தியிருந்தது.

இந்த நிலையில், இலங்கைக்கான சீனத் தூதுவர் யி ஜியான்லியாங், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும், வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவையும் வெள்ளிக்கிழமை சந்தித்துப் பேசினார்.

சீனாவுடன் செய்து கொள்ளப்பட்ட இருதரப்பு உடன்பாடுகள் – வர்த்தக உடன்பாடுகளை மதித்து நடக்குமாறும், சீன முதலீட்டாளர்களின் நலன்களைப் பாதுகாக்குமாறும் சீனத் தூதுவர் இலங்கை அரசிடம் வலியுறுத்தினார் என்று கொழும்பிலுள்ள சீனத் தூதரகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இரு நாடுகளுக்கும் நன்மை தரக் கூடிய உடன்பாடுகளை இலங்கை அரசு தொடர்ந்து மதித்து நடக்க வேண்டும் என்றும் இதன்போது சீனத் தூதர் கேட்டுக்கொண்டுள்ளார். (உ-5)



கழிவு ஒயிலால் பாதிக்கப்பட்ட கிணறுகள் தொடர்பான விவரங்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் வலி.தெற்கு மற்றும் வலி.வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வடக்கு மாகாண சபையின் விவசாய மற்றும் சுற்றுச் சூழல் அமைச்சு அமைத்த தூய நீருக்கான செயலணியால் படிவங்கள் வழங்கப்பட்டு இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. பொதுமக்கள் பாதிக்கப்பட்ட தமது கிணறுகள் தொடர்பில் பதிவு செய்வதில் ஆர்வமுடன் ஈடுபட்டு வருகின்றனர். (ற-86)

# இந்திய வீட்டுத் திட்டம் எமக்கு கிடைக்குமா?

**மாந்தை மேற்கு மக்கள் கேள்வி**

மன்னார், மார்ச் 9

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கிராம மக்கள் பல ருக்கு இந்திய வீட்டுத்திட்டம் வழங் கப்படாததால் அவர்கள் பல்வேறு சிரமங்களைஎதிர்நோக்கி வருகின்றனர்.

வேட்டையன் முறிப்பு,மாளிகை திடல்,மினுக்கன்,கட்டைக்காடு இக் கிராமத்தில் வசிக்கும் பல மக்களுக்கு இதுவரை இந்திய வீட்டுத்திட்டம் வழங்கப்படவில்லை. ஆனால் புத்தளம், சிலாபம் பகுதிகளில் வாழும் மக்களுக்ளு இப் பகுதியில் இந்திய வீடுகள் வழங்கப்பட்டுள்ளது என்று அவர்கள் தெரிவிக்கின்றனர்

இக் கிராமத்தில் வாழும் மக்கள் பலர் வீடுகள் இன்றி பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுத்து வரும் நிலையில் இக்கிராமத்தில் வசிக்காது புத்தளம் மற்றும் சிலாபம் பகுதியில் வாழ்ந்துவரும் மக்களுக்கு குறித்த இந்திய வீட்டுத் திட்டம் அரசி யல் செல்வாக்கு அடிப்படையில் வழங்கப் பட்டுள்ளது என்று அந்தக் கிராம மக்கள் விசனம் தெரிவித் தனர்.

புத்தளம்சிலாபம் பகுதியில் வசித்து வரும் மக்கள் குறித்த வீட்டுத்திட்டத்தை பெற்றுள்ள போதும் அவர்களில் அனேகமானோர் குறித்த கிரா மங்களில் வாழவிரும்பாத நிலையில்புத்தளம்சிலாபம்பகுதியிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

அரசியல் தலையீடு காரணமாக வழங்கப்பட்ட வீடுகளில் மனிதர்கள் வாழாமல்குரங்குகளின் வதிவிடமாக மாறிவருகிறது. ஆனால் இக் கிரா மத்தில் வாழ்ந்து வரும் பல மக்கள் வீடுகள் இன்றி இன்று வரை தற்காலிக குடிசைகளில் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் இந்தியன் வீட்டுத் திட்டத்தை தமக்கும் பெற்று தரும்படி வேண்டுகோள் விடுக்கின்றனர்.

அதிகாரிகள் இந்திய வீட்டுத்திட்டத்தை பெற்று வருவதாக இம் மக்களுக்கு கூறியிருந்த போதும் இன்று வரை அவ் வீட்டுத்திட்டம் அம் மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கபடவில்லை என தெரிவிக்கின்றனர். எனவே சம்நதப்பட்ட அதிகாரிகள் வீட்டுத்திட்டத்தை பெற்றுத்தரவேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றனர். (ற)

# எழுச்சியுடன் நடைபெற்ற பெண்கள் எழுச்சி நாள்



யாழ்ப்பாணம், மார்ச் 9

உலகப்பெண்கள் எழுச்சி நாள் பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நேற்று விமரிசையாக நடைபெற்றது. கிளிநொச்சி மாவட்ட மாதர் அணியின் இந்த நிகழ்வு வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது.யாழ்பல்கலைக் கழக ஓய்வுபெற்ற முதுநிலை விரிவுரையாளர் நாச்சியார் செல்வநாயகம், வடக்கு மாகாண சபை உறுப்பினர் மேரி கமலா, தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் அரியரட்ணம், அரசியல் ஆர்வலர்கள், பெண்ணியவாதிகள், 500 ற்கும் அதிகமான பெண்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

வடக்கு மாகாணத்தில் பெண்கள் எப்படி பார்க்கப்படுகின்றார்கள், அவர்களுடைய வளர்ச்சி எவ்வாறு அமைய வேண்டும், பெண்களின் முன்னேற்றத்திற்கு என்ன செய்ய வேண்டும், பெண் எப்படிப் பட்டவள் போன்ற பல விடயங்கள் நிகழ்வில் கலந்துகொண்ட பெண்ணிய வாதிகளாலும், பேச்சாளர்களாலும் ஆழமாகவும் சிந்தனைக்குரியதாகவும் விடுதலை புலிகளின் பெண் போராளிகளை உதாரணங்கள் காட்டி பேசப்பட்டது. (ற-21)

# பெண்புலிகளை நினைத்தால் இன்றும்கூட மயிர் சிலிர்க்கும்

**பெண்கள் எழுச்சி நாள் நிகழ்வில் விரிவுரையாளர் நாச்சியார் தெரிவிப்பு**



யாழ்ப்பாணம், மார்ச் 7

"விடுதலை புலிகள் அமைப்பில் இருந்த பெண் போராளிகள் எவ்வளவு பெரிய தியாகிகள். உண்மையில் அவர்களை நினைத்தால் இன்றும் மயிர் சிலிர்க்கும். அப்படிப்பட்ட தொண்டுள்ளம் படைத்த பெண்கள், பெண் வீராங்கனைகள் எங்களிடம் இருந்தார்கள்"– இவ்வாறு தெரிவித்தார் யாழ். பல்கலைக்கழக ஓய்வுபெற்ற முது நிலை விரிவுரையாளர் நாச்சி யார் செல்வநாயகம்.

கிளிநொச்சி மாவட்ட மாதர் அணியின் ஏற்பாட்டில் நேற்று பளை பச்சிலைப்பள்ளி பலநோக்கு கூட்டுறவு சங்க மண்டபத்தில் இடம் பெற்ற உலகப்பெண்கள் எழுச்சி நாள் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"எங்களுடைய மொழிக்காகவும் இனத்திற்காகவும் பெண் விடுதலை புலிகள் வாழ்ந்த வாழ்க்கையை நினைத்தால் நாங்கள் எம்மாத்திரம். நாங்கள் ஒரு துரும்பு. அவர்கள் தங்களை ஆகுதியாக்கி இந்த நிலத்திற்கும் மொழிக்கும் வாழ்வு கொடுப்பதற்காக தங்களை ஒரு பொருளாக கூட கருதாமல் அந்த ஒளியிலே தங்களை அழித்துக் கொண்டார்கள். எனவே அவர்கள் சாகவில்லை. யார் தொண்டர்களோ, யார் சமூகத்திற்கு சேவை செய்தார்களோ, யார் தங்களுடைய வாழ் நாளிலே பிறர் நலம் பேணி வாழ்ந்தார்களோ,அவர்கள்தான்உண்மையான பெண்கள்."– என்று அவர் கூறினார்.

"நாங்கள் அனைவரும் பெண் விடுதலை என்று வாயாலே பேசலாம். ஆனால் உயிர் நீத்தும் கூட இன்றும் உயிராக இருக்கின்ற எமது விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள் வாயாலே பேசவில்லை செயலாலே காட்டியிருக்கின்றார்கள். அவர்கள் எங்கள் சமூகத்திற்கு பேர் அறத்தை செய்தார்கள்.

எம்முடைய உரிமையை நாம் பெற்று கொள்வதற்கும், நாங்கள் எங்களை தயார்படுத்திக்கொள்ள வேண்டும். அதற்கு மகளிர் ஆகிய நாம் அரசியலிலே பிரவேசிக்கவேண் டும்."– என்றும் அவர் அங்கு குறிப்பிட்டார்.(ற-21)

# பாடசாலை அனுமதி; விரைவில் விசாரணை

யாழ்ப்பாணம், மார்ச் 9

பாடசாலைகளில் மாணவர்களைச் சேர்த்து கொள்வது தொடர்பில் இடம்பெற்ற முறைகேடுகளுக்கு எதிரான மேன்முறையீடுகளை கையேற்பது கடந்த வெள்ளிக் கிழமையுடன் முடிவுக்கு வந்தது. அவை தொடர்பில் விரைவில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சு அறிவித்துள்ளது.

மேன்முறையீடுகளை கையேற்கும் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளமையால் இனிமேலும் மேன்முறையீடுகளை கல்வியமைச்சில் கையளிக்கவேண்டாம் என்றும் அமைச்சு பொது மக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளது.

கையளிக்கப்பட்டுள்ள மேன்முறையீடுகள் ஆராயப்படவுள்ளன. பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைவில் தீர்வு வழங்கப்படும். இதே வேளை, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் 6 ஆம் வகுப்புக்கு மாணவர்களை இணைத்துக் கொண்டமைக்கு எதிரான மேன்முறையீடுகளை கையேற்கும் இறுதி நாள் மார்ச் 31ஆம் திகதி என்றும் அது தொடர்பான முறைப்பாடுகளை விரைவில் அனுப்பி வைக்குமாறும் கல்வியமைச்சு மேலும் அறிவித்துள்ளது. (ற-4)

# சுஷ்மாவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியது மு.கா.



இலங்கை வந்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜுக்கும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையே நேற்று சந்திப்பு நடந்துள்ளது.

அதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த அமைச்சர் ஹக்கீம்,

"இந்திய வெளிவிவகார அமைச்சருடனான சந்திப்பு ஆக்கபூர்மாக அமைந்தது. இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் இந்தியா காத்திரமான பங்களிப்பைச் செய்யும் என்று குறிப்பிட்டார். கிழக்கு மாகாணத்தில் அபகரிக்கப்பட்ட காணிகள் குறித்தும் மீட்கப்படாத காணிகள் குறித்தும் அவரிடம் எடுத்துக் கூறினோம்."– என்று தெரிவித்தார்.

"தேர்தல் விடயத்தில் சிறிய கட்சிகளின் பிரதி நிதித்துவத்துக்கு பாதிப்பு ஏற்படாதவகையில் பெரிய தேசிய கட்சிகளுடன் சுமுகமா கப் பேசி இணக்கப்பாட்டுக்கு வருவதனூடாக சிறுபான்மைச் சமூகங்களின் அரசியல் அபிலா சைகளையும் உள்வாங்கியதாக உத்தேச தேர்தல் சீர்திருத்தம் அமைய வேண்டியதன் அவசி யம் பற்றியும் நாங்கள் அவரிடம் கூறினோம்."– என்றும் அவர் குறிப்பிட்டார்.

"இன்றைய சூழ்நிலையில் இனப் பிரச்சினைத் தீர்வு முயற்சிகள் மற்றும் தேசிய நல்லிணக்கத்துக்கான நகர்வுகள் குறித்து அவர் எங்களிடம் கேள்வியெழுப்பி னார். போரின் பின்னரான காலப் பகுதியில் அந்தவிடயங்களில் போதிய கவனம் செலுத்தப் பட வில்லை என்றாலும் அடுத்து வரும் பொதுத் தேர்தலின் பின்னர் தான் அவை தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்படலாம் எனத் தெரிவித்தோம். கிழக்கு மாகாணத்தில் ஒரு புதிய அரசியல் கலாசாரத்தை ஆரம்பித்து வைக்கும் விதத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உட்பட இதர அரசியல் கட்சிகளையும் அரவணைத்து தேசிய ஆட்சி யொன்றை அங்கு நாம் நடத்தி வருவதையிட்டு நாம் அவர்களி டத்தில் சுட்டிக்காட்டிய போது அவர் மகிழ்ச்சி தெரிவித்தார்"– என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ற-10)

BUSINESS MANAGEMENT | 0777 692318
CAMPUS
JAFFNA




13 லட்சங்கள்
WOW
கூப்பன்களை இன்றே நிரப்பி அனுப்புங்கள், பணத்தை அள்ளுங்கள் !

# கிரிக்கெட் கொண்டாட்டம்

| 2015 | மார்ச் 09 | திங்கட்கிழமை

# இலங்கையின் வெற்றி தவறியது



கங்காரு தேசத்தில் நடக்கும் ஆட்டத்தில், கங்காருகளை வீழ்த்துவது என்பது இமாலய காரியம். இருந்தும் முயற்சித்துதான் பார்ப்போம் என்று இலங்கைச் சிங்கங்கள் நேற்று வீறு நடைபோட்டன. ஆட்டம் நன்றாக அமைந்தும் அதிர்ஷ்டம் கைகொடுக்காததால், சாதனை வெற்றியைச் சிங்கங்கள் இழந்தன. 64 ஓட்டங்களால் இலங்கை அணி, ஆஸி.யிடம் நேற்று வீழ்ந்தது.

காலிறுதி இரு அணிகளுக்கும் ஏற்கனவே உறுதி. ஆனாலும், வழமைக்கு மாறாக ஆஸி. வீறாப்புடன் இலங்கையுடன் மோதியது. வார்த்தை மோதல்கள் தொடக்கம், சைகை மோதல்கள் வரையில், இலங்கை அணியை வலிந்து வம்பிக்கிழுத்தது ஆஸ்திரேலியா. நாணயச் சுழற்சி இலங்கைக்கு சறுக்கியது. ஆஸி. துடுப்பெடுத்தாட இறங்கியது. இலங்கை அணி வழமைக்கு மாறான மாற்றம். காயங்களால் நொந்து போன இலங்கை அணி, மூன்று முழு நேரப் பந்து வீச்சாளர்களுடன் இறங்கியது. 8 துடுப்பாட்ட வீரர்கள்.

ஆஸிக்கு அடித்தாடி ஆரம்பம் சேர்க்கும் வோர்னர் – பின்ஞ் இருவரையும் இலங்கை கவனித்து நேரத்துடன் அனுப்பியது. இதனால் ஓட்ட விகிதம் கட்டுக்குள் இருந்தது. சிமித் – கிளார்க் இணை சுமாராக ஆடத் தொடங்கியது. இலங்கை அணியின் களத்தடுப்பு இன்னமும் முன்னேறவில்லை. ஓட்டங்களை இலகுவாகப் பெற்றது சிமித் – கிளார்க் இணை. ஆளுக்கொரு அரைச்சதம் அடித்து அணியை வலுவாக்கி அதிரடிக்கு முனைந்தனர். இதனால் அடுத்தடுத்து வெளியேற்றப்பட்டனர்.

வந்தனர் மக்ஸ்வெல் – வொட்ஸன் இணை. வந்த வேகத்தில் தூள் கிளம்பியது. மக்ஸ்வெலின் துடுப்பு நாலாபுறமும் சுழன்றடித்தது. ஓட்ட வேகம் எம்பிக் குதித்து ஏறியது. எந்தப் பக்கம், எவர் பந்து போட்டாலும் எல்லைக்குச் சென்று, முத்தம் கொடுத்து திரும்பியது பந்து.

மக்ஸ்வெல் சாதனைச் சதத்தை நோக்கி நகர்ந்தார். 93 ஓட்டங்களில் கொடுத்த பிடி தவறியது. வாய்ப்பை பயன்படுத்தி கன்னிச் சதம். ஆனாலும்

பக்கம் 04

## சங்கா சாதனை

இலங்கை அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் குமார் சங்ககாரா, ஒரு நாள் அரங்கில் 14 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த இரண்டாவது வீரர் என்ற சாதனையை நேற்றுப் படைத்தார். ஆஸ்திரேலிய அணியுடனான நேற்றைய ஆட்டத்தில், குமார் சங்ககாரா 39 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது இந்த மைல் கல்லை எட்டினார்.

குமார் சங்ககாரா உலகக் கிண்ணத் தொடரில் தொடர்ச்சியாக மூன்றாவது சதத்தை நேற்று விளாசினார். இதுவரை உலகக் கிண்ணத்தின் 35 ஆட்டங்களில் பங்கெடுத்துள்ள சங்கா, 4 சதங்களை விளாசியுள்ளார். இன்னும் இரண்டு சதங்கள் விளாசினால், உலகக் கிண்ணத்தில் அதிக சதங்களை அடித்த வீரர் என்ற பெருமையை சங்கா பெற்றுக் கொள்வார்.

இலங்கை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்

பக்கம் 04

## துணிச்சலான டோனி

மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான உலகக்கிண்ண லீக் ஆட்டத்தில் டோனி காலுறை அணியாமல் களத்தடுப்பில் ஈடுபட்டது அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது.

ஆட்டத்தின் 14 ஆவது பந்துப் பரிமாற்றத்தை அஸ்வின் வீசிக் கொண்டிருந்த போது, பந்து பவுன்ஸ் ஆகியது. இதனைப் பார்த்த டோனி, சிலி பொய்ண்டில் நெருக்கமாக ரஹானேவை நிறுத்தி எதிரணித் துடுப்பாட்டக்காரர்களுக்கு நெருக்கடி கொடுக்க திட்டமிட்டார்.

பக்கம் 04

## பங்களாதேஷ் வீரர் விலகல்

பங்களாதேஷ் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் அனாமுல் ஹக் (வயது – 22) தோள்பட்டை காயம் காரணமாக உலகக் கிண்ணத்திலிருந்து விலகி உள்ளார். அவருக்குப் பதிலாக இம்ருல் கையஸ் (வயது – 28) அணியில் இடம் பெற உள்ளார். இதற்கான ஐ.சி.சி. தொழில்நுட்பக் குழு ஒப்புதல் விரைவில் அளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இம்ருல் கையஸ் இதுவரை 53 ஒரு நாள் ஆட்டங்களில் விளையாடி ஆயிரத்து 390 ஓட்டங்களை எடுத்துள்ளார். (5–ரி)

## கத்துக்குட்டிகளை கவிழ்த்துப்போட்டது நியூஸி. தொடர்கிறது தவிர்க்க முடியாத ஆதிக்கம்

06 இலக்குகளால் கத்துக்குட்டிகளை வீழ்த்தி லீக் ஆட்டத்தில் தொடர்ந்தும் முதலாவது இடத்தில் அசைக்கமுடியாத, தவிர்க்க முடியாத ஆதிக்கம் செலுத்துகின்றது நியூஸிலாந்து.

ஆப்கானுடனான ஆட்டம் நிச்சயம் நியூஸிலாந்து வெல்லும். இந்த முடிவு தெளிவாக தெரிந்திருந்தும் ஆஸி. நியூஸி. ஆட்டத்தினை பார்க்க வருவதைப்போல ஏராளமான ரசிகர்கள் வந்திருந்தனர். ரசிகர்களின் ஏராளமான வருகைக்கு ஓரே காரணம் நியூஸிலாந்தின் வான வேடிக்கைகளையும் மிரட்டும் பவுண்சர்களையும் நேரில் காண்பதற்காகவே. அதே நேரம் 'எனது நாடு' என்ற கொள்கையின் அடிப்படையில் ஆப்கானுக்கும் சில ரசிகர்கள் இருக்கத் தான் செய்தனர்.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஆப்கான் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. நியூஸிலாந்தின் அதிரடி 50 பந்துப்பரிமாற்றங்கள் வரை பார்க்க முடியாத ஏமாற்றத்தில் நியூஸி. ரசிகர்கள். களத்தில் அகமடி மற்றும் ஹானி. இருவராலும் இரண்டு பந்துப்பரிமாற்றங்களுக்கு மேலே தாக்குப்பிடிக்க முடியவில்லை. இடத்தை நிரப்பிய ஸ்ரானிக்சை ஆரம்ப வீரர்களின் பாணியிலேயே விடைபெற்றார். மங்கலும் சென்வாரியும் இணைந்து சற்றுநேரம் தாக்குப்பிடித்தனர். அணியின் ஓட்டம் 50இனை நெருங்கும் பொழுது மங் கலை 'போல்ட்' முறையில் விக்டோரி அனுப்பி வைத்தார். ஓர் முனையில் சென்வாரி நிலைத்து நின்றாலும் மறுமுனை பலமாக இருக்க வில்லை. தலைமை இன்னிங்ஸும் அணியை ஏமாற்றியது. நபி 6 ஓட்டங்களுடன் விடை பெற்றார். சஷாய் வந்ததும் தெரியாது போனதும் தெரியாது. ஆப்கான் 59 ஓட்டங்களுக்கு 6 இலக்குகள். போராடிக் கொண்டிருந்த சென்வாரிக்கு கைகொடுத்தார் என்.சடான். இருவரும் இணைந்து அணியை படிப்படியாக கௌரவ இலக்கை நோக்கி அழைத்துச்சென்றனர். 6 இலக்குகளிலேயே ஒருவாறு 100 ஓட்டங்களை எட்டடியது ஆப்கான். சென்வாரி டெஸ்ட் பாணியில், என்.சடான் அதிரடியில் பயணம். அரைச்சதம் கடந்து விடைபெற்றார் சடான்.

பக்கம் 04



## சர்சைக்குரியதாகிய கத்துக்குட்டிகள் ஆட்டம்

உலகக் கிண்ணத் தொடரில் நேற்று முன்தினம் அயர்லாந்து வெற்றி பெற்றதற்குக் காரணம் அயர்லாந்து வீரர்மூனி, சிம்பாப்வே வீரர் வில்லியம்ஸின் சர்ச்சைக்குரிய முறையில் பிடித்தமைதான் என்று தெரிவிக்கப்படுகின்றது. சிம்பாப்வேயின் வில்லியம்ஸ் உலகக் கிண்ணத்தில் மிகவும் சீராக ஆடி வருகிறார். அயர்லாந்துக்கு எதிரான ஆட்டத்தில், அவர் 83 பந்துகளில் 7 பவுண்டரிகள் 2 சிக்சர்களுடன் 96 ஓட்டங்களில் இருந்த போது சர்ச்சைக்குரிய முறையில் ஆட்டமிழந்தார்.

வில்லியம்ஸ் 96 ஓட்டங்களில் இருந்த போது சிம்பாப்வே வெற்றிக்குத் தேவை 20 பந்துகளில் 32 ஓட்டங்கள். 6 இலக்குகள் கைவசம் இருந்தது. அப்போது அயர்லாந்து சகலதுறை வீரர் கெவின் ஓ பிரையன் ஒரு ஷேஜுட் பிட்சை வீச அதனை வில்லியம்ஸ் தூக்கி அடித்தார். பந்து சிக்சருக்கு சென்று கொண்டிருந்தது.

அப்போது எல்லைக் கோட்டுக்கு

பக்கம் 04

## Picture Of The Day



நேற்றைய ஆட்டத்தில் டில்ஷானின் பிடியைத் தவறவிட்ட ஆஸி.அணித் தலைவர் கிளார்க்

| குழு A | வெ | தோ | ச.நி | புள்ளி |
|---|---|---|---|---|
| நியூஸிலாந்து | 5 | 0 | 0 | 10 |
| ஆஸ்திரேலியா | 3 | 1 | 1 | 7 |
| இலங்கை | 3 | 2 | 0 | 6 |
| பங்களாதேஷ் | 2 | 1 | 1 | 5 |
| இங்கிலாந்து | 1 | 3 | 0 | 2 |
| ஆப்கானிஸ்தான் | 1 | 4 | 0 | 2 |
| ஸ்கொட்லாந்து | 0 | 4 | 0 | 0 |

| குழு B | வெ | தோ | ச.நி | புள்ளி |
|---|---|---|---|---|
| இந்தியா | 4 | 0 | 0 | 8 |
| தென்னாபிரிக்கா | 3 | 2 | 0 | 6 |
| பாகிஸ்தான் | 3 | 2 | 0 | 6 |
| அயர்லாந்து | 3 | 1 | 0 | 6 |
| மே.இ.தீவுகள் | 2 | 3 | 0 | 4 |
| சிம்பாப்வே | 1 | 4 | 0 | 2 |
| ஐ.அ.இராச்சியம் | 0 | 4 | 0 | 0 |

# கத்துக்குட்டிகளை கவிழ்த்துப்போட்டது நியூஸி.

சடான் விடைபெற்றதும் சென்வாரியின் டெஸ்ட் ஆட்டம் இரட்டிப்பானது. ஒருவாறு 105 பந்துகளில் அரைச்சதம் கண்டார். இந்த உலக்கிண்ண தொடரில் மிக தாமதமாக பெறப்பட்ட அரைச்சதமாகவும் பதிவுசெய்யப்பட்டது. பினவரிசை வீரர்களும் அதே ஒற்றை இலக்கங்களுடன் விடைபெற ஆப்கான் 186 ஓட்டங்களில் சுருண்டது.

187 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி. களத்தில் மக்கலம் மற்றும் குப்தில். மக்கலத்தைப் பொறுத்தமட்டில் வெற்றி என்பது முக்கியமல்ல அதனை எத்தனை பந்துப்பரிமாற்றத்தில் பெறவேண்டும் என்பதுதான் முக்கியம். நாலாபக்கமும் பந்துகள் சீறிப்பாய்ந்தன. பந்தை வீசுவதும் தலையில் கைவைப்பதுமாகவே ஆப்கானின் பந்துவீச்சாளர்களது நேரம் கடந்தது. 5.4 பந்துப்பரிமாற்றத்திலேயே நியூஸிலாந்து 50 ஓட்டங்களை எட்டிப் பிடித்தது. அடுத்த பந்திலேயே மக்கலம் 42(19) ஓட்டங்களுடன் விடைபெற்றார். ஆப்கானுக்கும் சற்று நின்மதி பிறந்தது. மக்கலத்துக்கு பதிலாக நியூஸியின் வருங்கால தலைவர் வில்லியம்சன். வழங்கம் போல சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு ஆட்டம். மறுமுனையில் குப்திலும் நிதானித்தார் சீரான ஓட்ட வேகத்தில் ஓட்டங்களும் வந்துகொண்டிருந்தன. 'ஸ்கோர் கார்ட்' 111–1 என்று காட்டியது. 'நெல்சன்' இலக்கம் இலக்குகள் விழலாம் என்ற ஊகங்களுக்கு மத்தியில் வில்லியம்சன் 33 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்ப நியூஸி. 111–2. வில்லியம்சன் ஆட்டமிழந்த பின்னர் நியூஸி. மிக நிதானமாக பயணித்துக் கொண்டிருந்தது. ஆஸ்திரேலிய அணிக்கெதிரான ஆட்டத்தில் படித்துவிட்டோம் என்று மற்றைய அணிகளுக்கான எச்சரிக்கை மணியே அது. முடிவில் நியூஸிலாந்து அணி 4 இலக்குகளை இழந்து வெற்றியீட்டியது. (ரி–5)

2015 உலகக் கிண்ணம்

நியூசிலாந்து எதிர் ஆப்கானிஸ்தான் — 6 இலக்குகளால் நியூசிலாந்து வெற்றி — நாணயச் சுழற்சி: ஆப்கானிஸ்தான்

ஆப்கானிஸ்தான்

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| அக்மடி | LBW B அப்பொட் | 01 | 07 | 0 | 0 |
| ஹானி | B விக்டோரி | 0 | 03 | 0 | 0 |
| மன்கல் | B விக்டோரி | 27 | 46 | 03 | 0 |
| ஸ்ரானிக்சை | C குப்தில் B போல்ட் | 09 | 18 | 02 | 0 |
| சென்வாரி | C ரெயிலர் B அண்டர்சன் | 54 | 110 | 05 | 01 |
| நபி | C ரெயிலர் B விக்டோரி | 06 | 15 | 0 | 0 |
| சஷாய் | LBW B விக்டோரி | 0 | 01 | 0 | 0 |
| என்.சடான் | C விக்டோரி B மில்னி | 56 | 56 | 08 | 02 |
| டி.சடான் | C ரோஞ்சி B போல்ட் | 01 | 05 | 0 | 0 |
| ஹசன் | C மில்னி B அண்டர்சன் | 16 | 21 | 04 | 0 |
| எஸ்.சடான் | ஆட்டமிழப்பில்லை | 02 | 04 | 0 | 0 |
| உதிரிகள் | | | | | 14 |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| சவுத்தி | 10 | 43 | 0 | 0 |
| போல்ட் | 10 | 34 | 03 | 02 |
| விக்டோரி | 10 | 18 | 04 | 04 |
| மில்னி | 10 | 38 | 01 | 0 |
| அண்டர்சன் | 6.4 | 38 | 02 | 0 |
| எலியாட் | 01 | 10 | 0 | 0 |

TOTAL: 186 (47.4)

1 – 05 (அக்மடி), 2 – 06 (ஹானி), 3 – 24 (ஸ்ரானிக்சை), 4 – 49 (மன்கல்), 5 – 59 (நபி), 6 – 59 (சஷாய்), 7 – 145 (என்.சடான்), 8 – 151 (டி.சடான்), 9 – 166 (சென்வாரி), 10 – 186 (ஹசன்)

நியூசிலாந்து

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| குப்தில் | RO சென்வாரி | 57 | 76 | 07 | 0 |
| மக்கலம் | B நபி | 42 | 19 | 06 | 01 |
| வில்லியம்சன் | C சென்வாரி B எஸ்.சடான் | 33 | 45 | 04 | 0 |
| ரெய்லர் | ஆட்டமிழப்பில்லை | 24 | 41 | 02 | 0 |
| எலியாட் | RO நபி | 19 | 28 | 01 | 0 |
| அண்டர்சன் | ஆட்டமிழப்பில்லை | 07 | 08 | 01 | 0 |
| உதிரிகள் | | | | | 06 |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| டி.சடான் | 09 | 51 | 0 | 0 |
| எஸ்.சடான் | 10 | 45 | 01 | 02 |
| ஹசன் | 07 | 36 | 0 | 01 |
| நபி | 7.1 | 39 | 01 | 0 |
| சென்வாரி | 03 | 15 | 0 | 0 |

TOTAL: 188/4 (36.1)

1 – 53 (மக்கலம்), 2 – 111 (வில்லியம்சன்), 3 – 143 (குப்தில்), 4 – 175 (எலியாட்)

ஆட்ட நாயகன்: விக்டோரி

## சர்சைக்குரியதாகிய

மிக அருகில் நின்று கொண்டிருந்த அயர்லாந்து களத்தடுப்பாளர் மூனி எம்பிப் பிடித்தார். ஆனால் அவரது கால் எல்லைக் கோட்டை மிதித்தது போலவே தெரிந்தது. ஏனெனில் எல்லைக்கோடு அட்டையில் சிறு அசைவு தெரிந்தது. அது 'சிக்ஸ்' என்று சிம்பாப்வே பயிற்சியாளர் டேவ் வட்மோர் உள்ளிட்டோர் பவிலியனிலிருந்து கதறினர். ரீப்ளே திரும்ப திரும்பப் பார்க்கப்பட்டது. அது ஆட்டமிழப்புத்தானா என்று ஆராயப்பட்டது. ஆனால் எந்த ஒரு நிச்சயத்தன்மையும் இல்லாத நிலையில் வில்லியம்ஸ் ஆட்டமிழப்பு என்று தீர்ப்பளிக்கப்பட்டது. வில்லியம்ஸ் மிகுந்த ஏமாற்றத்துடன் பவிலியன் திரும்பினார்.

சிம்பாப்வே 5 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி தழுவியது. அந்த சிக்ஸ் கொடுக்கப்பட்டிருந்தால் வில்லியம்ஸ் சதம் அடித்திருப்பார், சிம்பாப்வே ஒரு வெற்றி யைச் சாதித்திருந்தாலும் சாதித்திருக்கும். (5–ரி)

# துணிச்சலான டோனி

ராஹானே பாதுகாப்பு கவசம் இல்லாமல் இவ்வளவு அருகில் நிற்பது ஆபத்தானது என்பதை உணர்ந்த டோனி, புதிய காலுறையை வரவழைக்க நடுவரிடம் அனுமதி கேட்டார். ஆனால் பந்துப் பரிமாற்றத்தின் பாதியில் அனுமதிக்க முடியாது என்று நடுவர் கூறினார்.

இதையடுத்து தனது தற்காப்பு காலுறையை கழற்றிக் கொடுத்து ரஹானேவை அணியச் செய்தார். காலுறை இன்றி தைரியமாக களத்தடுப்புச் செய்தார்.

4 பந்துகள் இவ்வாறு களத்தடுப்புச் செய்த டோனி, அந்தப் பந்துப் பரிமாற்றம் முடிந்ததும் புதிய காலுறைகள் வரவழைக்கப்படவே, அதன் பிறகு தனது காலுறைகளை வாங்கி மாட்டிக் கொண்டார். டோனியின் இந்த செயல் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. (5–ரி)

## தென்னாபிரிக்கா – பாகிஸ்தான் ஆட்டத்திலிருந்து

தென்னாபிரிக்கா – பாகிஸ்தான் அணிகள் நேற்று முனதினம் சனிக்கிழமை மோதின. இந்த ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றிருந்தது.

✶ பாகிஸ்தான் அணியைச் சேர்ந்த இடது கை வேகப் பந்துவீச்சாளர்கள் இரண்டாவது முறையாக உலகக் கிண்ணத்தில் ஒரு இன்னிங்சில் 9 இலக்குகள் கைப்பற்றி அசத்தியுள்ளனர். இதற்கு முன் இந்த சாதனை நிகழ்த்தப்பட்டதில்லை.

✶ 2013 ஆம் ஆண்டிலிருந்து இரண்டாவதாக துடுப்பெடுத்தாடிய 23 ஒருநாள் ஆட்டங்களில் தென்னாபிரிக்கா 9 வெற்றி, 14 தோல்வி கண்டுள்ளது.

✶ பாகிஸ்தான் இலக்குக் காப்பாளர் சர்பராஸ் அகமது 6 இலக்குகள் வீழ்ச்சியில் பங்களித்தார். ஒரு நாள் ஆட்டங்களில் 15 ஆவது முறையாக இந்தச் சாதனை நிகழ்த்தப்பட்டுள் ளது. உலகக் கிண்ணத்தில் இரண்டாவது முறை. முன்னதாக, ஆஸி. இலக்குக் காப் பாளர் அடம் கில்கிறிஸ்ட், 2003 இல் நமீபியாவுக்கு எதிராக இதைச் சாதித்துள்ளார். (5–ரி)

### அதிகூடிய இலக்குகள்

| | |
|---|---|
| 13 | போல்ட் (நியூஸிலாந்து) 5 ஆட்டங்கள் |
| 13 | சவுத்தி (நியூசிலாந்து) 5 ஆட்டங்கள் |
| 12 | ஸ்ரார்க் (ஆஸ்திரேலியா) 4 ஆட்டங்கள் |
| 12 | விக்டோரி (நியூசிலாந்து) 5 ஆட்டங்கள் |
| 11 | மோர்கல் (தென்னாபிரிக்கா) 5 ஆட்டங்கள் |



### அதிகூடிய ஓட்டங்கள்

| | |
|---|---|
| 372 | சங்ககாரா (இலங்கை) 5 ஆட்டங்கள் |
| 318 | வில்லியர்ஸ் (தென்னாபிரிக்கா) 5 ஆட்டங்கள் |
| 295 | அம்லா (தென்னாபிரிக்கா) 5 ஆட்டங்கள் |
| 295 | ரெயிலர் (சிம்பாப்வே) 5 ஆட்டங்கள் |
| 291 | டில்ஷான் (இலங்கை) 5 ஆட்டங்கள் |



## சங்கா சாதனை

டில்ஷான், உலகக் கிண்ண ஆட்டத்தில் ஆயிரம் ஓட்டங்களை நேற்றுக் கடந்தார். இதன் மூலம் இலங்கையின் சார்பில் ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த சனத் ஜெயசூரியா, மஹேல ஜெயவர்த்தன, குமார் சங்ககாரா ஆகியோருடன்அவரும்இணைந்து கொண்டார். (5–ரி)

## டோனியை சீண்டிய அஸ்வின்

வழமையாக 'கூல் கப்டன்' என்று அழைக்கப்படும் டோ[illegible] தீவுகளுக்கிடையிலான ஆட்டத்தில் சற்று கோபமடைந்தார். டோனி அடித்த பந்தில் அஸ்வின் தேவையில்லாமல் இரண்டாவது ஓட்டம் ஓடி வந்தபோது பந்தை பார்த்து ஓடுமாறு கோபமாக சைகையில் உணர்த்தினார். மேலும் ஓடும் போது இருவரும் ஒரே திசையில் ஓடியதால் மோதிக்கொள்ளும் சூழ்நிலையும் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து சிரித்தபடியே அஸ்வின், டோனியின் வார்த்தையை பின்பற்றினார்.(5–ரி)

# இலங்கையின் வெற்றி தவறியது

சாதனையைய தகர்க்க முடியவில்லை. 49 பந்துகளில் சதம் கடந்திருந்தால் தகர்ந்திருக்கும் சாதனை. இந்த இணையின் வேகத்தில், ஆஸி. 376 ஓட்டங்களை 9 இலக்குகளைக் கொடுத்துப் பெற்றது.

2015 உலகக் கிண்ணம்

ஆஸ்திரேலியா எதிர் இலங்கை — 64 ஓட்டங்களால் ஆஸ்திரேலியா வெற்றி — நாணயச் சுழற்சி: ஆஸ்திரேலியா

ஆஸ்திரேலியா

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| பின்ஞ் | ST சங்ககாரா B பிரசன்னா | 24 | 24 | 03 | 0 |
| வோர்ணர் | C பிரசன்னா B மலிங்க | 9 | 12 | 01 | 0 |
| சிமித் | C பெரேரா B டில்சான் | 72 | 88 | 07 | 01 |
| கிளார்க் | B மலிங்க | 68 | 68 | 06 | 0 |
| மக்ஸ்வெல் | C மலிங்க B பெரேரா | 102 | 53 | 10 | 04 |
| வற்சன் | C சந்திமால் B பெரேரா | 67 | 41 | 07 | 02 |
| பல்க்நெர் | RO மத்தியூஸ் | 0 | 01 | 0 | 0 |
| ஹெடின் | C பெரேரா B மத்தியூஸ் | 25 | 09 | 04 | 01 |
| ஜோன்சன் | ஆட்டமிழப்பில்லை | 03 | 03 | 0 | 0 |
| ஸ்ரார்க் | RO பெரேரா | 0 | 0 | 0 | 0 |
| டொக்ஹேர்ரி | ஆட்டமிழப்பில்லை | 0 | 01 | 0 | 0 |
| உதிரிகள் | | | | | 06 |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| மலிங்க | 10 | 59 | 02 | 0 |
| சேனநாயக்க | 09 | 59 | 0 | 0 |
| மத்தியூஸ் | 07 | 59 | 01 | 0 |
| பிரசன்னா | 10 | 77 | 01 | 0 |
| பெரேரா | 09 | 87 | 02 | 0 |
| டில்சான் | 05 | 33 | 01 | 0 |

TOTAL: 376/9 (50)

1 – 19 (வோர்ணர்), 2 – 41 (பின்ஞ்), 3 – 175 (கிளார்க்), 4 – 177 (சிமித்), 5 – 337 (மக்ஸ்வெல்), 6 – 338 (பல்க்நெர்), 7 – 368 (வற்சன்), 8 – 373 (ஹெடின்), 9 – 374 (ஸ்ரார்க்)

இலங்கை

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| திரிமன்னே | C ஹெடின் B ஜோன்சன் | 01 | 05 | 0 | 0 |
| டில்சான் | LBW B பல்க்நெர் | 62 | 60 | 08 | 0 |
| சங்ககார | C பின்ஞ் B பல்க்நெர் | 104 | 107 | 11 | 0 |
| ஜெயவர்த்தனா | RO கிளார்க் | 19 | 22 | 01 | 0 |
| மத்தியூஸ் | C ஹெடின் B வற்சன் | 35 | 31 | 02 | 01 |
| சந்திமால் | உபாதை – ஓய்வு | 52 | 24 | 08 | 01 |
| பெரேரா | C டொக்ஹேர்ரி B ஜோன்சன் | 08 | 03 | 02 | 0 |
| தரங்க | C வோர்னர் B பல்க்நெர் | 04 | 05 | 0 | 0 |
| பிரசன்னா | B ஸ்ரார்க் | 09 | 11 | 01 | 0 |
| செனநாயக்கா | C டொக்ஹேர்ரி B ஸ்ரார்க் | 07 | 08 | 01 | 0 |
| மலிங்க | ஆட்டமிழப்பில்லை | 0 | 02 | 0 | 0 |
| உதிரிகள் | | | | | 11 |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| ஸ்ரார்க் | 8.2 | 29 | 02 | 0 |
| ஜோன்சன் | 09 | 62 | 02 | 0 |
| வற்சன் | 07 | 71 | 01 | 0 |
| டொக்ஹேர்ரி | 07 | 71 | 01 | 0 |
| மக்ஸ்வெல் | 06 | 35 | 0 | 0 |
| பல்க்நெர் | 09 | 48 | 03 | 0 |

TOTAL: 312 (46.2)

1 – 05 (திரிமன்னே), 2 – 135 (டில்சான்), 3 – 188 (ஜெயவர்த்தனா), 4 – 201 (சங்ககார), 5 – 283 (மத்தியூஸ்), 6 – 293 (பெரேரா), 7 – 305 (பிரசன்னா), 8 – 307 (தரங்க), 9 – 312 (செனநாயக்க), சந்திமால் – உபாதை

ஆட்ட நாயகன்: மக்ஸ்வெல்


எட்ட முடியாத் இலக்கு என்று எமக்கு எதுவுமில்லை. சிங்கங்கள் இறங்கின. இங்கிலாந்துடன் 309 ஓட்டங்களை ஓர் இலக்கை இழந்து விரட்டியவர்களுக்கு, இது பரீட்சார்த்த முயற்சி. ஆனாலும் ஆரம்பத்தில் ஜோன்சனின் வேகம் அசத்த திரிமன்னே ஓர் ஓட்டத்துடன் பவிலியன் திரும்பினார். சங்கா, டில்ஷான் இணைந்தனர். ஆரம்பத்தில் அடிக்கவே முடியவில்லை. ஆஸியின் பந்துகள் சீறிப் பாய்ந்தன.

ஆறாவது பந்துப் பரிமாற்றம். தொடங்கியது டில்ஷான் வேட்டை. ஜோன்சன் வீசிய ஆறு பந்துகளும் பவுண்டரிகளாகின. தொடங்கியது இலங்கையின் அதிரடி வேட்டை. வேகமாக ஏறிச் சென்றது ஓட்டம். இருவரது இணைப்பும் இலங்கைக்கு பலமாக அமைந்தது. சிறப்பாக ஆடிய டில்ஷான் வெளியேற, மஹேல வந்தார். இரண்டு ஆட்டங்களின் பின்னர் அவருக்கு களமிறங்க வாய்ப்புக் கிடைத்தது.

மஹேல சிறப்பாக இல்லை. ஆனாலும் சங்கா விடவில்லை. தொடர்ந்து போட்டுத் தாக்கினார். அவசர ஓட்டத்துக்கு ஆசைபட்டு மஹேல வெளியேறினார். தொடர்ந்து மத்தியூஸ். சங்கா சதம் கடந்தவுடன் வெளியேறினார். சந்திமால் – மத்தியூஸ் இணைந்தது. இலங்கை இந்த இலக்கை இனி எங்கே விரட்டப் போகின்றது என்று இருந்தவர்களுக்கு, சந்திமாலின் நேற்றைய ருத்ரதாண்டவம் வயிற்றில் புளியைக் கரைத்திருக்கும்.

அடிக்கின்ற அடியில் தாளம் தப்படைகள் கிழிய வேண்டாமா என்ற வடிவேலு பாணியில், சந்திமால் நொருக்கித் தள்ளினார். மத்தியூஸ் ஒத்து ஊதி அடித்தார். இலங்கைக்கு போதாத காலம். துரதிர்ஷ்டம் சந்திமாலுக்கு வந்தது. 23 பந்துகளில் அரைச் சதம் கடந்த சந்திமால், கா[illegible] உபாதை காரணமாக வெளியேறினார். அடுத்த பந்துப் பரிமாற்றத்திலேயே மத்தியூஸ் ஆட்டமிழப்பு.

அத்துடன் ஆட்டம், ஆஸி.யின் பக்கம் மாறியது. இலங்கையால் முடியவில்லை. பின்வரிசை கைகொடுக்கவில்லை. இறுதியில் 9 இலக்குகளை இழந்து 312 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டம் முடிவுக்கு வந்தது. சந்திமால் மீண்டும் களமிறங்க முடியாததால் ஆஸி. வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. (5–ரி)



# அச்சுறுத்தலாக இருக்கின்றது இந்தியா



இந்தியாவின் துடுப்பாட்டம் ஏனைய அணிகளுக்கு அச்சுறுத்தலாக உள்ளது என்று இங்கிலாந்து அணியின் முன்னாள் அணித் தலைவர் ஜெப்ரி போய் கொட் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது: இந்த உலகக்கிண்ணம் துடுப்பாட்ட வீரர்களுக்கான தொடராக இருக்கிறது. குறைந்த தூரத்தில் பவுண்டரி எல்லை, சுழற்பந்தில் திரும்பும் தன்மை இல்லாதது, களத்தடுப்பில் கட்டுப்பாடு போன்றவை அவர்களுக்கு சாதகமாக இருக்கிறது.

இந்தியாவின் துடுப்பாட்ட வரிசை வலுவாக இருக்கிறது. அவர்கள் மிகப்பெரிய அச்சுறுத்தல் அளிப்பவர்களாக இருக்கிறார்கள். டோனிக்கு முதலில் துடுப்பாட்டம் செய்வது தான் சாதகமாக இருக்கிறது. இதனால் நாணயச் சுழற்சியில் வெற்றி பெறுவது இந்தியாவுக்கு முக்கியம். ஏனென்றால் அவர்கள் முதலில் துடுப்பாட்டம் செய்தால் மிகப் பெரிய ஓட்ட எண்ணிக்கையை எடுக்க முடியும்.

பந்துவீச்சில் முகமது ஷமி தலைமை தாங்குகிறார். மற்ற பந்து வீச்சாளர்களும் சிறப்பாக செயல்படுகிறார்கள். சரியான அளவில் வீசுகிறார்கள். பாகிஸ்தானுக்கு எதிராக நேர்த்தியாக வீசி துடுப்பாட்ட வீரர்களுக்கு நெருக்கடி கொடுத்தனர் என்று கூறியுள்ளார். (5-ரி)

# கங்குலியை வீழ்த்திய டோனி



சர்வதேச ஒருநாள் ஆட்டங்களில் வெளிநாட்டு மண்ணில் இந்திய அணிக்கு அதிக வெற்றிகளை தேடித் தந்த அணித் தலைவர் என்ற பெருமையை டோனி பெற்றுள்ளார். உலகக் கிண்ணத் தொடரில் கலக்கி வரும் இந்தியா, மேற்கிந்திய தீவுகளை வீழ்த்தியதன் மூலம் தொடர்ச்சியாக 4 வெற்றிகளைக் குவித்துள்ளது. அதைத் தொடர்ந்து 8 புள்ளிகளுடன் உள்ள இந்திய காலிறுதிக்குள் நுழைந்தது. மேலும் கடந்த உலகக் கிண்ணத்தில் வென்ற 4 ஆட்டங்களையும் சேர்த்து உலகக்கிண்ணத்தில் தொடர்ச்சியாக 8 வெற்றிகளைப் பதிவு செய்துள்ளது. உலகக் கிண்ணத்தில் இந்தியா தொடர்ச்சியாக 8 வெற்றிகளைப் பதிவு செய்திருப்பது இரண்டாவது முறையாகும். இதற்கு முன்னர் 2003 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தில் இந்தியா தொடர்ச்சியாக 8 வெற்றிகளைப் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. லீக் ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகளை வீழ்த்தியதன் மூலம் வெளிநாட்டு மண்ணில் நடைபெற்ற ஒரு நாள் தொடரில் இந்தியாவுக்கு வெற்றிகளைப் பெற்றுத் தந்த அணித்தலைவர் வரிசையில் கங்குலியின் சாதனையை முறியடித்துள்ளார் டோனி. டோனியின் தலைமையில் இந்திய அணி 59 வெற்றிகளைப் பெற்றுள்ளது. முன்னதாக கங்குலி தலைமையிலான இந்திய அணி 58 வெற்றிகளைப் பெற்றதே சாதனையாக இருந்தது. (5-ரி)


Tilko Jaffna City Hotel



TILKO JAFFNA CITY HOTEL

- LUXURIOUS ROOMS
- SWIMING POOL
- RESTAURANT
- BANQUET HALL
- GYM & SPA
- CONFERANCE HALL
- FREE WIFI

70/6, K.K.S. Road, Jaffna. Sri Lanka. Tel: 021 222 5969, Fax: 021 222 7291


## தினம் ஒரு பரிசுப் போட்டி 23

ஸ்கொட்லாந்து- இலங்கை அணிகளுக்கிடையில் நாளை மறுதினம் (11.03.2015) நடைபெறும் ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி எது?

.........................................................

பெயர் : ..............................................

தே.அ.இல. : ..............................................

முகவரி : ..............................................

..............................................

தொலைபேசி இல.: ..............................

இந்தக் கேள்விக்கான விடையை இதே கூப்பனில் எழுதி நாளை (10.03.2015) மாலை 6 மணிக்கு முன், 'தினமொரு பரிசு', உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபாலிலோ, உதயன் அலுவலகத்திலோ அல்லது எம்மால் அனுமதியளிக்கப்பட்ட இடங்களில் வைக்கப்பட்டுள்ள இதற்கான பெட்டியலோ சேர்க்கலாம்.

தினமும் 2,500/= இருவருக்கு

## பரிசுப் போட்டி

நடப்பு உலகக் கிண்ணத்தின் தொடர் நாயகன் யார்?

......................

நடப்பு உலகக் கிண்ணத்தின் இறுதி ஆட்டத்தின் ஆட்ட நாயகன் யார்?

............................

பெயர்: ......................

தே.அ.அ.இல. ......................

முகவரி. ......................

தொலைபேசி ......................

போட்டி முடிவுத் திகதி 26.03.2015

தலா 10,000/= 45 பேருக்கு

### போட்டி விதிகள்

- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- போட்டோ பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா.
- தே.அ.அட்டை பெறும் வயதுக்கு குறைந்தவர்கள், பெற்றோரின் தே.அ.அட்டை இலக்கத்தை குறிப்பிட முடியும்.

## BCAS CAMPUS JAFFNA — 5 லட்சம் ரூபாவுக்கான பரிசுக் கூப்பன்

### மாபெரும் இறுதிப் பரிசுப் போட்டி

நடப்பு உலகக் கிண்ணத்தை வெல்லும் அணி எது?

......................

பெயர்: ......................

தே.அ.அ.இல. ......................

முகவரி. ......................

......................

தொலைபேசி

......................

போட்டி முடிவுத் திகதி 23.03.2015

1 ஆம் பரிசு 2 1/2 லட்சம் பணப்பரிசு

2 ஆம் பரிசு 1 1/2 லட்சம் பணப்பரிசு

3 ஆம் பரிசு 1 லட்சம் பணப்பரிசு

தலா 5,000/= 10 பேருக்கு

## அரையிறுதிப் பரிசுப் போட்டி

அரையிறுதிக்கு தகுதி பெறும் அணிகள் எவை?

1)...................... 2)......................

3)...................... 4)......................

பெயர்: ......................

தே.அ.அ.இல. ......................

முகவரி. ......................

தொலைபேசி ......................

போட்டி முடிவுத் திகதி 17.03.2015

தலா 5,000/= 20 பேருக்கு


நியூ மைதிலி ஜுவலர்ஸ்

யாழ் மண்ணில் தன்னிகரில்லாதலைமை நிறுவனம்

தொ.பே: 021 221 7878/ 021 221 7878

E-mail: newmaithily@gmail.com

இல. 38,40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


**லக்கி பான்சி கவுஸ்** இருபாலைச்சந்தி, கோப்பாய்.
**மொடோன்** பஸ்நிலையம் வீதி,நெல்லியடி.
**கவிதா** 350ஏ பிரதான வீதி,பருத்தித்துறை.
**கனன் போட்டோ** 165 பிரதான வீதி.பருத்தித்துறை.
**சூரியா பாமசி** புதிய சந்தை,அச்சுவேலி.
**நகுலன்** 85 பருத்தித்துறை வீதி நல்லூர்.
**தாட்சாயினி ஸ்ரோர்ஸ்** 3ஆம் சந்தி கெருடாவில்.
**தர்மலிங்கம்** கோவில் ஒழுங்கை உடுப்பிட்டி.
**கலைச்சோலை** இல 3 நவீன சந்தை வல்வெட்டித்துறை
**அஞ்சலோ புக் சொப்** ஆஸ்பத்திரி வீதி ஊர்காவற்றுறை.
**மாவடி ஸ்ரீ முருகன்** மூளாய் வீதி வட்டுக்கோட்டை.
**தயாளன் ஸ்ரோர்ஸ்** பலாலி,வீதி,கோண்டாவில்.
**சிவசக்தி ஸ்ரோஸ்** உரும்பிராய் மேற்கு, சிவகுலவீதி,
**சிவன் ஸ்ரோர்ஸ்** பரமேஸ்வரா சந்தி,திருநெல்வேலி.
**தாஸ் ஸ்ரோர்ஸ்** திருநெல்வேலி.
**ஓம் கணேசா** இல1, புகையிரத வீதி, கொக்குவில் கிழக்கு.
**பேரின்பநாதன்** 103,வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
**பூபாலசிங்கம் புத்தகசாலை** 41. வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
**திருநீலகண்டன் ஸ்ரோர்ஸ்** 14. விதானையார் வீதி சுண்டுக்குளி.
**சுரேஸ் ஸ்ரோர்ஸ்** இல. 376 பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
**அன்ரனீஸ் ஸ்ரோர்ஸ்** 19 புதுமை மாதா கோவில் கிழக்கு.
**சிவானந்தா கபே** செட்டி தெரு நல்லூர்.
**ஸ்ரீமுருகன் ஸ்ரோர்ஸ்** சித்தங்கேணி வீதி, பண்டத்தரிப்பு.
**புஸ்பநாதன்** பிரதான வீதி, சங்கானை
**சுசிலா தேவி அச்சகம்** சித்தங்கேணிச்சந்தி, சித்தங்கேணி
**வானம்பாடி புத்தக நிலையம்** பிரதான வீதி சுழிபுரம்.
**குலம் ஸ்ரோர்ஸ்** சந்தையடி மானிப்பாய்.
**துர்க்கா புத்தகசாலை** பஸ் நிலையம் சுன்னாகம்.
**கிருபா போட்டோ** கே.கே.எஸ் .வீதி மல்லாகம்.
**பாக்கியா** கொக்குவில்.
**சிறிராம்** கைதடி சந்தி.
**பரம்ஸ்** நவீன சந்தை சாவகச்சேரி.
**மணியம்** ஏ–9 வீதி சாவகச்சேரி.
**அருள்நாயகி** ஏ –9 வீதி கொடிகாமம்.
**கஜானன்** அல்லாரை வீதி, மீசாலை சந்தி.
**அன்பரசன் புத்தகசாலை** வித்தியாபுரம் ஒட்டுசுட்டான்.
**உயர்ச்சி புத்தகசாலை** மல்லாவி.
**கோமதி நெற்கபே** வெற்றிலைக்கேணி.
**கே.பி.கே.புத்தகசாலை** 24, பஸ் நிலையம் வவுனியா.
**வன்னி பேபி நீட்ஸ்** 55 ஏ மன்னார் வீதி குருமன்காடு வவுனியா.
**சோமசுந்தரம்** ஏ – 9 வீதி மாங்குளம்.
**மோகன்** பளை.
**நகுலேந்திரன்** 31ஆம் கட்டை முழங்காவில்.
**ஜோதி புக்சொப்** பெரிய கடை மன்னார்.
**சிவசாந்தி உணவகம்** தாழ்வுப்பாடு வீதி மன்னார்.
**நிரஞ்சனா** தலைமன்னார்.
**பூநகரி(எம்.பி.சி.எஸ்)** பூநகரி.
**டிலசிகா** 124 கட்சன் வீதி வட்டக்கச்சி.
**மகிழன் களஞ்சியம்** தர்மபுரம்.
**பொதிகை புக்சொப்** 2 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு.
**தாயன்பு** உடையார் கட்டு.
**சஜி புக் சொப்'** விசுவமடு.
**வரணா புக்சொப்** 755 கனகராசா வீதி திருநகர் கிளிநொச்சி.
**வவிசனா புக் சொப்** குமரபுரம் பரந்தன்.
**ராஜா தேநீரகம்** உருத்திரபுரம்
**அபி புத்தகசாலை** பிரதான வீதி முல்லைத்தீவு.
**ஸ்ரீ கருணா மல்ரி சொப்** வரணி.
**விநாயகர் களஞ்சியம்** அளவெட்டி.
**சிவலிங்கம் ஸ்ரோர்ஸ்** வியாபாரி மூலை.
**குகன் ஸ்ரோர்ஸ்,** நவாலி.
**நாகமுத்து ஸ்ரோர்ஸ்** காரைநகர்.

பரிசுக் கூப்பன்களை எமது முகவர்களிடம் வைக்கப்பட்டுள்ள அதற்கான பெட்டியில் சேர்க்கலாம்

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



தருபவர்: வித்யா

**மேடம்:** குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் குறையும். விருந்தினர் வருகை இருக்கும். தந்தை வழி உறவினர்களுடன் இருந்து வந்த மனக்கசப்புகள் மறையும். தாய் மாமன் வழியில் அனுகூலம் உண்டாகும்.

**இடபம்:** எந்த ஒரு முடிவையும் எடுக்கும்போது ஒரு முறைக்கு பலமுறை யோசிப்பதுநல்லது. மற்றவர்களிடம் பகைமை பாராட்டுவதை தவிர்ப்பது நல்லது.

**மிதுனம்:** கடன் விவகாரங்கள் கட்டுக்குள் இருக்கும். வீண் அலைச்சலை சந்திக்க வேண்டி இருக்கும். வருமானம் அதிகரிக்கும். இனிமையான வார்த்தைகளால் சிக்கலான காரியத்தை கூட எளிதாகச் செய்து முடிப்பீர்கள்.

**கடகம்:** கோபமாகப் பேசுவதைத் தவிர்ப்பது நல்லது. மேல்மட்டத்தில் உள்ளவர்களுடன் வாக்குவாதங்கள் ஏற்படலாம். மற்றவர்களின் கருத்துக்களை ஏற்றுக் கொள்ள முடியாத நிலை உண்டாகி அவர்களுடன் பகை ஏற்படலாம்.

**சிங்கம்:** சாமர்த்தியமாக எதையும் சமாளிக்கும் துணிச்சல் வரும். எதிர்ப்புகள் குறையும். குழந்தைகளின் கல்வி தொடர்பான விடயங்களில் முடிவு எடுக்கும் போது தீர ஆலோசித்து செயற்படுவது நல்லது.

**கன்னி:** பயணங்கள் செல்ல வேண்டி இருக்கும். தொழில் வியாபாரம் தொடர்பான சில முக்கிய முடிவுகள் எடுக்க நேரிடும். புதிய தொழில் தொடங்க ஆலோசனைகளைப் பெறுவீர்கள்.

**துலாம்:** உத்தியோகத்தில் இருப்பவர்கள் சக ஊழியர்களுடன் கவனமாகப் பழகுவது நல்லது. அடுத்தவரின் உதவி கிடைக்கும். புதிய பொறுப்புக்கள் ஏற்க வேண்டி இருக்கும். செயற்றிறன் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** மேலிடத்திடம் இருந்து வந்த கசப்புணர்வு மாறும். இடமாற்றம் சாத்தியமாகும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். குடும்பத்தில் திடீர் பிரச்சினை தலை தூக்கும்.

**தனுசு:** சிக்கலான பிரச்சினைகளையும் வெற்றிகரமாக கையாளும் திறன் உங்களுக்கு வந்து சேரும். சுப நிகழ்ச்சிகள் வீட்டில் நடைபெறுவதற்கு இருந்து வந்த தடைகள் அனைத்தும் விலகும்.

**மகரம்:** உறவினர்கள், நண்பர்களிடம் கவனமாகப் பழகுவது நல்லது. பெண்களுக்கு அனுபவபூர்வமான அறிவைக்கொண்டு எதையும் சாதிப்பீர்கள். வீண்வாக்கு வாதங்களைத் தவிர்ப்பது நன்மை தரும்.

**கும்பம்:** சமையல் செய்யும் போதும், வெளியில் செல்லும் போதும் கவனம் தேவை. வாக்கு வாதத்தைத் தவிர்ப்பது நல்லது. சக ஊழியர்களிடம் அனுசரித்துப் போவது நன்மைதரும்.

**மீனம்:** அதிக மதிநுட்பத்துடன் நடந்து கொள்வீர்கள். செயல்களில் எதிர்பார்த்த நன்மை முழு அளவில் கிடைக்கும். தொழில், வியாபாரம் செழிக்க, அனுகூலக் காரணி பலன் பெறும். உபரி பணவருமானம் வந்து சேரும்.



# 81 வயதிலும் 'ஸ்ரோங்'

வயோதிப காலத்தில் பற்களை இழந்து, நாளாந்த உணவைக் கூட மென்று உண்ண முடியாத நிலையில் பலரும் அவதியுற்று வருகின்றனர். ஆனால், சீனாவைச் சேர்ந்த 81 வயது பெண்மணியொருவர், தனது பற்களை மட்டும் பயன்படுத்தி காரொன்றை இழுத்துச் சாதனை படைத்துள்ளார்.

வாங் ஸியவோபேயி என்ற பெண்ணே இவ்வாறு பற்களைப் பயன்படுத்தி காரை 2 மீற்றர் தூரத்துக்கு இழுத்து சாதனை படைத்துள்ளார். அவர் மேற்படி சாதனை நிறைவேற்றத்துக்கு 38 செக்கன்களை மட்டுமே செலவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்தச் சாதனை தொடர்பில் விவரிக்கையில், நான் ஆரோக்கியமான உடலையும் ஆரோக்கியமான மனதையும் கொண்டுள்ளேன். அந்த வகையில் இளமையில் நான் இருந்ததற்கும் தற்போது நான் இருப்பதற்கும் வேறுபாட்டை உணரவில்லை, என்று தெரிவித்துள்ளார்.

# மங்கள்யானின் அற்புதப் படங்கள்

செவ்வாய்க் கிரக ஆராய்ச்சிக்காக இந்தியாவின் இஸ்ரோ அனுப்பிய மங்கள்யான் விண்கலத்தில் உள்ள கமரா (எம்.சி.சி.) சில அற்புதமான ஒளிப்படங்களை எடுத்து அனுப்பியுள்ளது. அவற்றில், வடதுருவப் பகுதியில் வீசும் புழுதி புயல் மற்றும் வேலஸ் மெரினர்ஸ் பள்ளத்தாக்கு (இதன் நீளம் 4 ஆயிரம் கி.மீ, அகலம் 200 கி.மீ, ஆழம் 23 ஆயிரம் அடி)






# டாடி எனக்கு ஒரு டவுட்டு

***கிரிக்கெட்டில் எங்கள் எல்லோரையும் ஏமாத்துறாங்க...***

1. கையில Ball ஐ வைச்சுகிட்டே, No Ball என்று சொல்லுவாங்க...
2. ஒரு Over க்கு ஆறு Ball–என்று சொல்வாங்க, ஆனா ஒரு Ball தான் இருக்கும்.
3. All Out என்று சொல்லுவாங்க, ஆனால் 10 பேர் தான் Out ஆகி இருப்பாங்க்.
4. நடுவர் ஒரு கையை தூக்கினா, ஒரு Batsman அவுட், இரண்டு கையையும் தூக்கினா Six. (லொஜிக் இடிக்குதே..!!)
5. Goal Keeper என்றா கோல் விழாம தடுக்கணும். அப்ப, Wicket Keeper விக்கெட் விழாம தடுக்கணும் தானே...! ஆனால் அவரே ஏன் நுற்மி பண்ணுறாரு..?
6. சில ஓவர் மட்டும் Powerplay என்று சொல்றாங்களே. அப்போ, மீதி ஓவர் எல்லாம் பவர் இல்லாம இருட்டிலயா விளையாடுறாங்க?
7. ஒருத்தரை மட்டும் Night Watchman என்று சொல்வாங்க. ஆனால் அவரும் மட்ச் முடிஞ்ச Ground ஐ காவல் காக்காம அறைக்குள் தூங்கப் போயிடுவாரு.
8. Tea Breakஎன்று சொல்வாங்க, ஆனா கூல் ட்ரிங்க்ஸ் தான் குடிப்பாங்க.
9. என்னதான் எல்லா பக்கமும் Light எரிஞ்சாலும், ஒரு பக்கத்தை மட்டும் OFF Side என்று தான் சொல்வாங்க..
10. ஆட்டம் முடிந்த உடனே ஒருத்தரை மட்டும் தான் Man of the Match என்று சொல்லுறாங்க, அப்ப மீதி பேரெல்லாம் Women ஆ..?

**சொல்லுங்கள்... டாடி சொல்லுங்கள்...**




# சம்பளத்தைக் குறைத்தார் அனுஷ்கா

தென்னிந்திய நடிகைகளில் அதிக சம்பளம் வாங்குபவர்களில் முதலிடத்தில் இருப்பவர் அனுஷ்கா. 7 கோடி ரூபா அவர் பெறுவதாக கூறப்படுகிறது.

ஏற்கனவே ஆர்யாவுடன் சேர்ந்து 'இரண்டாம் உலகம்' படத்தில் அனுஷ்கா நடித்திருந்தார். செல்வராகவன் இயக்கத்தில் தமிழ், தெலுங்கில் உருவான இந்தப் படம் இரு மொழிகளிலும் தோல்வியைத் தழுவியது. இதனால் பட தயாரிப்பு நிறுவனம் பாதிக்கப்பட்டது. தோல்வியிலிருந்து மீளும் முயற்சியில் ஈடுபட்டு வரும் அந்த நிறுவனம் தெலுங்கு புதிய படத்தை தயாரிக்க முடிவு செய்துள்ளது. இந்தப் படத்தில் நடிக்க ஆர்யா, அனுஷ்காவை அணுகியபோது இருவருமே வெவ்வேறு படங்களில் அவசரமாக இருந்தபோதும் நடிக்க சம்மதித்துள்ளார்கள்.

ஏற்கனவே ஏற்பட்ட பண ரீதியான இழப்பிலிருந்து அந்த நிறுவனம் மீள வேண்டும் என்ற எண்ணத்துடன் ஆர்யா, அனுஷ்கா இருவரும் புதிய படத்தில் நடிக்க தங்களது சம்பளத்தை குறைத்துக் கொண்டுள்ளார்கள்.



தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையின் இரத்த வங்கிக்கு மருந்துப் பொருள்கள் விற்பனைப் பிரதிநிதிகள் சுமார் இருபத்தைந்துக்கும் மேற்பட்டவர்கள் ஒன்றிணைந்து குருதிக்கொடை வழங்கியுள்ளார்கள்.
கடந்த ஞாயிற்றுக்கிழமை மருத்துவமனைக்குச் சென்ற அவர்கள் குருதிக்கொடை வழங்கியுள்ளதாக இரத்த வங்கியின் பொறுப்பதிகாரி மருத்துவ கலாநிதி பிரதீபன் தெரிவித்துள்ளார். (வ)

## நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், மார்ச் 9
இலங்கை மத்திய வங்கியும் தொழிற் திணைக்களமும் இணைந்து யாழ்ப்பாணத்தில் நடத்தும் நடமாடும் சேவையும் விழிப்புணர்வுக்கருத்தரங்கும் இன்று திங்கட்கிழமை நடை பெறவுள்ளது.
சிவன் பண்ணை வீதியில் அமைந்துள்ள தொழில் திணைக் களத்தில் இன்று காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.15 மணிவரை நடைபெறவுள்ள நடமாடு சேவையில் ஊழியர் சேமலாப நிதி அங்கத்தவர்கள் கலந்து கொண்டும் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைப் பெற்றுக் கொள்ள முடியும். (வ)

# நாடாளுமன்றில் பெண்களுக்கு இடம் வழங்கப்படல் வேண்டும்

## பெண்களுக்கான வலுவூட்டலுக்கும் அபிவிருத்திக்குமான அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கருத்து

யாழ்ப்பாணம், மார்ச் 9
ஏனைய நாடுகளின் நாடாளுமன்றத்தில் பெண்களுக்கு இடம் வழங்கப்படுவதைப்போல, இலங்கை நாடாளுமன்றத்திலும் பெண்களுக்கு இடம் வழங்கப்பட்டால் மாத்திரமே சனத்தொகையில் 52 வீதமான பெண்களின் பங்களிப்பு அரசியலில் காணப்படும்.
பெண்கள் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதுக்கு நாடாளுமன்றங்களிலும் மாகாண சபைகளிலும் பெண்களின் பிரதிநிதித்துவம் அவசியம் காணப்பட வேண்டும் என்று காத்தான்குடி நகர சபை உறுப்பினரும், பெண்களுக்கான வலுவூட்டலுக்கும் அபிவிருத்திக்குமான அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளருமான சல்மா ஹம்சா தெரிவித்தார்.
சர்வதேச மகளிர் தினத்தையொட்டி யாழ்பாணத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற செயலமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அங்கு அவர் தொடர்ந்து உரை யாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:-
இலங்கையிலும் சர்வதேசத் திலும் பெண்களுக்கான உரி மைகள் சட்டமாக்கப்பட்ட போதிலும், அதனை அனுப விப்பது குறைவாகவே காணப்படுகின்றன. பெண்கள் சமூக, பொருளாதார, அரசியல், கலாசார ரீதியாக சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.
சமூக மட்டத்தில் பால் நிலைப் பாகுபாடு மிகவும் பெரியளவில் பங்கு வகிக்கின்றது. அந்த வகையில் பெண்களுக்கு அரசியலில் ஒதுக்கப்படும் கோட்டா முறை ஆசிய நாடுகளிலேயே இலங்கையில் இல்லை. ஆனால் பெரும்பாலான நாடுகளில் இந்தத் திட்டம் நடைமுறையில் இருக்கிறது.
இதில் ஒன்று, பொருளாதார ரீதியாக பெண்கள் தகுதியற்ற சில இடங்களில் கூடிய நேரம் வேலை செய்து குறைந்த வருமானத்தைப் பெறக் கூடியவர்களாக இருக்கின்றனர்.
அவர்களுக்குத் தகுதியான வேலைகள் வழங்கப்படுவ தில்லை. இவ்வாறான பாரபட்சம் பெண்களுக்கு பொருளாதார ரீதியாகக் காணப்படுகிறது.
மதங்களுக்கிடையே சொத்து உரிமை போன்றவை காணப்பட்டாலும், பெண்கள் அரசிய லுக்குச் செல்லும் போது பணம் அதிகமாகத் தேவைப்படுகிறது.
அரசியல் என்றால் வன்முறை என்ற பிழையான நோக்கங்களினால் பெண்கள் அரசியலுக்கு வருவதற்கான ஊக்கம் குறைவாகவே காணப்படுகின்றது.
நாடாளுமன்றத்திலும் மாகாண சபைகளிலும் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த எந்த ஒரு பெண்மணியும் காணப்படுவதில்லை. உள்ளூராட்சி மன்றங்களில் சிலரைக் காணக் கூடியதாக இருக்கிறது. இருப்பினும் தமிழ் பெண்கள் மிக அரிதாகவே இந்தச்சபையில் காணப்படுகின்றனர்.
பெண்கள் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதுக்கு நாடாளுமன்றங்களிலும் மாகாண சபைகளிலும் பெண்களின் பிரதிநிதித்துவம் கட்டாயம் காணப்பட வேண்டும்– என்று அவர் தெரிவித்தார். (வ)

# குடாநாட்டில் நடைபெற்ற குணமாக்கல் வழிபாடு



யாழ்ப்பாணம், மார்ச் 9
தென்னிந்தியா சாளக்குடி டிவைன் தியான இல்லத்தினரின் தவக்கால தியானங்களும் குணமாக்கல் வழிபாடுகளும் யாழ்.குடாநாட்டின் பல இடங்களிலும் கடந்த 3 வாரங்களாக நடைபெற்றன.
கடந்த வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் யாழ்.அடைக்கல அன்னை ஆலயத்தில் இடம்பெற்ற தியான வழிபாடுகளில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.
அருட்தந்தை ச.அன்புராசா அடிகள், சகோ.ஜோஸ் சஜ் ஆகியோர் வழி பாடுகளை நடத்தினர்.
அடைக்கல அன்னை ஆலயத் தில் இடம்பெற்ற வழிபாடுகளில் யாழ். மாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை, குரு முதல்வர் ஜஸ்ரின் ஞானப் பிரகாசம் அடிகள் ஆகியோரும் பொது மக்களுடன் இணைந்திருந்து திருப்ப லியை ஒப்புக்கொடுத்தனர். (வ–135)





பாராட்டி வாழ்த்துகின்றோம்
பண்ணாலை தெல்லிப்பழை வரத்தலம் கற்பக விநாயகர் ஆதீன கர்த்தாவும் பிரதம அர்ச்சகருமாகிய பிரம்மஸ்ரீ ம. மகேந்திரசர்மா பிரம்மஸ்ரீ ம. வரலக்ஷ்மி அம்மா தம்பதியின் கனிஷ்ட புத்திரன் சிரஞ்சீவி சஞ்சுதசர்மா அவர்களின் யஞ்ஞோபவீத தாரண ப்ரம்மோபதேச உபநயனச்சடங்கு சிறப்புற வாழ்த்துகின்றோம்.
சிவநெறியும் தவநெறியும் சீருடன்
சிவபூசனை ஆற்றியே சிவம் பலபெற
சிவப்பொலிவு பெற்றிடு அந்தணர் பரம்பரையில்
சிரஞ்சீவியாய் உபநயனம் பெறும் சஞ்சீவனே வாழி வாழி
வரத்தலம் கற்பக கணபதியின் கருணையே
வரம்பல தந்திட வேதாகம மந்திரம்
வரம் பெல்லையிலாது காலந்தோறும் பூசனையும்
வாழ்வும் தந்திட உபநயனம் பெற்றிடும் சஞ்சுவே வாழி
வாழ்க அந்தணர் வானவர் ஆ இனம்
என்னும் சம்பந்த வாசகமாய் சம்பந்தனாய்
சிவப் பொலிவுடன் என்றும் பிள்ளையாரின்
பிள்ளையாய் என்றும் வேதிய வேந்தனாய் வாழ்க
வளமுற வாழி வாழி.
உளம் கனிந்த வாழ்த்துக்கள்
நிர்வாக சபையினர்
சிவனடியார் தொண்டர் மடாலயம்.



பேராயர் கலாநிதி
S. ஜெபநேசன் அவர்களின்
பவளவிழாவும்
சிறப்புநூல் வெளியீடும்
காலம்: 11.03.2015 புதன்கிழமை
நேரம்: பி.ப 3.30 மணி
இடம்: சென். ஜோன்ஸ் கல்லூரி மண்டபம் (சுண்டுக்குளி)
அகவை வழிபாடு
தலைவர்
அருட்பணி. சுப்பிரமணியம் மனோபவன் (அவுஸ்திரேலியா)
அருளுரை
அதி.வண. கலாநிதி. இராயப்பு யோசப் (ஆண்டகை, மன்னார் மறை மாவட்டம்)
பகிரங்க கூட்டம் நடத்துநர்
செந்தமிழ்ச் சொல்லருவி. எஸ். லலீசன் (முனை அதிபர், ஆசிரியர் கலாசாலை கோப்பாய்)
வாழ்த்துரை
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் (குரு முதல்வர், நல்லை ஆதீனம்)
பேராசிரியர் S. சிவாஜிலிங்கராஜா
அருட்பணி S.P. நேசகுமார் (குருமுதல்வர், இலங்கைத் திருச்சபை நுவரெலியா)
ஏற்புரை
விழா நாயகன்
தங்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
விழா ஏற்பாட்டுக் குழுவினர்.

09.03.2015
முதலாவது பிறந்தநாள் வாழ்த்து
செல்வன் துஷ்யந்தன் ஹரிப்புருஷோத்





இன்று (09.03.2015) திங்கட்கிழமை தனது முதலாவது பிறந்தநாளை தனது இல்லத்தில் வெகுசிறப்பாகக் கொண்டாடுகிறார்.
இவர் சகல கலைகளையும் கற்று செல்வச் செழிப்புடன் பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ வாழ்த்துகிறோம்.
ஆசியுடன் வாழ்த்தும்
அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, லண்டன் தாத்தாமார், லண்டன் மாமா, பெரியம்மா குடும்பம், கனடாச்சித்தி குடும்பம், குட்டிச்சித்தி குடும்பம், அத்தைகுடும்பம், சின்னத்தாத்தா குடும்பம்.
வேலப்பர் வீதி, அரியாலை.

## விழி நீர் சொரிகின்றோம்



தேசிய கல்வி நிறுவக யாழ்.பிராந்திய நிலைய
கல்வி முதுமாணி (இரண்டாம் அணி)
ஆசிரிய மாணவன் க.கமலதாசன்
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி **இராசமணி சுப்பிரமணியம்**
அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆன்மா இறையடியைச் சென்று சேரவும் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!

இணைப்பாளர், விரிவுரையாளர்கள், ஆசிரியமாணவர்கள்.
2 ஆம் அணி
**தேசிய கல்வி நிறுவக யாழ்.பிராந்திய நிலையம்**
(57627) (4.3.7)

## மெய்வன்மைப் போட்டி

தென்மராட்சி, மார்ச் 9

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடை பெறும்.

அதிபர் நா.கணேசபாலேந்திரன் தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தனும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) வே.பாலசுப் பிரமணியமும், கௌரவ விருந்தினராக வித்தியாலய ஓய்வு நிலை அதிபர் வே.கந்தசாமியும் கலந்து கொள்வர். (வ-9)

## கரைச்சி பிரதேச செயலக பண்பாட்டு விழா நாளை

கிளிநொச்சி, மார்ச் 9

கரைச்சி பிரதேச செயலகப் பிரிவின் வருடாந்தப் பண்பாட்டு விழா நாளை செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2 மணிக்கு பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் தலைமையில் கூட்டுறவு மண்டபத்தில் நடை பெற உள்ளது.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தி னராக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் கலந்து கொள் வதுடன் சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி பொறியியல் பீட பீடாதிபதி கலாநிதி அ.அற்புதராஜா, விவசாயபீட பீடாதிபதி திருமதி சிவமதி சிவச்சந்திரன், கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் ப.ஜெயராஜா, கலாநிதி ஆறு.திருமுருகன், கிளிநொச்சி மாவட்ட செயல கத்தின் உதவி மாவட்ட செய லாளர் ச.கிருஸ்ணேந்திரன், கிளிநொச்சி உதவி தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.சி.அமலராஜா ஆகியோர் கலந்து கொள்ள வுள்ளனர். நிகழ்வில் 'கரைஎழில் 2014' நூலின் வெளி யீட்டுரையை காவேரி கலாமன்ற இயக்கு நர் கலாநிதி ரி.எஸ்.ஜோசுவா நிகழ்த்த ஆய்வுரையை மாவட்டச் செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் நிகழ்த்தவுள்ளார்.

கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் கலை பண்பாட்டுக்கு உயர் சேவையாற்றிய பெரு மக்கள் கரைஎழில், உயர் கரை எழில் ஆகிய விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப் பட வுள்ளனர்.

கலாநிதி ஆறு திருமுருகனின் கலாசார விழுமியங்களைப் பாதுகாத்தல் எனும் தலைப்பில் சிறப்புரையும் நடைபெற வுள்ளது.

கௌரவிப்பு நிகழ்வில் இறுவட்டு ஒலி நாடா கௌரவம், இசையமைப் பாளர்கள் கௌரவம், வாத்தியக் கலைஞர்கள் கௌரவம், பாடலாசிரியர்கள் கௌர வம்,பாடகர்கள் கௌரவம் ஆகியவை இடம்பெறும்.

பண்டிதர் பரந்தாமனார் கவின் கலைக் கல்லூரியினரின் நாட்டிய நாடகம், கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவர்களின் புத்தாக்க நடனம், மகாதேவ ஆச்சிரம சைவச் சிறுவர் கவின்கலைமன்றத்தின் கோவலன் கண்ணகி நாடகம் ஆகிய கலை நிகழ்வுகளும் நடை பெறவுள்ளன.

தேசிய கலை இலக்கியப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (வ)

## ஓய்வூதியருக்கு கடன்

தென்மராட்சி,மார்ச் 9

தென்மராட்சி பிரதேச ஓய்வூதியர்களுக்கு தேசிய சேமிப்பு வங்கியின் கொடிகாமக் கிளையினர் கடன் வழங்கவுள்ளனர்.

67 வயதுக்கு உட்பட்ட ஓய்வூதியர்கள் 5 லட்சம் ரூபா வரை கடன் பெறமுடியுமென கிளை முகாமையாளர் அறிவித்துள்ளார். (வ-9)

## 13 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **கணபதிப்பிள்ளை கோவிந்தசாமி**
(இந்திரன் அம்மன் கோவிலடி, துன்னாலை,கரவெட்டி)

அன்னை மடியில்
21.12.1933

ஆண்டவன் அடியில்
09.03.2002

தந்தை மகற்காற்றும் உதவி
அவையத்துள் முந்தி இருக்கச் செயல்
என்ற பொய்யா மொழியான் கூற்றை
உமதாக்கி உங்களை உருக்கி
எம்மை எல்லாம் ஆளாக்கினீர்களே!!!
எங்கே போய்த் தேடுவோம் ஐயா!
உங்கள் கனிவான முகத்தையும்,
இதமான வார்த்தைகளையும்....
ஆண்டுகள் பதின்மூன்று கடந்தாலும்
என்றும் எம் இதயத்தில் வாழும் அப்பாவுக்கு
எமது அஞ்சலிகள்

உங்கள் கொள்கைகளை
மனதில் இருத்தி உங்கள் வழியில்
வாழும் உங்கள்
குடும்பத்தினர்.

இல. 335/21, மன்னார் வீதி,
வேப்பங்குளம் வவுனியா.

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை திருமதி கஜேந்தினி கமலதாசன் அவர்களது பாசமிகு மாமியார் திருமதி **இராசமணி சுப்பிரமணியம்** அவர்கள் 06.03.2015 வெள்ளிக்கிழமை இறைபதமடைந்த செய்திகேட்டு ஆழ்ந்த அனுதாபத்தினை அவரது குடும்பத்தினருக்குத் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
**யா/ இணுவில் மத்திய கல்லூரி**
(57611)(5.3.7)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி. **இவாஞ்சலின் ஞானப் பொன்ராஜா**
அவர்களின் பாசமிகு தாயார்
திருமதி . **புனிதம் மேர்சி அழகரட்ணம் செல்லத்துரை**
அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

ஆசிரியர் நலன்புரிக்கழகம் (57631)(5.3.7)
**யா/ கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்**

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **பொன்னம்பலம் பத்மராசா** (சின்னண்ணை)

திதி:-சங்கடஹர சதுர்த்தி
பங்குனி 9ஆம் திகதி திங்கட்கிழமை

தோற்றம் 12.12.1950
மறைவு 25.02.2008

அன்புக்கடலே! சங்கடங்களைத் தீர்த்து
நல்வழி காட்டிய நீங்கள் சங்கடஹர சதுர்த்தி திதியில் இறையடி
சேர்ந்தீர் உங்களை நினைக்க கண்ணீர் ஆறாக ஓடுகிறது
இறைவனின் விளையாட்டில் தோற்று சோர்வோடு வாழ்கின்றோம்.
ஆண்டவனின் அடியில் இருந்து நல்வழி காட்டுங்கள்.
உங்கள் ஆத்மசாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்.
உங்களைப்போன்ற திறன் உடையோரை
எப்பிறப்பில் காண்போம்

நெட்டிலிப்பாய்,
கோண்டாவில் கிழக்கு. (57624)(3.7.8)

குடும்பத்தினர், சகோதரர்கள்

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 16.06.1948
உதிர்வு 01.03.2013

திதி:
சங்கடஹர
சதுர்த்தி
09.03.2015

**வட்டர் வழிவேல்**

ஆண்டுகள் இரண்டு ஆனதுவோ
ஆறவில்லை அப்பா உங்கள் பிரிவு
வேதனையில் வாடுகின்றோம்
எம் தெய்வத்தைத் தேடுகின்றோம்.

செல்லக்கதைகளும் சிரிப்பான பகிடிகளும்
காதுக்குள் வந்து உரசிச் செல்லுதப்பா!!
கலகலப்பாய் வாழ்ந்த உங்களுக்கு
கண்ணூறுதான் பட்டதுவோ

பெற்றெடுத்து ஆளாக்கி அறிவூட்டி வளர்த்து
எம்மைப் பார்போற்ற உயரவைத்த
எங்கள் அன்பு அப்பாவே !!
நீங்கள் வாழ்ந்த வாழ்வு மறையாது
எம்மனதை விட்டு
நேர்வழியைக் காட்டிய அப்பா!
தோற்றுவிட்டோம் நாம் மீளமுடியவில்லை
மறுபிறவி எடுத்துவந்து எங்கள்
மனக்கவலை தீர்த்திடுங்கள் அப்பா!
அப்பாவின் ஆத்மா சாந்தியடைய இறைவனை
வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

அதிகாரி வீதி, கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

மனைவி, பிள்ளைகள்
(57622)(3.7.8)

## நினைவலைகள்

எட்டாம் ஆண்டு



மலர்வு 30.07.1936
உதிர்வு 23.04.2007

அமரர் **வல்லிபுரம் சிவபாக்கியநாதன்**

முதலாம் ஆண்டு



மலர்வு 06.04.1940
உதிர்வு 19.02.2014

திருமதி **அன்னபூரணம் சிவபாக்கியநாதன்**

மானிட வாழ்க்கையின் முடிவின் பயனாக இறைவனடி சேர்ந்த எமது பெற்றோர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நினைவஞ்சலியும் எமது இல்லத்தில் இன்று (09.03.2015) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறும். இந்நிகழ்வில் அனைத்து உறவினர்களையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வைத்தியசாலை அருகில்,
கோப்பாய் மத்தி.

பிள்ளைகள்
(57630)(3.7.8)

# லோட்டஸ் ஜெல்ப்பன் ஆங்கில முன்பள்ளி விளையாட்டு விழா



கொழும்புத்துறை, மார்ச் 9

நோர்வேயிலுள்ள பொது அமைப்பான 'லோட்டஸ்' தொண்டு நிறுவனத்தின் அனுசரணையுடன் அரியாலையில் இயங்கிவரும் லோட்டஸ் ஜெல்ப்பன் ஆங்கில முன்பள்ளி மாணவர்களின் வருடாந்த விளையாட்டு விழா கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட ஓய்வுபெற்ற யாழ். வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆர்.அருளானந்தம் போட்டிகளில் வெற்றி பெற்ற சிறார்களுக்கான பரிசில்களை வழங்கினார்.

பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் சிறார்களுக்கு குறைந் தளவு அனுமதிக் கட்டணத்துடன் ஆங்கில மொழி மூலக் கல் வியை வழங்கி வரும், இந்த முன்பள்ளியில் 35 மாணவர்கள் கல்விகற்று வருகின் றனர். இந்த வருடம் ஜனவரி மாதம் இந்த முன்பள்ளி ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

அதேவேளை பெற் றோரை இழந்த மாணவர்களின் உயர்கல்விக்கும் லோட்டஸ் அமைப்பு உதவிகள் வழங்கி வருகின்றது. (வ-135)

# வடமராட்சி கல்வி வலய பாடசாலை மாணவருக்கான தமிழ்த்தினப் போட்டி

கரணவாய், மார்ச் 9

வடமராட்சி வலயப் பாடசாலை களுக்கிடையிலான தமிழ்த் தினப் போட்டிகள் எதிர்வரும் 13 ஆம்திகதி முதல் ஆரம்பமாகி இடம்பெறவுள்ளன.

இதில் திறனாய்வு உட்பட எழுத் தாக்கப் போட்டிகள் எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கர வெட்டிக் கோட்டத்துக்கு உட் பட்ட பாடசாலைகளுக்கு நெல்லியடி மத்திய கல்லூரியும் பருத்தித்துறை கோட்ட பாட சாலைகளுக்கு வேலாயுதம் மகாவித்தியாலயத்திலும் மருதங்கேணி கோட்டப் பாடசாலை மாணவர்க ளுக்கான போட்டிகள் உடுத்துறை, அம்பன் ஆகிய பாடசாலைகளிலும் இடம்பெறவுள்ளன.

தொடர்ந்து 16 ஆம், 17 ஆம் திகதிகளில் எழுத்தாக்கப் போட் டிகளின் ஆக்கங்களைத் திருத் தும்பணி காலை 8.30 மணி முதல் வலயக் கல்வி அலுவ லகத்திலும் 24 ஆம் திகதி பருத்தித்துறை கோட்டப் பாடசாலைகளுக்கான மொழித்திறன், வாசிப்பு, ஆக்கத்திறன் வெளிப்பாடு, கதைகூறல், பேச்சு, பாவோதல், அசையும் இசையும் ஆகியன காலை 8.30 மணிமுதல் மெதடிஸ்த பெண்கள் உயர் தரப்பாடசாலையிலும் மேற்குறித்த போட்டிகள் கரவெட்டிக் கோட்ட மாணவர்களுக்கான போட்டிகள் 27 ஆம்திகதி நெல்லியடி மத்திய கல்லூரியிலும், 28 ஆம் திகதி மருதங்கேணி கோட்ட மாணவர்களுக்கான போட் டி கள் செம்பியன் பற்று அ.த.க. பாடசாலையிலும் இடம்பெறவுள்ளன.

தொடர்ந்து கலைத்திறன் போட் டிகள் இசை, தனிஇசை, குழு இசை, தனிநடனம், குழு நடனம், நாட்டிய நாடகம், நாட்டார் பாடல், வில்லுப்பாட்டு என்பன 29 ஆம் திகதி பருத்தித்துறை கோட்டப் பாடசாலைகளுக்கு மெதடிஸ்த பெண்கள் பாடசா லையிலும் கரவெட்டி கோட்ட பாடசாலைகளுக்கு 30 ஆம் திகதி நெல்லியடி மத்திய கல்லூரியிலும் நடைபெற வுள்ளன. (வ-108)

# கவிதைத் தொகுதி நூல் அறிமுகவிழா

மானிப்பாய், மார்ச் 9

குமாரசுவாமி செல்வக் குமாரின் 'ஊசல்' கவிதைத் தொகுதி நூல் அறிமுக விழா இன்று திங்கட் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இடம் பெறும்.

வலி. மேற்கு பிரதேச சபையின் அனுசரணையுடன் தவிசாளர் திருமதி நா. ஐங்கரன் தலைமையில், தலைமை அலுவலக மண்டபத்தில் நிகழ்வு இடம்பெறும்.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ சபா. வாசுதேவக் குருக்கள் மற்றும் சிறப்பு விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினரும் வடக்கு விளையாட்டுத்துறை இணைப்பதிகாரியுமான இம்மானுவேல் ஆனோல்ட், கௌரவ விருந்தினராக வலி. மேற்கு உதவி பிரதேச செயலர் திருமதி கி. செந்தூரன் ஆகியோர் கலந்து கொள்வார்கள். (வ-50)


**கரைச்சி புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலய ஆண்டு உற்சவ பொங்கல் தினத்திற்கான ஒலி, ஒளி சேவை வழங்கலுக்கான கூறுவிலை கோரல்**

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய ஆண்டு உற்சவப் பொங்கல் எதிர்வரும் 03.04.2015ஆம் திகதி நடைபெறவுள்ளது. அன்றைய தினம் பொங்கல் உற்சவத்திற்கான ஒலி, ஒளி சேவைகளை வழங்குவதற்காக வழங்குநர்களிடமிருந்து கூறுவிலை கோரப்படுகின்றது.

1. 35 Kv இற்கு மேற்பட்ட மின்பிறப்பாக்கியும், அதனோடு இணைந்த மின்விளக்கு சாதனங்களும்
2. 20 ஒலி பெருக்கிகள் பயன்படுத்தக்கூடிய வகையிலான சாதனங்கள்.

மேற்படி இரு வழங்கல் சேவைகளையும் இணைந்தோ, தனித்தனியாகவோ மேற்கொள்ளக்கூடியவர்கள் எதிர்வரும் 15.03.2015 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு ஆலயத்துக்கு நேரில் சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர்
வீ . இராமநாதன்
(51377)(5.3.7) தொடர்பு :- 077 948 5064

**வாடகைக்கு** சுண்டுக்குளிப் பாடசாலைக்கு அருகில் அறைகள் மற்றும் சிறிய வீடு ஒன்றும் வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 741 2713, 077 320 0727 (57607) (4.3.7)

**வாடகைக்கு** 403, மணிக்கூட்டு வீதியில் (வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோயிலுக்கும் இடையில்) பெரிய கடையும், சிறிய கடையும் வாடகைக்குள்ளன. (சி/16216) (4.3.7)
தொடர்பு: 077 210 0909/071 759 1256

**வீடு / அறை வாடகைக்கு**
பல்கலைக்கழக / உத்தியோகம் பார்க்கும் ஆண்களுக்கு வீடு/ அறை வாடகைக்கு.
(57584)(5.3.7) தொடர்புக்கு : 077 420 6553, 077 746 6589

**தோட்டவேலைக்கு ஆள் தேவை**
ஓமந்தை ஏ9 வீதியில் இருக்கும் தோட்டக் காணி வீட்டுடன் தங்கியிருந்து பராமரிப்பதற்கு அனுபவமுள்ள ஒருவர் தேவை. அனைத்து அடிப்படை வசதிகளுடன் நிரந்தர மாத சம்பளத்துடன்.
தொடர்பு: 077 772 9721 (56226) (4.3.7)

**தவறிவிட்டது**
ஜெயசிங்கம் ஜெகன் ஆகிய எனது 773291039v இலக்கமுடைய தே.அ.அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம் என்பன அடங்கிய பேர்ஸ் திருநெல்வேலிக்கும் மானிப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும்.
தொடர்பு : (57617)(3.3.7)
077 790 5201, 077 607 1141

**வீடு வாடகைக்கு**
சகலவசதிகளுடன் கூடிய நான்கு அறைகளுடன் மேல்மாடி வீடும், ஐந்து அறைகளுடன் கீழ் வீடும் யாழ் நகரத்தில் இருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்தில் வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
(57630)(5.3.7) தொடர்பு :071 427 5504, 077 071 1924

**தேவை - ஆண்**
எமது விநியோக வாகனத்தில் சென்று பொருள்களை விநியோகம் செய்வதற்கு விற்பனை உதவியாளர் தேவை. விற்பனைத் துறையில் இரண்டு வருடத்துக் குறையாத அனுபவம் தேவை.
மற்றும் களஞ்சியத்துறையில் இரண்டு வருடத்துக்குக் குறையாத அனுபவம் வாய்ந்த களஞ்சியக் காப்பாளர் தேவை.
வயது எல்லை: 25-40
தொடர்பு: 021 221 3027 (57609) (4.3.7)

**BEd (SINHALA) PAST PAPER CLASS**
மேற்படி பரீட்சைக்குத் தோற்றவுள்ளவர்கள் பங்குபற்றி பயன்பெறலாம்.
ஸ்ரீ மாஸ்டர்
திங்கள் 09.03.2015 மாலை 6.00-7.00, 7.00-8.00
வெள்ளி 13.03.2015 மாலை 6.00-7.00, 7.00-8.00
ஸ்ரீ இரண்டாம் மொழி கல்வி நிறுவகம்
72, இராமநாதன் வீதி, (மிலேனியம் அருகில்)
யாழ்ப்பாணம். 077 703 3729 (57628)(4.3.7)

**Institute of Junior**
A/L, AAT, CBF வகுப்புகளுக்கான கணக்கீடு கற்பிக்கப்படும்.
Elocution Classes எலக்கியூசன் வகுப்புக்கள் (5 வயதிலிருந்து 10 வயது வரை)
English Classes (Pre school - O/L)
அனுமதிகளை 13.03.2015 இற்கு முன் பெற்றுக் கொள்ளவும்.
T.P: 077 199 9630
926, பருத்தித்துறை வீதி, நல்லூர்,
(சட்டநாதர் கோயில் முன்) (57610)(4.3.7)

**யாழ்ப்பாணத்தில் காண்டம் வாசிக்கப்படுகிறது**
ஸ்ரீ கௌசிக அகஸ்திய நாடி சோதிட நிலையம் (PVT) LTD
P. ஜெய்சங்கர்
கொழும்பில் கடந்த 25 வருடங்களாக, கௌசிக அகஸ்திய முனிவர்களால் எழுதப்பட்ட ஏட்டுச் சுவடிகள் மூலம், தங்களின் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம், கல்வி, திருமணம், குழந்தைகள், தொழில் வாய்ப்புகள், வெளிநாட்டுப் பயணம் போன்றவற்றைக் கூறிப் புகழ்பெற்ற சோதிடர்களால், தற்போது யாழ்ப்பாணத்தில் பலருடைய வேண்டுகோளுக்கு இணங்கி கீழ்க்கண்ட முகவரியில் காண்டம் வாசிக்கப்படுகிறது.
தொடர்புகளுக்கு : 384 A, நாவலர் வீதி, (கைலாசபிள்ளையார் கோயில் சந்தி, நல்லூர்.)
தொலைபேசி : 021 221 7944
(c/15217)(5.3.7)
கொழும்பு முகவரி:
19, 1/1, கொத்தலாவல மாவத்தை, பம்பலப்பிட்டி.
தொலைபேசி: 011 258 6180/ 011 258 6208

**அபிவிருத்தி லொத்தர் சபை விநியோகஸ்தர்களை நியமித்தல்**
**சந்தையில் முதலிடம் வகிக்கும் லொத்தர்களாகிய**
''சனிக்கிழமை அதிர்ஷ்டம்'', ''அபிவிருத்தி அதிர்ஷ்டம்'', ''ஜயோதா'', ''ஜனஜய'', நியத்தஜய'', ''சுப்பர்போல்'' மற்றும் ''உடனடி லொத்தர்'' டிக்கட்டுக்களை விநியோகிக்கும் வகையில் பின்வரும் மாவட்டங்களிலிருந்து விநியோகஸ்தர்களாக செயற்பட விரும்பும் நிறுவனங்கள் மற்றும் நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
01. யாழ்ப்பாணம்
02. கிளிநொச்சி / முல்லைத்தீவு
03. மன்னார்
04. வவுனியா
05. திருகோணமலை

தகைமைகள்

விநியோகஸ்தர்களுக்கு 1.25 % கொடுப்பனவு வழங்கப்படும்
01. அபிவிருத்தி லொத்தர் சபை மூலம் கோரப்படும் பெறுமதிக்கு வங்கிப் பிணையினை முன்வைக்கும் தகுதி அவசியம்.
02. தொலைபேசி/ தொலைநகல்/கணினி/ இணைய வசதிகள் இருத்தல் அவசியம்
03. பிரதான வீதியில் அலுவலக வசதிகள் இருத்தல் வேண்டும்.

* மேலும் மேற்கூறப்பட்ட மாவட்டங்களில் லொத்தர் விற்பனை செய்வதற்கு விருப்பமுடைய நபர்கள் / நிறுவனங்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விற்பனை முகவருக்கு 17.5% கமிஷன் தொகை வழங்கப்படும்.
* மேற்கூறப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய நபர்கள் அல்லது நிறுவனங்கள் 2015.04.01 ஆம் திகதிக்கு முன்னதாக சுயமாகத் தயாரித்த விண்ணப்பப் படிவம் மூலம் விண்ணப்பிக்கவும்.
* மேலதிக விவரங்களுக்கு தொலைபேசி இலக்கம் 011 239 0928 அல்லது 011 482 4854 ஊடாக சந்தைப்படுத்தல் பிரிவினை தொடர்புகொள்ளவும்.

தலைவர்,
அபிவிருத்தி லொத்தர் சபை,
இல.356, கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வா மாவத்தை,
யூனியன் பிளேஸ், கொழும்பு - 02 (57621) (45.3.7)

## பனம்பொருள் கைப்பணிப் பயிற்சி முடித்தோருக்கு சான்றிதழ்

யாழ்ப்பாணம், மார்ச் 9

பனை அபிவிருத்திச் சபை கரவெட்டி பிரதேசசெயலர் பிரிவின் சமரபாகு பகுதியில் நடத்திய கைப்பணி பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கான உபகரணங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை இடம்பெறும். கொற்றாவத்தை அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் பிற்பகல் 2.30 மணிக்கு இந்த நிகழ்வு ஆரம்பமாகும்.

பனை அபிவிருத்தி சபையின் மாவட்ட இணைப்பாளர் கியூபேட் அன்ரனி தலைமையில் நடைபெறும் நிகழ்வில் சபையின் தலைவர் கே.விஜிந்தன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். கரவெட்டி பிரதேச செயலர், சிவசிறி, பனை அபிவிருத்திச் சபையின் பொது முகாமையாளர் பி.லோகநாதன் ஆகியோர் நிகழ்வில் கௌரவ விருந்தினர்களாகவும் சபையின் விரிவாக்க முகாமையாளர் கே.கோபாலகிருஷ்ணன், அபிவிருத்தி முகாமையாளர் திருமதி எஸ்.ஜனார்த்தனன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வார்கள்.

சபையில் வாழ்வாதார திட்டத்தின் கீழ் சமரபாகு கிராமத்தில் முன்னெடுக்கப்பட்ட பனம் கைப்பணி பயிற்சியில் நிறைவு பெற்ற 150 வரையானோருக்கு இந்த உதவித் திட்டத்தின்கீழ் பொருள்கள் வழங்கப்படும்.

ஒவ்வொருவருக்கும் 20 ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த பனம் உற்பத்தி கைப்பணிக்கான உபகரணங்கள் வழங்கப்படும்.

பனை அபிவிருத்திச் சபை ஏற்கனவே சமரபாகு என்ற கிராமத்தை பனம் உற்பத்தி எழுச்சி கிராமமாக பிரகடனப் படுத்தியும் இருந்தன. (வ–17)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி புனிதம் மேர்சி அழகரட்ணம் செல்லத்துரை

(இளைப்பாறிய ஆசிரியை - விக்ரோறியாக் கல்லூரி)



பிறப்பு: 03.12.1926

இறைவனடி: 07.03.2015

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி புனிதம் மேர்சி அழகரட்ணம் செல்லத்துரை 07.03.2015 சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - முத்தம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லத் துரையின் அன்பு மனைவியும், ஏஞ்சலின், ரஞ்சன், ஹெப்சி, ஈவா, செல்வினி ஆகியோரின் தாயும், காலஞ்சென்ற சகோதரி செல்வரட்ணம் (C.P.M) மற்றும் தங்கரட்ணம் ராஜசூரியர், சுகிர்தமலர்- செல்லப்பு, நவரட்ணம், தங்கமலர், கிருபைராஜா, அரியமலர் ராஜரட்ணம் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற கணேஷ் ஆல்பரி மற்றும் கமலா, டயசிறி, வண. ஜேம்சன், ஞானப்பொன்ராஜா, சாமுவேல், தேவானந்தன் ஆகியோரின் மாமியும், போல், டேவிற், பியுலா, டெபோறா, டான், அனோஜன், மியுரியல், ஜெயாஸ் ஆகியோரின் பேர்த்தியும், அஞ்சனாவின் பூட்டியும், ஜீவமணியின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் மகிந்த மலர்ச்சாலையில் நேற்று (08.03.2015) ஞாயிற்றுக்கிழமை பார்வைக்காக வைக்கப்பட்டு பி.ப. 6 மணியளவில் சங்கானை மேற்கு, பண்டத்தரிப்பிற்கு எடுத்துச்செல்லப்படும். அன்னாரின் நல்லடக்க வழிபாடு செல்வமியர் அரசடி வீதி, பண்டத்தரிப்பில் இன்று (09.03.2015) திங்கட்கிழமை அரசடி வீதி, பண்டத்தரிப்பில் பி.ப. 4.00 மணிக்கு நடைபெற்று நல்லடக்கத்துக்காக பண்டத்தரிப்பு சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஹெப்சி : 077 6243302
ஈவா : 0777 865535

தகவல் :
வண. ரீதா. ந.ஜே. ஞானப்பொன்ராஜா

(57616) (45.3.7)

### வேலுப்பிள்ளை பொன்னம்பலம்



சங்கத்தார்வயல் இயக்கச்சியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பொன்னம்பலம் 07.03.2015 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை- பாக்கியம் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - பரமேஸ்வரி தம்பதியரின் மருமகனும் சிவமலரின் அன்புக் கணவரும் பாமினி, ஜெனிற்றா (ஜெனா) ஆகியோரின் அன்புத் தந்தையும் வினோபனின் (லண்டன்) மாமனாரும் தாமினனின் (லண்டன்) அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தங்கம், பரிமளம் மற்றும் தெய்வானை, மங்கயர்க்கரசி , கந்தையா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான செல்லையா, குமார், வீரசிங்கம் மற்றும் சிவப்பிரகாசம், பரமேஸ்வரி, செல்வராசா (டென்மார்க்), தவமணி, யோகநாதன், நவரட்ணம், மகேஸ்வரி (டென்மார்க்), காலஞ்சென்ற இரத்தினசிங்கம் மற்றும் சந்திராதேவி (லண்டன்), இந்திரா (லண்டன்), மல்லிகாதேவி(லண்டன்), வசந்தி (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
மனைவி, மக்கள்
இயக்கச்சி , பளை
தொ.பே.இல : 077 900 9477
077 054 2721

மகள், மருமகன்
வினோபன்
(லண்டன்)
00441603920463
00447448680414

செல்வராசா (மைத்துனர்/ டென்மார்க்)
004532153591

(57623)(5.3.7)

### கதிரன் இரத்தினதுரை



குடாக்கனை, சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் பெற்றா மன்னாரைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கதிரன் இரத்தினதுரை 05.03.2015 வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரன்- தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லையா- இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சந்திராதேவியின் அன்புக் கணவரும் அரியகுட்டி, நாகராசா, கைலாசபிள்ளை, பூமாதேவி, காலஞ்சென்ற இராச துரை ஆகியோரின் அன்புச் சகோதரரும் செல்வரட்ணம், தர்மலிங்கம், தனபால்(ஜேர்மனி), சரோஜாதேவி, இந்திராவதி, காலஞ்சென்றவர்களான துரைசிங்கம், இராசரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ராஜ்குமார் (பாபு - ஜேர்மனி), தனராஜ், திருமதி ராதிகா (சுவிற்சர்லாந்து), பிரதாப் (லண்டன்), தர்மராஜா, ஜனராஜ், திவ்வியராஜ், சுதா (லண்டன்), லதா, ராஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சசிதா(ஜேர்மனி), சாந்தகுமாரி, சந்திரசேகர்(சுவிற்சர்லாந்து), விஜயராஜ், கோடீஸ்வரன் (லண்டன்), ரஜினா(லண்டன்), தாரணி ஆகியோரின் அன்பு மாமனாரும் பானுசா, நிருசா, இலக்கியா, சாலமன், சாகித்தியன், சாதுஜன், கவிசா, வருண், கவினா, ரிஷானா, டிக்ஷன், நவீன்ராஜ், அபர்ணிக்கா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.03.2015) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் இல. 51, பெந்தக்கோஸ் லேன், கச்சேரியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுழிபுரம் திருவடிநிலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 51 பெந்தக்கோஸ் லேன்,
கச்சேரியடி, யாழ்ப்பாணம்.
075 040 7024, 077 907 1933

தகவல் :
குடும்பத்தினர்.

(57628)(5.3.7)


## பெண் கைதிகளுக்கு சுயதொழில் பயிற்சி



மட்டக்களப்பு, மார்ச் 9

மட்டக்களப்பு சிறைச்சாலையில் பெண் கைதிகளுக்கு சுய தொழில் பயிற்சி செயலமர்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை நடத்தப்பட்டது.

சர்வதேச மகளிர் தினத்தை யொட்டி மட்டக்களப்பு சிறைச்சாலையின் ஏற்பாட்டில், மட்டக்களப்பு தேவை நாடும் மகளிர் அமைப்பால் நடத்தப்பட்ட இந்தச் செயலமர்வில், செய்முறைப் பயிற்சியும் வழங்கப் பட்டது.

மட்டக்களப்பு சிறைச்சாலை அத்தியட்சகர் எச்.வி.ஐ. பிரியங்கரவின் தலைமையில் நடைபெற்ற இந்த செயலமர்வில் தேவை நாடும் மகளிர் அமைப்பின் இணைப்பாளர் சங்கீதா தர்மரஞ்சன், அதன் உத்தியோகஸ்தர் ஜெயதீபா பத்மசிறி, மட்டக்களப்பு சிறைச்சாலை நலன்புரி உத்தியோகத்தர்களான பி.சுசிதரன், எல்.ஜெயசுதாகரன், எம்.ஐ.சித்தி சபீனா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி அவர்களின் பொருளாதார நிலையை உயர்த்து வதற்காக தேவை நாடும் மகளிர் அமைப்பினால் சுய தொழில் பயிற்சி வழங்கப்படுகின்றது. அதில் ஒரு கட்டமாக மட்டக்களப்பு சிறைச்சாலையிலுள்ள பெண் கைதிகளுக்கு சுயதொழில் பயிற்சி செயலமர்வு மகளிர் தினத்தையொட்டி நடத்தப்பட்டதாக தேவை நாடும் மகளிர் அமைப் பின் இணைப்பாளர் சங்கீதா தர்மரஞ்சன் தெரிவித்தார். (வ)

## காத்தான்குடி ஆற்றங்கரையோரத்தை பொழுதுபோக்கிடமாக மாற்ற ஏற்பாடு

மட்டக்களப்பு, மார்ச் 9

மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி ஆற்றங்கரைப் பகுதியில் பொழுதுபோக்கு இடம், மற்றும் மைதானம் அமைப்பதற்கான வேலைத் திட்டம் முன்னெடுக்கப் பட்டுள்ளதாக நகரசபை தவிசாளர் எஸ்.எச்.அஸ்பர் தெரிவித்தார்.

காத்தான்குடி ஆற்றங்கரைப் பகுதியில் குப்பைகள் கொட்டப் பட்ட இடத்திலேயே பொழுது போக்கு இடம் மற்றும் மைதானம் அமைக்கப்படவுள் ளதாகவும் இந்த நிலையில், தற்போது குறித்த பகுதியில் நிலத்தை செப்பனிடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். மக்களின் நன்மை கருதி இவை அமைக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார். குறித்த பகுதியில் முன்னெடுக்கப்பட்டுள்ள வேலைத் திட்டத்தை பார்வையிட்ட பின்னரே, அவர் இதனைக் கூறினார். அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்–

“மக்களுக்கு நாம் வழங்கிய வாக்குறுதி களுக்கு அமைய காத்தான்குடி பிரதேச அபிவி ருத்திப் பணிகள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன.

ஏற்கெனவே எமது திட்டமிடலின் அடிப்படையில், முன்னாள் பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ்வின் ஏற்பாட்டில் பல்வேறு அபிவிருத்தித்திட்டங்களை மேற் கொள்வதற்கு அனுமதி கிடைக் கப்பெற்று வேலைகள் செய்து முடித்துள்ளோம். செய்து கொண்டும் இருக்கின்றோம்

ஊர் வீதி, ரெலி கொம் வீதி, பாம் வீதி அபிவிருத்திகளின் முன்மொழிவுகள் அனுப்பப் பட்டு தற்போது ஆட்சி மாற்றத்தின் பிற்பாடு தாமதமாகியிருந்தன. ஆனால், தற்போது வீதி அபிவிருத்தி நெடுஞ்சாலைகள் அமைச்சர் கபீர் எம்.ஹாசிமினால் இந்த வீதிகளின் அபிவிருத்திகளுக்கான அனுமதி கிடைத்துள்ளது. இவற்றின் பூர்வாங்க வேலைகள் வி[illegible]வில் ஆரம்பமாகும். அத்துடன், காத்தான்குடியில் அமைக்கப்பட்டுள்ள இஸ்லாமிய நூதனசாலையை எதிர் வரும் ஏப்ரல் 6ஆம் திகதி திறக்க வுள்ளோம்” என்று கூறினார். (வ)


## மரண அறிவித்தல்

திருமதி
### இராசமணி சுப்பிரமணியம்



பெரியாட்டி, கோப்பாய் வடக்கு, கோப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசமணி - சுப்பிரமணியம் 06.03.2015 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தையா தங்கம்மா தம்பதியினரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம்- அன்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை , சுப்பிரமணியம், பரஞ்சோதி மற்றும் இரத்தினம், அன்னலட்சுமி, தில்லைநாதன் ஆகியோரின் சகோதரியும் இந்துமதி (அமெரிக்கா), காந்திமதி, சந்திரமதி (நெதர்லாந்து), குகதாசன் (லண்டன்), சுமதி(சுவிஸ்), கமலதாசன் (ஆசிரியர் - யா/ கோப்பாய்- சரவணபவானந்த வித்தியாலயம்), அன்புமதி (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பழனித்துரை (அமெரிக்கா), காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் விசுவநாதன் (நெதர்லாந்து), மந்தாகினி (லண்டன்), சந்திரகுமார்(சுவிஸ்), கஜேந்தினி(ஆசிரியர் - யா/ இணுவில் மத்திய கல்லூரி), துரைராஜா(அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ரஜனி- பிரபாகரன், அகிலா- நகுலேஸ்வரன், அஞ்சலா- தயாபரன், அஷாந்தன், பவித்திரா, பிரியங்கன், கரேஸ், அனோஸ், கனுஷியா, சாருணியா, அபிஷாலினி, ஆர்த்திகன், நாராயணி, ஆதவன், அபிநயா, வேணுகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், இஷானிகா, அபிஷாந்தன், அதீஸ், நேருஜன், கிஷானிகா, தயூரன், தயந்தன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (09.03.2015) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப 11.00 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் கோப்பாய் கந்தன் காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சரவணபவானந்த வித்தியாலய வீதி,
கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

தகவல் : குடும்பத்தினர்.
077 621 8308


(57573)(5.3.7)


## பரிசளிப்பு விழா

வலி.வடக்கு, மார்ச் 9

மல்லாகம் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயத்தின் பெயர் மாற்றம் செய்யப்பட்ட 6 ஆவது ஆண்டு நிறைவு நாளும் பாடசாலை பரிசளிப்பு விழா மற்றும் தங்க மலர் வெளியீடு இன்று திங்கட்கிழமை பாடசாலை மண்டபத்தில் அதிபர் சிசிவகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது. (வ)

## லிங்க் சுதந்த உங்கள் பற்களை வாழ்நாள் முழுவதும் பாதுகாக்கும்



"எனக்கு முன்பு பற்களில் இருந்து வந்த பிரச்சினைகள் காரணமாக சொல்லிலடங்கா இன்னல்களுக்கு முகம்கொடுக்க நேர்ந்தது. ஆனால், தற்போது நான் லிங்க் சுதந்த பற்பசையினை உபயோகித்து பற்களை துலக்குவதால் எனது பற்களில் இருந்த அனைத்து பிரச்சினைகளும் தீர்ந்தன. லிங்க் சுதந்த, பற்களுக்கும் பல் ஈறுகளுக்கும் ஒரு புத்துணர்ச்சியான அனுபவத்தைக் கொடுக்கிறதாலேயே நான் லிங்க் சுதந்தவை நம்பக் காரணம். நான் உங்களுக்கு கூறுவது என்னவெனில், உங்கள் பற்களை வாழ்நாள் முழுவதும் பாதுகாத்துக்கொள்ள விருப்பமெனில் லிங்க் சுதந்தவினை உபயோகித்து நாளொன்றுக்கு இரு முறை மிகச் சரியான முறையில் பற்களை துலக்கி அதன் வித்தியாசத்தினை உணர்ந்து சிறந்த பயனை அடைந்திடுங்கள்."

மஹிந்தகுமார்




ரு. 50/= இலிருந்து

சுதந்த

மருத்துவரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது

பற்களின் பூரண பாதுகாப்புக்கு

# சுதந்த

ஆரோக்கியமான மற்றும் உறுதியான பல்வரிசை

லின்க் நெச்சுரல் புரொடக்ஸ் தனியார் நிறுவனம் சீ.ஐ.சீ. இல்லம் 199, கிவ் வீதி, கொழும்பு 02. தொ.பே.எண். : 011-2409294 மின்அஞ்சல் : info@linknaturalproducts.com இணையம் : www.linknaturalproducts.com

# மாணவர்களுக்கு ஓர் நற்செய்தி





## மீண்டும்

# கல்விச்சுடர்

உதயனுடன் இணைந்திருங்கள்!



ஜப்பானில் ஒரு தீவு பூனைகளுக்காகவே உள்ளது. இந்தத் தீவில் சனத்தொகையை விட பூனைத் தொகை ஆறு மடங்கு அதிகம் என்கிற அளவுக்கு பூனைகளால் நிரம்பிவழிகிறது. தற்போது கடைகள், வர்த்தக நிறுவனங்கள் எதுவும் இல்லாத அந்தத் தீவில் மொத்தம் 20 பேர் மட்டுமே வாழ்ந்து வரும் நிலையில், நூற்றுக்கும் மேற்பட்ட பூனைகள் காணப்படுகின்றன. இந்தப் பூனைகளைப் பார்வையிட சுற்றுலாப் பயணிகள் ஆர்வம் காட்டுகின்றனர். (14)

# இந்திய மீனவர்கள் பாகிஸ்தானில் கைது

கராச்சி,மார்ச் 9

பாகிஸ்தான் எல்லையில் அத்துமீறி மீன்பிடித்த இந்திய மீனவர்கள் 45 பேரை பாகிஸ்தான் கடலோரக் காவல் படையினர் நேற்று முன் தினம் கைது செய்துள்ளனர். அரபிக் கடலில் கராச்சி துறைமுகத்துக்கு அருகே நேற்றுமுன்தினம் 45 இந்திய மீனவர்கள் படகுகளில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது ரோந்துக் காவலில் ஈடுபட்டிருந்த பாகிஸ்தான் கடலோரக் காவல் படையினர் மீனவர்களைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் கராச்சி துறைமுக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். ஏற்கனவே கடந்த ஜனவரி மாதம் 38 இந்திய மீனவர்களையும், அவர்களது 7 படகுகளையும் பாகிஸ்தான் கடலோரக் காவல் படையினர் கைது செய்தனர். இந்தியா, பாகிஸ்தான் இடையே வரையறுக்கப்படாத கடல் எல்லை இருப்பதால், மீனவர்கள் கைதாவது தொடர்கதையாக இருப்பதாக மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (14)

## வாடகைத் தாயாக பெற்ற மகனுக்காக மாறிய 'அம்மா'



லண்டன், மார்ச் 9

மகனின் ஆசையை நிறைவேற்றுவதற்காக அவரது தாயாரே வாடகைத் தாயாக மாறி குழந்தை பெற்றுக் கொடுத்துள்ளார். இந்தச் சம்பவம் இங்கிலாந்தில் இடம்பெற்றுள்ளது.

இங்கிலாந்தைச் சேர்ந்த கைல் செசானுக்குக் குழந்தைகள் என்றால் கொள்ளைப் பிரியம். ஆனால் அவரால் ஒரு குழந்தைக்கு அப்பாவாக முடியாது. தொடக்கத்தில் ஒரு குழந்தையைத் தத்தெடுக்கலாம் என்று நினைத்த கைலுக்கு செயற்கை கருத்தரிப்புப் பற்றி தெரிய வந்தது. உடனே ஒரு செயற்கைக் கருத்தரிப்பு மையத்தைத் தொடர்பு கொண்டார். அவர்கள், தன்னார்வலரிடமிருந்து கருமுட்டையை பெற்று கைலின் விந்தணுவுடன் அதை உருமாற்றி வாடகைத்தாயின் கருப்பையில் வைத்து குழந்தை பெறும் முறை பற்றி விவரித்தனர்.

கைல் தனக்கான வாடகைத்தாயைத் தீவிரமாகத் தேட ஆரம்பித்தார். பலரைச் சந்தித்தும் எந்தப் பயனுமில்லாத நிலையில், இறுதி நம்பிக்கையாக தனது அம்மாவிடம் தன் குழந்தைக்கு வாடகைத்தாயாக இருக்க முடியுமா? என்று கேட்டுள்ளார். தன் மகனின் குழந்தை ஆசையை நன்கு அறிந்த அம்மா மேரி ஒரு கணம் கூட யோசிக்காமல் சம்மதித்தார். தன் கணவரின் ஒப்புதலுடன் கருத்தரித்தார். தனது 47ஆவது வயதில் கைலை சுமந்த அதே கருப்பையில் அவனது மகனையும் சுமந்தார். (14)

# ஐ.எஸ்ஸிடம் இருந்த முக்கிய நகர் மீட்பு



பக்தாத்,மார்ச் 9

ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதிகள் கைப்பற்றிய அல்பக்தாதி நகரை ஈராக் இராணுவம் மீட்டுள்ளது. ஈராக்கின் மேற்கே யூப்ரடிஸ் நதியின் மீது அமைந்துள்ளது அல்பக்தாதி நகரம். இதன் அருகே உள்ள அல்ஆசாத் விமான படை தளத்தில் அமெரிக்க விமான படைப் பிரிவு உள்ளது.

இந்தநிலையில் கடந்த பெப்ரவரி மாதம் அல்பக்தாதி நகர் மீது திடீர் தாக்குதல் நடத்திய ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதிகள் அதைக் கைப்பற்றிதங்கள்கட்டுப்பாட்டில்கொண்டு வந்தனர். அத்துடன் ஐ.எஸ்.ஐ.எஸ் தற்கொலைப் படையினர் அருகில் உள்ள அல்ஆசாத் விமான படைத் தளத்தைத் தகர்க்க முற்பட்டனர்.

இதனை ஈராக் மற்றும் அமெரிக்க கூட்டுப் படைகள் முறியடித்தன. இதையடுத்து பயங்கரவாதிகள் பிடியிலிருந்து அல்பக்தாதி நகரை மீட்க கடந்த இரு வாரங்களில், 26 தட்வைகள் அமெரிக்க விமானப் படை வான் வழித் தாக்குதல்களை நடத்தியது. அத்துடன், ஈராக் இராணுவத்தினரும், ஷியா, சன்னி பிரிவினர் மற்றும் பழங்குடியினர் துணையுடன், பயங்கரவாதிகளின் மறைவிடங்கள் மீது தரை வழி தாக்குதலை நடத்தினர். இவற்றை எதிர்கொள்ள முடியாமல் பயங்கரவாதிகள் பின்வாங்கி ஓடியதை அடுத்து அல்பக்தாதி நகரம் மீண்டும் ஈராக் கட்டுப்பாட்டில் வந்துள்ளது. பொலிஸ் நிலையம், யூப்ரடிஸ் நதியின் மீது அமைந்துள்ள மூன்று பாலங்கள் ஆகியவை ஈராக் வசம் வந்துள்ளன. 'தரைவழித் தாக்குதலில், அமெரிக்க இராணுவத்தினர் ஈடுபடவில்லை என்பதால் அவர்களுக்கு எந்த பாதிப்பும் இல்லை' என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் லிபியா நாட்டின் தென்பகுதியில் உள்ள எண்ணெய் வயல்கள் மீது ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தியதில், அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த எட்டு பேர் உயிரிழந்துள்ளனர்.(14)

## அல்குவைதா தலைவர் சுட்டுக்கொலை

பெய்ரூட,மார்ச் 9

சிரியாவில் இயங்கி வரும் அல்குவைதா ஆதரவு பெற்ற நுஸ்ரா தீவிரவாத இயக்கத்தினருடன் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வான்வழி தாக்கு தலின் போது அதன் தலைவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

சிரியாவின் ஜனாதிபதி பஷார் அல் ஆசாத்துக்கு எதிராக, அல்குவைதா தீவிரவாத இயக்க ஆதரவு பெற்ற நுஸ்ரா முன்னணி பல்வேறு தாக்குதல்களை நடத்தி வருகின்றது. அவர்களின் தாக்குதலில் இதுவரை ஏராளமான இராணுவத்தினரும் மக்களும் உயிரிழந்துள்ளனர். தீவிரவாத நடவடிக்கைகளை முறிய டிக்க சிரிய இராணுவம் பல்வேறு முயற்சிகளைமேற்கொண்டுவருகின்றது.

இந்தநிலையில், சிரியாவின் இத்லிப் பிராந்தியத்தில் இருக்கும் ஹபீத் கிராமத்தில், நேற்றுமுன்தினம் நுஸ்ரா தீவிரவாத முன்னணி தலைவர்களின் ரகசிய ஆலோசனை கூட்டம் நடைபெறுவதாக சிரிய இராணுவத்தினருக்கு தகவல் கிடைத்தது. அதைத் தொடர்ந்து, அந்தப்பகுதிகளில் சிரிய இராணுவத்தினர் வான் வழி தாக்குதல் நடத்தினர். அந்தத் தாக்குதலின்போது, அல்குவைதா ஆதரவுநுஸ்ரா முன்னணியின்தலைவர் அபு ஹோம்மாம் அல் ஷாமி சுட்டுக் கொல்லப்பட்டார். (14)

## மாசு கலந்த தண்ணீரலேயே அதிக பெண்கள் உயிரிழப்பு

### ஆய்வில் புதிய தகவல்




நியூயோர்க், மார்ச் 9

புற்று நோயை விட,மாசு கலந்த தண்ணீரால் அதிக பெண்கள் உயிரிழப்பதாக புதிய ஆய்வில் தெரியவந்துள்ளது. சர்வதேச அளவில் பெண்கள் மார்பக புற்று நோயால் சாவு அடைகின்றனர். அதற்கு அடுத்த படியாக எய்ட்ஸ், நீரிழிவு போன்ற நோய்களாலும் இறக்கின் றனர்.

ஆனால் இவற்றை விட மாசு கலந்த அழுக்கு தண்ணீரால் தான் மிக அதிக அளவில் சாவு அடைவதாக அண்மையில் நடத்திய ஆய்வு தெரிவிக்கிறது.

அமெரிக்காவின் நியூயோர்க்கில் சீட்டலை மையமாகக் கொண்டு இயங்கும் சுகாதார ஆய்வு நிறுவனம் நடத்திய ஆய்வின் போது இது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. சுகாதாரமற்ற பொதுக் கழிவறைகள் மற்றும் சுத்தம் இல்லாத அழுக்குப் படிந்த மாசு கலந்த தண்ணீர் போன்றவற்றால் இருதய நோய்கள், பக்கவாதம், மூச்சுக் கோளாறு நோய்கள், நுரையீரல் சம்பந்தப்பட்ட நோய்களால் தாக்கப்பட்டு உயிரிழக்கின்றனர். இதன் மூலம் சர்வதேச அளவில வருடமொன்றுக்கு சுமார் 8 லட்சம் பெண்கள் சாவைத் தழுவுகின்றனர். எனவே பெண்கள் மற்றும் சிறுமி களுக்குச் சுகாதார விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்றும் ஆராய்ச்சியாளர்கள் வலியுறுத்தியுள்ளனர். (14)

## 'ஒபாமாவை தலையில் சுட்டிருப்பேன்' கைதான ஐ.எஸ்.தீவிரவாதி கர்ஜனை



வொஷிங்டன்,மார்ச் 9

என்னைக் கைது செய்யாமல் இருந்திருந்தால் ஜனாதிபதி ஒபாமாவைத் தலையில் சுட்டுக் கொன்றிருப்பேன் என்று அமெரிக்காவில் நடந்த குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள ஐ.எஸ் தீவிரவாதி கிறிஸ்டோபர் கார்னல் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வொஷிங்டனில் சட்டசபை வளாகமான கேபிடால் வளாகம் மற்றும் அருகே உள்ள இஸ்ரேல் தூதரகம் ஆகியவற்றைத் தகர்ப்பதற்குக்குண்டுகளை வைக்கச் சதித்திட்டம் போட்டவர் இந்த கிறிஸ்டோபர். குறித்த நபரை அமெரிக்கப்பொலிஸார்கடந்த ஜனவரி மாதம் கைது செய்தனர்.

'எங்களை ஏன் அமெரிக்கா வதைக்கிறது. இதனால் கேபிடால் கட்டடம், இஸ்ரேல் தூதரகத்தை தகர்க்கத் திட்டமிட்டோம். குண்டுகளைத் தயாரித்து அங்கு கொண்டு போய் வைக்கத் திட்டமிட்டிருந்தபோது பொலிஸார் என்னைக்கைதுசெய்து விட்டனர். என்னை மட்டும் அவர்கள் கைது செய்யாமல் இருந்திருந்தால் கைத்துப்பாக்கியை எடுத்து கொண்டு ஒபாமாவை தலையில் சுட்டுக் கொன்றிருப்பேன். இவ்வாறு தொலைக் காட்சி ஒன்றுக்கு கிறிஸ்டோபர் பேட்டியளித்துள்ளார்.

தற்போது அமெரிக்க சிறையில் உள்ள கிறிஸ்டோபரை பிணையில் விடுவிக்க முடியாதபடி, கடும் பிரிவுகளில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (14)

# சிரியாவின் இரசாயன தாக்குதலுக்கு ஐ.நா.கடும் கண்டன

**பாதுகாப்புச் சபையில் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது**


நியூயோர்க்,மார்ச் 9
சிரியாவில் கடந்த சில வருடங்களாக நடந்து வரும் உள்நாட்டு போரில் அரச படைகள் இரசாயன தாக்குதல் நடத்தியமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அங்குள்ள 3 கிராமங்களில் கடந்த வருடம் நடந்த போரின்போது அரச படைகள் குளோரின் வாயு தாக்குதலை நடத்தியுள்ளன. இதன்போது 13 பேர் கொல்லப்பட்டுள்ளதாக சர்வதேச இரசாயன ஆயுதத் தடை அமைப்புத் தெரிவித்துள்ளது.




இது குறித்து விவாதிப்பதற்காக ஐ.நாவின் பாதுகாப்பு சபை நேற்று முன்தினம் ஒன்று கூடியது. இதன்போது சிரியாவின் இரசாயன தாக்குதலுக்கு கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக கொண்டுவரப்பட்ட தீர்மானம் உறுப்பு நாடுகளின் ஆதரவுடன் நிறைவேறியது.
'சிரியாவில் எதிர்காலத்தில் இது போன்ற இரசாயன தாக்குதல் நடந்தால், ஐ.நா. சபை சாசனத்தின் படி கடுமையான பொருளாதார தடை மற்றும் இராணுவ நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும்' என அந்தத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.
பாதுகாப்புச் சபையின் 15 உறுப்பு நாடுகளில், சிரியாவின் நட்பு நாடான ரஷ்யா உட்பட 14 நாடுகள் தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தன. எனினும் வெனிசுலா மட்டும் தீர்மானத்தைபுறக்கணித்துள்ளது.(14)

## ரயில் மோதி 7 பேர் சாவு

கெய்ரோ,மார்ச் 9
எகிப்தில் பஸ் மீது ரயில் மோதி விபத்துக்கு உள்ளானதில் சிறுவர்கள் உட்பட 7 பேர் உயிரிழந்துள்ளனர். எகிப்து தலைநகர் கெய்ரோவில் மூன்று பஸ்களில் சுற்றுலா சென்ற பயணிகளின் பஸ் இஸ்மாலியா என்ற பகுதியில் ரயில் கடவையைக் கடக்க முற்பட்ட சமயம் அந்த வழியாக வந்த



ரயில், பஸ்ஸை மோதித்தள்ளியது. பஸ் தூக்கி வீசப்பட்டதால் அதில் இருந்த சிறுவர்கள் உட்பட 7 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்கள். விபத்தில் படுகாயம் அடைந்த ஏனையவர்கள் அருகில் உள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (14)



## புராதன அசிரியன் நகர் அழிப்பு ஐ.எஸ்.ஐ.எஸ். அட்டூழியம்


பாக்தாத்,மார்ச் 9
ஈராக்கில் மிகப் புராதன அசிரியன் நகரமான நிம்ருத்தை, ஐ.எஸ். ஐ.எஸ்., பயங்கரவாதிகள், 'புல்டோஸா' இயந்திரங்கள் மூலம் தரை மட்டமாக்கியுள்ளனர்.
ஈராக்கில், வரலாற்று பாரம்பரிய சின்னத்தை ஐ.எஸ்.ஐ.எஸ். அழிக்கத் துவங்கிவிட்டது என, அந்த நாட்டு அரசு தெரிவித்துள்ளது. ஆனால், எந்தெந்த பொருள்கள் அழிக்கப்பட்டன என்ற தகவல் இல்லை.
அசிரியன் ஆட்சிக் காலத்தில், தலை சிறந்து விளங்கிய நகரங்களில் ஒன்றான நிம்ருத். கி.மு. 13ஆம் நூற்றாண்டில் உருவானதுடன், ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரமான மோசூலின் தென் கிழக்கே டைக்ரஸ் நதிக்கரையில் அமைந்துள்ளது. மொசூல், தற்போது ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பின் ஆக்கிரமிப்பில் உள்ளது.
இந்த அமைப்பின் அடுத்த குறியாக நினேவெஹ் மாகாணத்தில் உள்ள, 2 ஆயிரம் ஆண்டுகள் பழைமையான, யுனெஸ்கோவால் உலகப் பாரம்பரிய சின்னமாக அறிவிக்கப்பட்ட, ஹட்ரா நகராக இருக்கலாம் என்று கூறப்படுகிறது. (14)



மலேசியன் ஏயர்லைன்ஸ் விமானமான எம்.ஹெச்.370 தலைநகர் கோலாலம்பூரில் இருந்து 239 பேருடன் சீனத் தலை நகருக்கு புறப்பட்டபோது காணாமற்போய் நேற்றுடன் ஒருவருடமாகின்றது. இதனை நேற்று மலேசியா நினைவு கூர்ந்துள்ளது. (14)

## இருவரின் தலை துண்டிப்பு

பக்தாத், மார்ச் 9
சிரிய அரசின் உளவாளிகள் என்று கருதப்படும் இருவரின் தலைகளை ஐ.எஸ். தீவிரவாதிகள் துண்டித்து சாவுத் தண்டனையை நிறைவேற்றியுள்ளனர். மேலும், வைன் அருந்தியதாக மற்றொருவருக்கு பொது இடத்தில் வைத்து சாட்டையால் அடித்து தண்டனை வழங்கியுள்ளனர்.
சிரியா மற்றும் ஈராக்கின் சில பகுதிகளைக் கைப்பற்றி தனியாக ஆட்சி நடத்தி வரும் ஐ.எஸ். தீவிரவாதிகள், பல கொடுமைகளை அரங்கேற்றி வருகிறார்கள். அதன் ஒரு பகுதியாக சிரிய ஜனாதிபதி ஆசாத்துக்கு உளவு வேலை பார்த்ததாகக் கூறி இரகசியமாக இருவரின் தலைகளைத் துண்டித்து உடல்



களை மலைப்பகுதியில் வீசியுள்ளனர்.
இதேவேளை– மற்றொருவர் வைன் அருந்தியதற்காக பொது இடத்தில் பலரின் முன்னிலையில் அவரை சாட்டையால் அடித்துள்ளனர். அங்கு கூடியிருந்த மக்களிடம் மது அருந்துவது இஸ்லாத்துக்கு எதிரானது என்று பரப்புரையையும் செய்துள்ளனர். (14)

## புதைந்த நகரம் கண்டுபிடிப்பு

யா, மார்ச் 9
ஹோண்டுராஸ் நாட்டில் வனப் பகுதியில் புதைந்த நகரம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஹோண்டுராஸ் நாட்டில் மஸ்கியூடியா பகுதியில் அடர்ந்த வனப்பகுதி உள்ளது. இங்கு மண்ணுக்குள் புகுந்த பழங்கால நகரம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 'லிடார்' என்ற அதிநவீன முறையில் விண்ணில்இருந்துகதிர்வீச்சுக்களை பாய்ச்சி அந்த நகரத்தை கண்டு பிடித்துள்ளனர்.
இது கி.பி. ஆயிரம் ஆண்டு முதல் ஆயிரத்து 400 ஆண்டு வரை இருந்திருக்க வேண்டும் என கணக்கிடப்பட்டுள்ளது.
இங்கு மண்ணுக்குள் புதைந்த பிரமிட்டுக்களும், அதில் புதைக்கப்பட்டவர்களின் மண்டை ஓடுகள் மற்றும் எலும்புக்கூடுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. எனவே, இந்த நகரத்தில் மனிதர்கள் நாகரிகத்துடன் வாழ்ந்திருக்கின்றனர் என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.
இந்த நகரத்துக்கு வெள்ளை நகரம்



**மண்ணுக்குள் புதைந்த பிரமிட்டுக்களும், அதில் புதைக்கப்பட்டவர்களின் மண்டை ஓடுகள் மற்றும் எலும்புக்கூடுகளும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.**

அல்லது குரங்கு கடவுள் நகரம் எனப் பெயரிடப்பட்டுள்ளது. புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட புதையுண்ட நகரத்தை பாதுகாக்கும் நடவடிக்கையில் ஹோண்டுராஸ் அரசு ஈடுபட்டுள்ளது. (14)

## காணாமற்போன இருவரின் சடலங்கள் 55 வருடங்களுக்குப் பின்னர் மீட்பு

மெக்ஸிக்கோ,மார்ச் 9
கடந்த 55 வருடங்களுக்கு முன்னர் மலையில் காணாமற் போன இருவரின் உடல்கள் மம்மிகளாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
மெக்ஸிக்கோ மாநிலத்தில் மிக உயரமான பனிமலை சிகரத்தை கொண்டுள்ள சிட்டெல் பெட்ல் மலைப்பகுதி உள்ளது. இந்த மலையின் உச்சியை அடைய முயன்று பலர் தோல்வியைத் தழுவியுள்ளனர். சிலர் காயங்களுடன் தப்பிப் பிழைத்துள்ளனர். சிலர் மேலே ஏறியதுடன் கீழே இறங்கி வந்து சேரவில்லை. அவர்கள் மாயமாகி விட்டனர். இந்த நிலையில் கடந்த 55 வரு டங்களுக்கு முன்னர் இந்த மலைக் குச் சென்ற இருவர் காணாமற் போயிருந்தனர்.
18 ஆயிரம் அடி உயரமுள்ள அந்த மலைச்சிகரத்தில் மம்மி எனப்படும் பதப்படுத்தப்பட்ட உடல்களாக அடுத்தடுத்து இரு சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்



டுள்ளது. மலைப்பகுதியில் ஏற்பட்ட பனிச்சரிவில் சிக்கி இவர்கள் இருவரும் சாவடைந்திருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. அந்தச் சடலங்களில் இருக்கும் கிழிந்த உடைகளை வைத்து அவர்கள் யார் மற்றும் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காண முயற்சிகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பில் செய்திகள் வெளியானதும் ஜேர்மன் மற்றும் ஸ்பெயின் நாட்டில் இருந்து தொடர்ந்து தொலைபேசி அழைப்புக்கள் வருவதாகவும், எதிர்முனையில் பேசியவர்கள் அது தங்களது உறவினரின் உடலாக இருக்கலாம் என சந்தேகிப்பதாக தெரிவித்துள்ளனர். உரிமை கோருபவர்களின் மரபணுக்கள் சடலங்களின்; மரபணுக்களோடு ஒத்துப் போனால் உரியவர்களிடம் உடல்கள் ஒப்படைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (14)

# சர்வதேச விசாரணை

## அறிக்கை வெளியிடப்படலாம் என்பதை இலங்கை அரசும் ஏற்றுக்கொண்டுள்ளது

### இது மிகப் பெரிய முன்னேற்றமாகும்

கடந்த முதலாம் திகதி வவுனியாவில் நடைபெற்ற இலங்கை தமிழரசுக் கட்சி மத்திய செயற்குழு கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் சமர்ப்பித்து கட்சியின் நிலைப்பாடாக ஏற்றுக்கொள்ளப்பட்ட அறிக்கை



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் இலங்கை சம்பந்தமான சர்வதேச விசாரணை அறிக்கையை இந்த வருடம் மார்ச் மாதத்திலிருந்து செப்ரெம்பர் மாதம் வரை பிற்போடுவதற்கு பரிந்துரை செய்தமை சம்பந்தமாகவும், அந்த இடைப்பட்ட காலத்தில் உள்நாட்டு பொறிமுறை ஒன்று ஏற்படுத்தப்படுவது சம்பந்தமாகவும் இந்த விடயங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் எனது பங்களிப்பு பற்றியும் சில வார்த்தைகள் நான் பேசுவது பொருத்தமாக இருக்கும் என நம்புகிறேன்.
சென்ற வருடம் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட வேளையில் நடந்த சில சம்பவங்களை முதலில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். நாங்கள் 2011ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் அமெரிக்க இராஜாங்க அமைச்சோடு பேசிய பிறகுதான் இப்படியானதொரு தீர்மானத்தை முன்னெடுத்து நிறைவேற்றுவதற்கு அமெரிக்கா முன்வந்தது.
நாங்கள் தொடர்ச்சியாக சர்வதேச விசாரணையை கேட்டிருந்த போதும் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டும் இலங்கை அரசு ஒரு விசாரணையை நடத்த வேண்டும் என்று தான் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. 2013ஆம் ஆண்டு மிக முக்கியமான சொற்பதம் ஒன்று அந்தத் தீர்மானத்துக்குக் கொண்டுவரப்பட்டது. நிலைமாறும் நீதி என்பது உடனடியான குற்றங்களுக்கு தண்டனை மட்டுமல்லாது இந்த பிரச்சினையின் மூல காரணம், அதன் இறுதி தீர்வு என்ற பின்னணியையும் கருத்திற்கொண்டு அந்த சூழ்நிலைக்கு எது பொருத்தமான நீதி என்பதை தீர்மானிக்கும் ஒரு கோட்பாடாகும். இறுதியில் 2014 ஆம் ஆண்டு ஒரு சர்வதேச விசாரணை ஏற்படுத்தப்பட்டது. அதிலும் 10 ஆவது பந்தியின் முதற் பகுதியில் உயர் ஸ்தானிகர் தேசிய பொறிமுறைகளை மேற்பார்வை செய்ய வேண்டும் என்றும் அடுத்ததாக தானாகவே உரிய நிபுணர்களின் உதவியுடன் ஒரு சர்வதேச விசாரணையை நடத்த வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அதாவது உள்ளக பொறிமுறைகளை மேற்பார்வை செய்கிற அதே உயர் ஸ்தானிகர் அவற்றுக்கு சமாந்திரமாக ஒரு சர்வேதேச விசாரணையையும் நடத்த வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. இதனை தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு உத்தியோகப்பூர்வமாக வரவேற்றது. அந்த நேரத்திலும் கூட பலர் போதிய விளக்கம் இன்மையினாலோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ இந்த தீர்மானத்தில் சர்வதேச விசாரணை கிடையாது என்று சொல்லி எதிர்த்தார்கள். இவர்களில் சுரேஷ் பிரேமச்சந்திரன், திருமதி அனந்தி சசிதரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் அடங்குவர். அந்த வேளையிலே அவர்கள் செய்த ஊடக அறிக்கைகளை நான் இப்போது சமர்ப்பிக்கிறேன். இதற்கு மேலதிகமாக திருமதி அனந்தி சசிதரன் பெப்ரவரி மாதத்திலே என்னோடு ஜெனிவாவுக்குச் சென்றிருந்த வேளையிலே நான் தன்னை பேச விடாமல் தடுத்ததாகவும் நான் கூட்டங்களில் பேசியபோது சர்வதேச விசாரணையை கோரியிருக்கவில்லை என்றும் மார்ச் 7ஆம் திகதியளவில் குற்றம் சாட்டியிருந்தார். அவருடைய இந்தக் குற்றச்சாட்டு முற்றிலும் பொய்யானது என்பதை ஜெனிவாவிலிருந்து திரும்பிய கையோடு தானாகவே ஊடகங்களுக்கு கொடுத்த செவ்விகளில் நிரூபணமாகிறது. அவற்றில் மூன்றை நான் மேற்கோள் காட்டுகிறேன். இப்படியாக இதிலே சர்வதேச விசாரணை இல்லையென்று இவர்கள் விமர்சித்தபோது, அப்படியாக இந்த தீர்மானத்தை விமர்சிக்க வேண்டாம் என்றும் இதிலே சர்வதேச விசாரணை உள்ளடங்கியிருக்கிறது என்றும் ஜெனிவாவிலிருந்த போதே பல தடவைகள் நான் வேண்டுகோள் விடுத்திருந்தேன். தமிழ் பத்திரிகைகளில் முக்கிய செய்திகளாக பிரசுரமான என்னுடைய அந்த வேண்டுகோள்களை நான் சமர்ப்பிக்கிறேன். இந்த தீர்மானத்துக்கு இன்னும் கூடுதலான எண்ணிக்கையான நாடுகள் ஆதரவு கொடுக்காமல் விட்டதற்கு இவர்களுடைய இந்த பொய்ப் பரப்புரை ஒரு முக்கிய காரணம் என்பது என்னுடைய கருத்து. அது மட்டுமல்லாமல் ஐக்கிய நாடுகள் மண்டபத்துக்கு வெளியிலே புலிக் கொடிகளுடன் லண்டனிலிருந்து நடைபயணமாக வந்தவர்கள் இந்தத் தீர்மானத்தின் நகல்களை எரித்ததும், தமிழ் நாட்டிலே அமெரிக்க சிற்றுண்டிச்சாலைகளைத் தாக்கியதும் இதற்கு மேலதிக காரணங்கள். இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பிறகும் கூட பல மாதங்களாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இந்த தீர்மானத்தில் சர்வதேச விசாரணை இல்லை என்றும் இது தமிழ் மக்களின் அரசியல் போராட்டத்தை பலவீனப்படுத்துகின்ற ஒரு பொறிமுறை என்றும் பல தடவைகள் ஊடக அறிக்கைகள் விடுத்தது உங்களுக்கு ஞாபகம் இருக்கும். ஆனால் விசாரணை ஆரம்பமானவுடன் அதற்கு சாட்சியங்கள் சேகரிப்பதாக பிழையான வழிமுறைகளை அறிவித்து அச்சிட்ட படிவங்களை விநியோகித்து அந்த விசாரணையினுடைய முக்கியத்துவத்தை வெகுவாக குறைத்தார்கள். ஆனால் ஏதோ தாங்கள் தான் இந்த சர்வதேச விசாரணையை நடத்துவதாக காட்டிக்கொண்டார்கள்.
இந்த சர்வதேச விசாரணையை வெகுவாக பாதிக்கிற வண்ணமாக இவற்றை எல்லாம் செய்த அதே ஆள்கள் இப்பொழுது மீண்டும் தவறான தகவல்களை கொடுத்து மக்களை பிழையாக வழி நடத்த முற்படுகிறார்கள். இப்படியான வேளையிலே அவர்களுக்கு போட்டியாக நாங்கள் செயற்படாமல் தமிழ் மக்களுடைய உண்மையான பிரதிநிதிகள் என்ற வகையில் அவர்களுக்கு உண்மையை எடுத்து கூறவும் இதனை சரியான விதத்தில் கையாள வேண்டிய பொறுப்பும் எம்மைச் சார்ந்தது.
அறிக்கை பின் போடப்பட்டது சம்பந்தமாகவும் உள்ளக பொறிமுறை சம்பந்தமாகவும் பலருக்கு இருக்கின்ற தெளிவின்மை நீக்கப்பட வேண்டும். இந்த மாதம் வெளிவரவிருந்த அறிக்கையை பின்போடுவதற்கான முயற்சிகள் ஆரம்பமான வேளையிலேயே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஜனவரி 26 ஆம் திகதி மனித உரிமை உயர் ஸ்தானிகருக்கு கடிதம் மூலம் எமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தி இருந்தார். அறிக்கை தாமதம் இல்லாமல் வெளிவருவதே எமது மக்களின் எதிர்பார்ப்பு என்றும் உண்மை கண்டறியப்படுவதன் அடிப்படையிலே மட்டும்தான் உண்மையான நல்லிணக்கம் காணப்பட முடியும் என்றும் வலியுறுத்தி இருந்தார்.
இதே கால கட்டத்தில் இந்த தீர்மானத்தை முன்மொழிந்த நாடுகளாகிய அமெரிக்காவோடும் பிரித்தானியாவோடும் நாம் பேச்சு நடத்தினோம். தலைவரின் பிரதிநிதியாக நான் ஜெனிவாவுக்கும் சென்று உயர் ஸ்தானிகரின் அலுவலகத்தில் உயர் அதிகாரிகளோடும் விசாரணை குழு தலைவியோடும் பேச்சுவார்த்தை நடத்தினேன். எங்களுடைய நிலைப்பாட்டில் எந்தவிதமான மாற்றத்தையும் நாங்கள் தெரிவிக்கவில்லை. ஆனால் எங்களுடைய வேண்டுகோளுக்கும் மாறாக அறிக்கையை பின்போடுவதற்கான தீர்மானம் தற்போது எடுக்கப்பட்டிருக்கிறது.
அதற்கான காரணங்களையும் இலங்கை அரசிடமிருந்து பெற்றுக் கொண்ட வாக்குறுதிகளையும் உயர் ஸ்தானிகர் மிக தெளிவாக அறிவித்திருக்கிறார். காலதாமதத்தால் ஏற்படுகின்ற ஏமாற்றத்தை தவிர மற்ற எல்லா வகையிலும் இந்த பிற்போடுதல் எமக்கு நன்மையாக அமையும் என்பதே எனது கருத்து. இலங்கை அரசே சர்வதேச விசாரணை அறிக்கை செப்ரெம்பர் மாதத்தில் வெளியிடப்பட வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்திருக்கின்றது. இதுகாலவரைக்கும் சர்வதேச விசாரணை என்பதை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளாத இலங்கை அரசு இப்பொழுது அப்படியானதொரு விசாரணை அறிக்கை வெளியிடப்படலாம் என்று கூறி இருப்பது மிகப் பெரியதொரு முன்னேற்றமாகும்.
உயர் ஸ்தானிகர் தன்னுடைய அறிவித்தலில் இந்த கால தாமதம் புதிய, முக்கியமான சாட்சியங்கள் வெளிவருவதற்கான சந்தர்ப்பமாக இருக்கக்கூடும் என்றும் அதன் மூலமாக முழுமையானதும் கூடிய பலமுள்ளதுமான ஓர் அறிக்கை செப்ரெம்பரில் வெளிவரும் என்றும் நம்பிக்கை தெரிவித்து இருக்கிறார். இது ஒரு தடவை மட்டும் செய்யப்படுகிற தாமதம் என்றும் இந்த அறிக்கை செப்ரெம்பர் மாதம் நிச்சயமாக வெளிவரும் என்பதற்கான தன்னுடைய, தனிப்பட்ட, முழுமையான, அசைக்க முடியாத வாக்குறுதியை கொடுப்பதாக சொல்லியிருக்கிறார். சென்ற ஒக்ரோபர் மாதம் விசாரணை குழுவினரை நான் ஜெனிவாவில் சந்தித்துப் பேசிய பொழுது ஒன்பது மாத குறுகிய காலத்துக்குள் இப்படியான விசாரணை ஒன்றை நடத்துவது குறித்த தக்களுடைய கஷ்டத்தை எனக்கு தெரியப்படுத்தி இருந்தார்கள்.
இந்த பின்னணியில் செப்ரெம்பர் மாதத்தில் கூடுதலான பலமிக்க அறிக்கை வெளிவருவது, குறைபாடான அறிக்கை ஒன்று மார்ச் மாதத்தில் வெளிவருவதை விட எவ்வளவோ மேலானது
இந்த இடைப்பட்ட காலத்தில் உயர் ஸ்தானிகரின் அலுவலகத்தோடு ஒத்துழைப்பதாக இலங்கை அரசு வாக்குறுதி கொடுத்திருக்கிறது. நிலைமாறும் நீதிக்கான ஐ.நா. நிபுணர்களையும் மற்றவர்களை யும் வரவேற்பதாகவாக்குறுதி கொடுத்துள்ளது. உள்நாட்டு பொறிமுறை ஒன்றை ஏற்படுத்துவதாகவும் அதை தயார் செய்வதற்கு உயர் ஸ்தானிகருடைய அலுவலகத்தின் தொழிநுட்ப உதவியைக் கோரியிருக்கிறார்கள். இது சென்ற வருடம் நிறைவேற்றப்பட்ட நாங்கள் வரவேற்ற தீர்மானத்தோடு இணங்கிப் போகின்ற செயற்பாடு ஆகும். செப்ரெம்பர் மாதத்திலே வெளி வர இருப்பது சர்வதேச விசாரணையின் அறிக்கை. உள்நாட்டு விசாரணையின் அறிக்கை அல்ல. உள்நாட்டு பொறிமுறை என்பது சர்வதேச விசாரணைக்கு மாற்றீடான ஒன்றல்ல; அதற்கு மேலதிகமான ஒன்று. சர்வதேச விசாரணை அறிக்கை வெளிவரும் போது சம்பந்தப்பட்ட நாடு அதை ஏற்றுக் கொள்ளாமல் இருந்தால் அந்த அறிக்கை ஜெனிவாவிலே புத்த அறையிலே வைக்கப்பட்டிருக்கும். நாட்டின் ஒத்துழைப்பு இல்லாமல் அதன் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது கடினம். பாதுகாப்பு சபையின் ஊடாக செயற்படக்கூடிய ஒரு வழி இருந்தாலும் நட்பு நாடுகளின் வீற்றோ அதற்குத் தடையாக இருக்கக் கூடும். சர்வதேச விசாரணையை நடத்துகிற அதே உயர் ஸ்தானிகர் உள்ளக பொறிமுறையையும் ஏற்படுத்துவதிலே ஈடுபடுபவராக இருந்தால் அந்த பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துவதற்கான பொறிமுறை ஒன்று ஏற்படுத்தப்படும்.
இலங்கை அரசு இது சம்பந்தமாக கொடுத்த வாக்குறுதிகளை மீறி செயற்படுவதாக இருந்தால் அடுத்த நடவடிக்கைகளை எடுப்பது இலகுவாக இருக்கும்.
உள்நாட்டு விசாரணையில் எமக்கு நம்பிக்கை இல்லை என்பது உண்மை. ஆனால் தற்போது இலங்கை கொடுத்திருக்கின்ற வாக்குறுதி சர்வதேச தலையீடு இல்லாமல் முற்று முழுதாக இலங்கை அரசு நடத்தும் விசாரணையைப் பற்றி குறிப்பிடவில்லை. அது நாங்கள் ஏற்கனவே ஏற்றுக்கொண்ட தீர்மானத்தில் குறிப்பிடப்பட்ட உயர் ஸ்தானிகரால் மேற்பார்வை செய்யப்படுகிற ஒரு பொறிமுறையை குறிக்கிறது. சர்வதேச விசாரணையின் பெறுபேறுகள் நடைமுறைபடுத்தப்படுவதற்கு இத்தகையதொரு பொறிமுறை அத்தியாவசியமானதாகும்.
ஆகையால் உள்நாட்டு விசாரணை வேண்டாம் என்று கோஷம் எழுப்பி, ஏதோ சர்வதேச விசாரணையை கைவிட்டு விட்டு முற்று முழுதாக அரசின் கண்துடைப்பு விசாரணை தான் நடக்கப்போகின்றது என்று மக்கள் சந்தேகப்பட்டு அங்கலாய்க்க நாம் இடமளிக்கக் கூடாது. பலமான சர்வதேச விசாரணை அறிக்கை ஒன்று செப்ரெம்பர் மாதம் வெளிவரும் என்ற உண்மையை மக்களுக்கு சொல்ல வேண்டும். அந்த அறிக்கையின் பெறுபேறுகள் நடைமுறைபடுத்தப்படுவதற்கு உயர் ஸ்தானிகரின் மேற்பார்வையின் கீழான ஓர் உள்ளக பொறிமுறையும் அவசியம் என்பதையும் நாம் மக்களுக்கு சொல்ல வேண்டும். சர்வதேச விசாரணைக்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போது அதிலே சர்வதேச விசாரணை இல்லை என்றும் அது உதவாத தீர்மானம் என்றும் மக்களுக்கு பொய் சொல்லி குழப்பம் விளைவித்த அதே நபர்கள் மீண்டும் அறிக்கை பின்போட்டதையும் உள்ளக பொறிமுறை பற்றியும் உண்மைக்கு புறம்பான கருத்துக்களை கூறி மக்களை குழப்புவிக்க நாம் அனுமதிக்க முடியாது.
இது குறித்த எமது தெளிவான நிலைப்பாட்டை பயமில்லாமல் மக்கள் முன் வைக்கவேண்டியது எமது மிகப்பெரிய கடமை என்பதை நான் வலியுறுத்த விரும்புகின்றேன்.

# வாசகர் திருமுகம்



## ஓட்டோ கட்டணங்கள் குறையுமா?

**யாழ்.**பஸ் நிலையத்துக்கு முன்னால் ஆஸ்பத்திரி வீதியில் தரித்து நிற்கும் ஓட்டோ' சாரதிகள் மிக அநியாயமான வகையில் கட்டணங்களை அறவிடுகிறார்கள். எரிபொருள் விலை குறைந்த பின்னாலும் இவர்கள் பழைய கட்டணங்களையே அறவிட முயல்கிறார்கள். தூர இடங்களிலிருந்து மூடை மூடிச்சுகளோடு களைத்து வரும் பயணிகள் குறுந்தூரங்களுக்கு பஸ்களில் செல்வதில் ஏற்படும் கால தாமதங்களுக்காகவும், சில வீதிகளில் அரச பஸ்களோ தனியார் ஊர்திகளோ சேவையில் ஈடுபடாத காரணத்தாலும் ஓட்டோக்களையே நாடவேண்டியுள்ளது.

இதைக்கருத்தில்கொண்ட ஓட்டோ சாரதிகளில் (ஓரிரு வரைத் தவிர) பெரும்பாலானவர்கள் தாங்கள் நினைத்தபடி கட்டணஅறவீட்டை மேற்கொள் கின்றனர். இதனை எதிர்த்துப் பிர யாணிகள் கேட்டால் சாரதியும், சகபாடிகளான ஏனையவர்களும் பிரயாணிகளுடன்தகராறு செய்கின்றனர். சில பயணிகள் வேறுவழியின்றி சாரதிகள் கேட்கும் பணத்தைக் கொடுத் துப் பிரயாணம் செய்ய வேண்டிய நிலைக்கும் தள்ளப்படுகிறார்கள்.

இவர்களில் சிலர் தங்களைத் தட்டிக் கேட்க எவருமில்லை என்ற வகையில் 'சண்டித்தன' முறையில் வார்த்தைப் பிரயோகங்களில் ஈடுபடுகின்றனர். இந்த நிலையை மாற்றுவதற்குத் தலைநகர் கொழும்பிலும் ஏனைய இடங்களிலும் இருப்பதைப் போன்று "மீற்றர்" முறையை யாழ்.நகரிலும் கடைப்பிடிக்குமாறு மாகாண முதலமைச்சரும், போக்குவரத்து அமைச்சரும் மற்றும் பொறுப்பான ஏனையவர்களும் ஆவனசெய்வார்கள் எனப் பாதிக்கப்பட்ட என் போன்ற ஏனைய பயணிகளும் எதிர்பார்க்கிறார்கள். "மீற்றர்" முறை நடைமுறைக்கு வரும் வரை நியாயமான கட்டண விவரப்பட்டியலை அச்சிட்டு பயணிகளின் பார்வைக்கும் தெரியும்படி சாரதிகள் வைத்திருக்க வேண்டும். இதனால் பயணிகளின் அவலத்தைப் போக்க முடியுமென எதிர்பார்க்கின்றோம்.

குறிப்பு:- இரண்டு கிலோ மீற்றர் தூரத்துக்கு 250ரூபாவை ஓட்டோ சாரதிகள் கட்டணமாகக் கேட்கிறார்கள். இது மிகவும் பாரதூரமான செயலாகும். உரிய அதிகாரிகள் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென எதிர்பார்க்கின்றோம்.

*க.பேரின்பதாசன்,*
*கொக்குவில்.*

## ஒழுங்கையின் அவலநிலை மாறாதா?

**யாழ்.**நகரின் முக்கியமான பகுதியில் அமைந்துள்ள கஸ்தூரியார் வீதியின் முதலாவது ஒழுங்கை மக்கள் பாவனைக்கு உதவாத வகையில் மோசமாகச் சேதமடைந்து காணப்படுகின்றது.

இந்த ஒழுங்கையின் சகல பகுதிகளும் கற்கள் சிதறிக் காணப்படுவதுடன், ஆங்காங்கு பள்ளங்களும் காணப்படுகின்றன. இதனால் மழை காலங்களில் இந்த ஒழுங்கையைப் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது. பள்ளங்களில் தேங்கி நிற்கும் மழை வெள்ளம் காரணமாக நடந்து செல்ல முடியாத நிலையில் மக்கள் அவதிப்படுகின்றனர்.


மேலும், இந்த ஒழுங்கையின் இருபுறமும் பல குடும்பங்கள் வசித்து வருவதும் இங்கு குறிப்பிடத்தக் கது.

இதேவேளை, கஸ்தூரியார் வீதியிலிருந்து இந்த ஒழுங்கை ஆரம்பிக்கும் இடத்தில் கழிவுப் பொருள்கள் கொட்டப்படுவதையும் காண முடிகின்றது. இதனால் சுகாதாரக் கேடும் நிலவுகின்றது.

பல ஆண்டுகளாக கவனிப்பாரற்ற நிலையில் காணப்படும் இந்த ஒழுங்கையை மக்கள் பயன்படுத்தும் வகையில் புனரமைத்து வழங்குவது யாழ்.மாநகர சபையினரின் கடமையல்லவா!

*மு.பரணிதரன், கஸ்தூரியார் வீதி.*

## கேலிச் சித்திரம்




*நன்றி: லங்காதீப*

## கொலை செய்தவர்களுக்கு அஞ்சலி; அப்படியானால் கொல்லப்பட்டவர்களுக்கு... ?

**பா**ரதப் பிரதமர் நரேந்திர மோடி எதிர்வரும் வெள்ளிக்கிழமை இலங்கைக்கு வருகை தருகின்றார். 28 வருடங்களின் பின்னர் இந்தியப் பிரதமர் ஒருவர் இலங்கைக்கு வருவது இதுவே முதல் முறை. இந்தியப் பிரதமரது பயண ஒழுங்கிலே, இலங்கையில் கொல்லப்பட்ட இந்திய இராணுவ வீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவதும் இடம்பெற்றிருக்கின்றது. 28 வருடங்களுக்கு முன்னர் வந்த, அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு அந்தத் தேவை இருந்திருக்கவில்லை.

இலங்கையில் கொல்லப்பட்ட இந்தியப் படையினருக்கு, இந்தியப் பிரதமர் அஞ்சலி செலுத்துவதில் தவறு எதுவும் இல்லை. ஆனால் கொல்லப்பட்ட இந்தியப் படையினருக்கு அஞ்சலி செலுத்தும் பாரதப் பிரதமர், தனது படைகளினால் அன்று கொல்லப்பட்டவர்களுக்கு அஞ்சலி செலுத்துவாரா ? அல்லது அவர்களுக்காக ஒரு நிமிடமாவது பிரார்த்தனை செய்வாரா ?

அமைதிப்படையாக இங்கு வந்திறங்கிய இந்தியப் படையினர், தமிழ் மக்களை தேடித் தேடிக் கொன்று குவித்தனர். இவர்களைவிட சிங்கள இராணுவம் எவ்வளவோ மேல் என்று தமிழ் மக்கள் கருதுமளவுக்கு இந்தியப் படையினரின் கொலை வெறியாட்டம் நடந்தது. வைத்தியசாலைக்குள் புகுந்து, சுட்டுக் கொல்லும் அளவுக்கு ஈவிரக்கமற்றவர்களாக இருந்தவர்கள் இந்தியப் படையினர்.

1987 ஆம் ஆண்டு தொடக்கம் 1990 ஆம் ஆண்டு வரையில் இந்தியப் படையினரால் நேரடியாக ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். அத்துடன் பலர் காணாமற் போயினர். இந்தியப் படையினர் இந்தியாவுக்குத் திரும்பி 25 ஆண்டுகள் கடந்தும் காணாமற் போனவர்களின் கதி என்னவென்று தெரியாத நிலையே நீடிக்கின்றது.

இதற்கு மேலாக, அஹிம்சை வழியில் போராடி, ஒரு சொட்டு நீராகாரமுமின்றி உண்ணா நோன்பிருந்து உயிர் துறந்த திலீபனை மறக்க முடியாது. திலீபன் சாகவில்லை. இந்தியாவால் ஈழத்தில் சாகடிக்கப்பட்டவன் அவன்.

இதன் பின்னர், இறுதிக் கட்டப் போரில், இலங்கை இராணுவத்துடன் கூட்டுச் சேர்ந்து லட்சக்கணக்கான தமிழ் மக்களைக் கொன்றொழித்தனர். இவ்வாறு இரண்டு கட்டங்களாக இலங்கைத் தமிழர்களைக் கொன்றொழித்தவர்கள் இந்திய இராணுவத்தினர். அவ்வாறு தமிழ் மக்களைக் கொலை செய்த இராணுவத்தினருக்கு அஞ்சலி செலுத்தும் மோடி, அந்த இராணுவ வீரர்களால் கொல்லப்பட்ட மக்களுக்கு அஞ்சலி செலுத்தத் தயங்குவது ஏன்?

ஈழத்தமிழர்களின் உறவு என்று சொல்லிக் கொள்ளும் இந்தியா இந்த விடயத்தில் பின் நிற்கின்றது. வெள்ளைக்காரனைக் கொண்ட, எங்களுடன் எந்தச் சம்பந்தமும் இல்லாத, கனேடிய அரசு பொதுநலவாய மாநாடு இலங்கையில் நடந்த போது, அந்த நாட்டின் சார்பில் கலந்து கொண்ட துணை வெளிவிவகாரச் செயலர் ஓபிராய், போரில் கொல்லப்பட்ட மக்கள் நினைவாக ஆனையிறவில் மலர்வளையம் வைத்து அஞ்சலித்தார்.

அது ஒருபுறம் இருக்கட்டும். திலீபன் உண்ணாவிரதம் இருந்தபோது எட்டியும் பார்த்திராத இந்திய அரசுத் தலைவர்கள் இப்போதாவது அவன் நினைவுத் தூபிக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்துவார்களா...? அந்த மன மாற்றம் வருமா...?

பத்தி எழுத்து

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## இலங்கைத் தமிழ்த் தலைவர்களுக்கு இந்திய அமைச்சரின் இடித்துரைப்பு

இலங்கை வாழ் தமிழ் மக்கள் ஒன்றுபட்டு, தாம் இழந்த உரிமைகளுக்காகப் போராடுவதானது தமிழ் மக்களுக்கு மட்டும் பயனளிப்பதாக இருக்காது. தூரப்பார்வையில் அது இலங்கை நாட்டின் நீடித்த அமைதிக்கும் வளர்ச்சிக்கும் மட்டுமன்றி, அண்டை நாடான இந்தியாவுக்கும் அதன் சர்வதேச மூலோ பாய செயற்பாடுகளுக்கும்கூட உதவியாக இருக்கும் என்பதையே, இலங்கை வந்திருந்த இந்திய வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜ் தெரிவித்துள்ள கருத்துக்கள் எடுத்துக்காட்டுகின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள் கொழும்பில் அவரைச் சந்தித்துப் பேசியபோது, த.தே.கூட்டமைப்பு ஒற்றுமையாக இருந்து செயற்பட வேண்டும். அவர்கள் அவ்வாறு ஒற்றுமையாக இருப்பதை வெளியில் இருந்து பார்ப்பவர்கள் உணரவேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மக்களும், பெரும்பான்மையினரும் ஒற்றுமையாக இருந்து செயற்பட்டதனால்தான் இலங்கையில் ஆட்சி மாற்றத்தைக் கொண்டுவர முடிந்தது. ஆட்சிமாற்றம் ஏற்பட்டதனால்தான், இலங்கை அரசுக்கும் இந்திய அரசுக்குமிடையில் நட்புறவு மேலோங்கியுள்ளது. அதனால் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்தியாவுக்கு சுமுகமான பயணம் ஒன்றை மேற்கொள்ளவும், எங்கள் நாட்டுப் பிரதமர்அதே விதமாக இலங்கை வரவிருப்பதும் குறுகிய காலத்தில் சாத்தியமாயிற்று. இரு நாடுகளுக்குமிடையில் பாதிக்கப்பட்டிருந்த உறவுகள் மேம்படவும், சீனாவின் செல்வாக்கு இங்கு ஆதிக்கம் பெற்றிருந்தமை குறையவும் காரணமாயிற்று.

எனவே தான், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்தும் ஒற்றுமையாக இருப்பது அவசியம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பானது ஒரு ஜனநாயக அமைப்பு. அதற்குள் கருத்து முரண்பாடுகள் ஏற்படுவது வழக்கம் என்பதுபோல் கூட்டமைப்பின் தலைவர் சமாதானம் கூறியுள்ளார்.

ஆனால் கருத்து வேறுபாடுகள் கட்சிக்குள்ளேயே தீர்க்கப்பட்டுக் கொள்வதுதான் ஜனநாயகம். ஆனால் அண்மையில் முக்கிய சில தலைவர்களின் கொடும்பாவிகள் எரிக்கப்பட்டமையும், சில இடங்களில் தலைவர்களின் படங்கள் வெறுப்பூட்டும் வகையில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தமையும் சாதாரண விடயமல்ல.

நாடுமுழுவதும் ஊடகங்களில் இந்த விடயம் பரப்புரை செய்யப்பட்டது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குள் முரண்பாடுகள் முற்றி வருவது போன்று காட்டப்பட்டது. தமிழ்த் தரப்பு உறுப்பினர்கள் தமிழரசுக்கட்சியின் மத்திய குழுவினால் விமர்சிக்கப்பட்டிருந்தனர். இவற்றைப் அவதானித்தே, இந்திய வெளியுறவு அமைச்சர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் தொடர்ந்து ஒற்றுமை நிலவ வேண்டும் என்பதை வலியுறுத்தி இருக்கிறார் என்று கொள்ளலாம், கருதலாம்.

கொடும்பாவிகளைப் பகிரங்கமாக எரித்தவர்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் எவரும் அதனை ஏற்றுக்கொள்ளவில்லையென்றால், கட்சிக்குள் இருக்கும் கருத்து வேறுபாடுகளை, அதன் விரோதிகள் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வேறுபாடுகளை விதைத்துவிட முயற்சிக்கிறார்கள் என்பது அர்த்தமாகின்றது. அவ்வாறான ஒரு பாதகமான நிலைமை தமிழர், ஒற்றுமைக்கு ஊறுவிளைவிக்கும் என்பதையும் விட, தமிழர் நலன்களையும் பாதிக்கும் என்பது உறுதி.

வடமாகாண சபைத்தேர்தலின்போது வெளிப்பட்ட ஒற்றுமை, ஜனாதிபதித் தேர்தலின்போது மேலும் வளர்ந்திருந்தமையும் அதனால் நாட்டில் ஆட்சிமாற்றம் ஏற்பட்டமையும் கவனத்துக்குரியது. ஜனாதிபதித் தேர்தலின்போது த.தே.கூட்டமைப்பினர் கடைப்பிடித்த நிலைப்பாட்டைக் கண்டித்தவர்கள் தேர்தலின் பின்பு அதனால் ஏற்பட்ட பயன்களைத் தமக்கும் சாதகமாக்கிக் கொள்ள முற்பட்டதையும் காணக்கூடியதாக இருந்தது.

எதுவானாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்டுக்கோப்பு சிதைவுறாமல் பார்த்துக்கொள்வதும், வரப்போகின்ற பொதுத்தேர்தலின்போது தமிழர் நலன்கள் பாதிப்புறாமல் இருக்கச் செய்வதும் அவசியம். உணர்ச்சி வசப்பட்டு செயற்படாமல் நிலைமைகளை நிதானத்துடன் அணுகி, சாணக்கியமாக செயற்பட வேண்டியகாலம் இது.

# வடஇலங்கையில் நடந்தேறும் பெரிய அளவிலான சூழல் இடர்

பேராசிரியர் தயாசோமசுந்தரம்,
யாழ். பல்கலைக் கழகம்

வட இலங்கையில் மிகப் பெரிய சூழல் இடர் ஒன்றுக்கான முன் அறிகுறிகள் ஏற்கனவே தென்படத் தொடங்கி விட்டன. இங்கு வாழும் இரண்டரைலட்சத்துக்கும் அதிகமான மக்கள் தமது நிலத்தடி நீர் எண்ணெய்க் கழிவுகளால் மாசடைந்து செல்வதை அவதானித்து வருகின்றனர்.

2013– 2014 காலப் பகுதியில் சேகரிக்கப்பட்ட கிணற்று நீர் மாதிரிகள் மூலம் சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்திலிருந்து 1.5 கிலோமீற்றர் விட்டமாகக் கொண்ட பரப்பில் உள்ள கிணறுகளில் 73 வீதமானவை ஏற்றுக் கொள்ளப்பட்ட அளவிலும் அதிகமான எண்ணெய்க் கூறு மட்டங்களைக் கொண்டிருந்தது கண்டறியப்பட்டது. இன்று 4 கிலோ மீற்றர் விட்டப் பரப்பில் உள்ள கிணறுகள் எண்ணெய் மாசடைதலுக்கு உட்பட்டிருப்பதாக ஊர் மக்கள் தெரிவிக் கின்றனர்.

இந்த மாசடைவின் சுகாதார, சூழல் மற்றும் நீண்ட கால பாதிப்புக்கள் குறித்து இன்னும் அறியப்படவில்லை. தேசியநீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்பு சபையினால் அண்மையில் வெளியிடப்பட்ட அறிக்கை "கழிவு எண்ணெயால் மாசுபடுத்தப்பட்ட நீரைத் தொடர்ந்து பாவிப்பது புற்றுநோய், கருச் சிதைவு முதலிய பாதிப் புக்கள் உருவாவதோடு குழந்தை வளர்ச்சி, தோல் மற்றும் மனவியல் நலம் என்பவற்றுக்குக் குந்தகம் விளைவிக்கும்" என்று குறிப்பிடுகின்றது. கழிவு எண்ணெய் மாசடைதல் தொடர்பில் பொதுமக்கள் அச்சத்தாலும், குழப்பங்களா லும் நிறைந்திருந்தாலும் இது தொடர்பில் அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்றோ, இதனால் வரக் கூடிய பாதிப்புக்கள் தொடர்பிலோ எந்தவித அறிவித்தலும் கிடைக்கப் பெறவில்லை. மேலும், அரசு இந்த இடர் குறித்து என்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றது என்பது பற்றியும் அல்லது எடுக்கவேண்டும் என்பது பற்றியும் கூட, தெளிவில்லாத நிலையே தொடர்கின்றது.



அதிகாரபூர்வமிக்க, உத்தியோகபூர்வ, உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் இல்லாத நிலையில் ஆதாரமில்லாத ஊகங்களும், தகவல்களும், அனுமானங்களும், கோட்பாடுகளும் மக்களிடையே அச்சத்தையும், பீதிய்யையும் கிளறிவிட்டிருக்கின்றன.

உதாரணமாக:– அண்மையில் சர்வதேச மாற்றுக் கொள்கை காணி நிலையத்தினால் நடத்தப்பட்ட நல்லாட்சி தொடர்பான கருத்தரங்கில் சிவில் சமூக பிரதிநிதிகள் நீர் ஊற்றுக்களை ஈயம் மாசுபடுத்துவதாகக் கூறினர். ஆனால் நீர் வழங்கல் சபையின் ஆய்வில் நீரில் கன உலோகங்கள் கலந்திருப்பதாகக் கண்டறியப் பட வில்லை.

நீர் வழங்கல் சபை அறிக்கை நிலத்தடி நீர் கழிவு எண்ணெய் மாசடைதலுக்கு மூல காரணமாக சுன்னாகத்தில் அமைந் துள்ள படிம எரிபொருள் மின் உற்பத்தி நிலையத்தை இனங்கண்டிருந்தது. தரவுகளை விரிவாக ஆய்வு செய்து, வரைபடமாக்கியபோது, மின் உற்பத்தி நிலையத்தை அண்மித்த பகுதிகளில் எண்ணெய் மற்றும் மசகுப் படைகளின் செறிவு அதிகமாக இருந்ததும், தூரம் அதிகரிக்க அதிகரிக்க செறிவுப் படித்திறன் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்ததும் தெரியவந்தது. நடப்பு ஆண்டில் மாசு பரம்பல் இன்னும் அதிகரித்திருந்தது. அரசும், தனியார் நிறுவனங்களும் முன்பே கிணற்று நீர் மாதிரிகளைப் பரிசோதித்திருந்த போதும், முடிவுகள் வெளியிடப்படவில்லை. சுன்னாகம் மின் நிலைய உற்பத்தியில் கழிவு எண்ணெய் (உராய்வு நீக்கி எண்ணெய்) உயர் அமுக்கத்தில் துளையிடப்பட்ட குழாய்களின் ஊடாக நிலத்துக்குள் செலுத்தப்பட்டமையே நிலத்தடி நீர் மாசடைதலுக்குக் காரணமெனச் சந்தேகிக்கப்படுகின்றது. (தேசிய மின் இணைப்பு வலையமைப்பில் இருந்து மின்சாரம் யாழ்ப்பாணத்துக்கு நேரடியாக விநியோகம் செய்யப்படாத போது தான் சுன்னாக நிலையத்தில் மின் உற்பத்தி நடைபெறுகின்றது என்பதைக் கவனத்தில் கொள்க.) குறித்த செயன் முறையானது போர்க் காலத்தில் செயற்படுத்தப்பட்டிருக்கலாம். 2012 இல் மீண்டும் தேசிய மின் இணைப்பு வலையமைப்பில் யாழ்ப்பாணம் இணைத்துக் கொள்ளப்படும் வரை ஆரம்பத்தில் அக்ரிகோ என்ற நிறுவனம் பின்னர் நொதேர்ன் பவர் என்ற நிறுவனம் சுன்னாகத்தில் இருக்கும் மின் பிறப்பாக்கிகள் மூலம் மின் உற்பத்தி செய்து விநியோகிக்க ஒப்பந்தம் செய்யப்பட் டிருந்தன. நொதேர்ன் பவர் ஆறு வருடகாலத்தில் சுமார் 100,000 தொடக்கம் 200,000 லீற்றர் வரையிலான கழிவு எண்ணெயை அகற்ற நேர்ந்திருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. (5 மின் பிறப்பாக்கிகளுக்கு 2000 லீற்றர்கள் வீதம் வருடத்துக்கு மூன்று முறை). போரின் போது சுன்னாகம் மின் நிலையம் அமைந்துள்ள சுமார் 20 ஏக்கர் நிலப்பரப்பு

இராணுவத்தின் கடும் பாதுகாப்பினுள் இருந்ததால் பொது
மக்கள் அதற்குள் நடப்பன குறித்து அறிந் திருக்கவில்லை.
ஒரு தசாப்தத்துக்குமேலாக மின்சார வசதியின்றியிருந்த
மக்கள் மின்சாரம் கிடைத்தமை குறித்து மகிழ்ந்தனரே
அன்றி கேள்வி கேட்க விழையவில்லை.

தற்போது போர் முடிவுற்ற நிலையில்,நிலத்தடி நீர் மாசடை
வால் ஏற்படக்கூடிய சுகாதார, சூழல் கேடுகள் குறித்து அதி
கரித்து வரும் கரிசனைகளின் அடிப்படையில் குறித்த இட
ரின் காரணத்தை அறிந்து உகந்த சீராக்கல் நடவடிக்கை
களை மேற்கொள்வது அரசின் கடமையாகும். இடருக்
குக் காரணமான நிறுவனங்கள் சட்டத்தின் முன் தாம் செய்
தவை யாவற்றையும் கூற வேண்டும். மாசுக்களின் தொடர்
பரவலைத் தடுக்கும் முகமாக மாசாக்கலின் மூலமாக
விளங்கும் பிரதேசம் தோண்டப்பட்டு மாசாக்கல் காரணி
கண்டறியப்படுவதுடன் முற்றாக அகற்றப்படவும் வேண்டும்.
இப்படியிருக்க,சக்திவாய்ந்த சில அமைப்புக்கள் நடந்தே
றிக் கொண்டிருக்கும் இடர் தொடர்பில் முக்கியமான உண்
மைகளை மூடிமறைக்க முயல் வதாக அறியமுடிகின்றது.
சூழல் பாதுகாப்புக்கென கழிவகற்றல் செயன்முறை
களை மேற்பார்வையிடவும், அங்கீகாரம் வழங்கவென
வும் நிறுவப்பட்டிருக்கும் தேசிய மற்றும் உள்ளூர் அரச
நிறுவகங்கள் தமது கடமையைச் செய்யத் தவறியபோது,
முதன் முதலில் தாம் பாவிக்கும் நீரில் எண்ணெய் மாசுக்
கள் கலந்திருப்பதைக் கண்டு குரல் எழுப்பியது சுன்னாகம்
தெற்கு விவசாயிகள் சம்மேளனமே. இது தொடர்பில்
2010 இல் இவர்கள் யாழ். அரச அதிபருக்குக் கடிதம் ஒன்
றையும் எழுதியிருந்தனர். ஆனால், எந்த நடவடிக்கையும்
எடுக்கப்படவில்லை. சிறிது காலத்துக்குப் பின்னர், கலை
வாணி சன சமூக நிலையம் தமது பிரதேச கிணற்று நீரில்
துர்நாற்றம் வீசுவதாகவும், எண்ணெய் கலந்திருப்பதாக
வும் முறையிட்டது. இதன் பிறகு, நீர் வழங்கல் சபை சுன்
னாக நீர்பெறு தளத்திலிருந்து விநியோகத்துக்கென நீர்
கொள்வதை நிறுத்தியிருந்தது. நீர் வழங்கல் சபையின்
தலைவர் 2012 இல் சூழல் சார் பாதிப்புக்களை குறித்து
குரல் எழுப்பிய போது அவரது கருத்துக்கள் உதாசீனம் செய்
யப்பட்டதோடு, அவர் இடமாற்றமும் செய்யப்பட்டார்.

உள்ளூர் சிவில் சமூக அமைப்புக்கள், இயற்கை மற்றும்
சூழல் காப்புச் சங்கம் என்பன இணைந்து மேற்கொண்ட
சட்ட நடவடிக்கையின் பின்னரே, நீதிமன்றம் சுன்னாகம்
மின் நிலையத்தில் உற்பத்தி நடவடிக்கைகளுக்குத் தடை
பிறப்பித்தது. காலம் தாழ்த்தி எடுக்கப்பட்ட முடிவிலும்
அதிகாரிகள் நோர்வே நிபுணர்களையும், தேசிய கட்டட
ஆய்வு சபையை யும் ராடர் கருவி கொண்டு எண்ணெய்
மாசாக்கலின் மூலத்தை கண்டறியவெனக் கோரியிருப்
பது வரவேற்கத்தக்கதே. மேலும் தேசிய பல்கலைக் கழக
பிரதி நிதிகளை உள்ளடக்கிய ஒரு நிபுணர் குழுவும்
பிரச்சினையை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்கவென
நியமிக்கப்பட்டுள்ளது. மாற்று நடவடிக்கைகள் குறித்து,
உள்நாட்டு, வெளிநாட்டு நிபுணர்களைத் தொடர்பு கொள்ளு
மாறு குறித்த நிபுணர் குழுவுக்குப் பணிக்கப்பட்டுள்ளது.

வலிகாமத்தில் மக்கள் பல நூறு ஆண்டுகளாக வாழ்ந்து
வருவது கந்தரோடை தொல்லியல் ஆய்வுத் தளத்தின்
மூலம் தெரியவருகின்றது. இவர்கள் பிரதேசத்தின் மாசற்ற,
வற்றாத நிலத்தடிநீர் ஊற்றை தமது சகல தேவைகளுக்
கும் குறையின்றிப் பயன்படுத்தி வந்ததும் வெளிச்சம். நீர்
வழங்கல் சபை யாழ் . குடாவில் நான்கு பிரதான (நிலத்
தடி) நீர் கொள்படுகைகள் இருப்பதாகக் குறிப்பிடுகின்றது.
இதில் தடித்த நன்னீர்ப் படைகொண்ட சுன்னாகம் நீர்
கொள் படுகையே அதிக கொள்ளளவு கொண்டது. இந்த
வரலாற்று முக்கியத்துவ மிக்க நீர் மூலமானது மாசடைந்
திருப்பது மிகப் பெரிய அசம்பாவிதமாகும். மாசடைந்த
நீரைப் பயன்படுத்துவது மனிதனுக்கும் ஏனைய விலங்கு
களுக்கும் பங்கம் விளைவிக்குமெனின் இந்த நிலத்தின்
எதிர்காலம் யாது? சுன்னாகம் மற்றும் சூழவுள்ள பிர
தேசங்களில் உள்ள கிணறுகள் யாவும் எண்ணெய்க் கழி
வுகளால் மாசடைந்திருப்பது, சுன்னாக நீர்கொள்
படுகை முற்றாக மாசடைந்திருப்பதைச் சுட்டி நிற்கின்
றதா? அதேநீர் வழங்கல் சபையின் அறிக்கை விவசாயத்
துக்கென தொடர் செயற்கை உரப் பயன்பாடின் வினை
யாக நீரில் ஏற்றுக் கொள்ளப்பட்ட அளவிலும் விஞ்சிய
நைத்திரேட்டுச் சேர்வைகள் இருப்பதைக் கண்டறிந்தி
ருந்தது. எண்ணெய்க் கழிவுகளின் பாதிப்பைப் போல்
அல்லாது, நைத்திரேட்டுச் சேர்வைகளின் மூலம் உடல்
நலத்துக்கு உண்டாகும் குருதிக் கோளாறுகள் முதலிய
கேடுகள் குறித்து நன்றே அறியப்பட்டிருக்கின்றது.

நவீன உலகின் நிலைத்து நிற்க இயலாத அபிவிருத்திக்
கான தீவிரவேட்கையும், இயற்கை அழிப்புக்களும் மனி
தனால் உண்டாகும் கெடுதல்களுக்கு வரம்பற்ற நிலை
யையே ஏற்படுத்தியிருக்கின்றது.


ஃபுகுஷிமாஅணு உலை கழிவுக் கசிவு,போபால் வாயுக்
கசிவு, சூடான் சோமாலியா வறட்சி முதலிய சூழல் இடர்
களைப் போன்று வலிகாமம் மக்களும் பாதுகாப்பான
இடங்களுக்கு என்றோ இடம்பெயரநேருமா? பல்
லாண்டு காலமாக வாழ்வுக்கு ஆதாரமாக விளங்கி வந்த
இந்த மண்ணுக்கு நிலத்தடி நீர் மாசடைவு சாவு மணி
அடித் திருக்கின்றது. தெற்கில் கம்பஹா மாவட்டத்தில்
வெலிவேரியா மக்களைப் போன்றே வலிகாம மக்கள்
தமது நீர் மாசடைவதை எதிர்த்து வீதிக்கு இறங்கியிருக்
கின்றனர். சமாதானமான வழிகளில் இவர்கள் விரைந்த
பதில்களைக் கோரி நிற்கின்றனர்.

பிரதேச மக்களை எதிர்த்து நிற்கும் விவரீதங்களை உட
னடியாக நிவர்த்தி செய்வது அதிகாரிகள் ஒவ்வொருவ
ரதும் கடமையாகும். மோசமாகப் பாதிக்கப் பட்ட கிரா
மங்களுக்கு பவுஸர்கள் மூலம் இப்போது நன்னீர் விநி
யோகம் செய்யப்படுவது வரவேற்கத்தக்கது. இருப்பி
னும்,பாதிக்கப்பட்ட அனைத்துப் பிரதேசங்களும் இந்த
நிவாரணத்தைப் பெற வேண்டும். தூய நீருடன் மக்க
ளுக்கு மாசடைந்த நீரைப் குடிக்க, குளிக்க மற்றும் கழு
வப் பயன்படுத்துவதால் நேரக் கூடிய பாதிப்புக்கள்
குறித்த சரியான தகவல்களும், எச்சரிக் கைகளும் சென்
றடைய வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவர்கள்
கண்ட இழப்புக்களுக்கும், முகம்கொடுக்கும் இன்னல்க
ளுக்கும் உகந்த ஈடு செய்யப்படுதல் அவசியம். ஆனால்
எல்லாவற்றுக்கும் மேலாக, நீரை அதன் ஆரம்ப
நிலைக்கு இட்டுச் செல்லத்தக்க ஆன நடவடிக்கைகள்
எடுக்கப்படவேண்டும். இதில் எண்ணெய் கழிவுகளின்
தொடர் பரவலைத் தடுத்தல் முதற்படியாகும்.

இதனை ஓர் இடராக அறிவிப்பது மாற்று நடவடிக்கை
களை ஒருங்கிணைக்க, வளங்களை விரைவில் திரட்ட,
பாதிப்பி லிருந்து மீள்வதற்கான திட்டங்களை ஒருங்கே
தீட்ட, வெளிநாட்டு தொழில்நுட்ப உதவிகளைப் பெற
எனப் பல விடயங்களில் கைகொடுக்கும்.

உதாரணமாக:- பாதிக்கப்பட்ட இடங்களில் தொடர் ஆய்
வுகள், மேற்பார்வை என்பவற்றை சகல வசதிகளுடனும்
கூடிய ஆய்வு கூடங்களில் நடத்துதல் அவசியம். உயர்
துலங்கல் கொண்ட, துரிதமான கருவிகள் அடங்கியநட
மாடும் ஆய்வுகூடமொன்று கூடச் சிறந்ததே. பொது மக்க
ளுக்கு தொடர்ச்சியாகத் தேவையான அளவு நன்னீர்
கிடைக்கத்தக்க வழிவகைகள் செய்யப்படவேண்டும்.
மனிதர்கள் மீதும், ஏனைய உயிரினங்கள் மீதும்,
சூழலிலும், உணவுச் சங்கிலி யிலும் நிலத்தடிநீர் மாச
டைவு உருவாக்கியிருக்கும் பாதிப் புக்களைச் சரியே
இனங்காண பரந்துபட்ட ஆய்வுகள் நடத்தப்படுவதோடு,
ஆய்வுப் பேறுகளின் அடிப்படையில் மாற்று நடவடிக்
கைகள் எடுக்கப்படுவது அவசியம்.





போரின் போது சுன்னாகம் மின் நிலையம் அமைந்துள்ள சுமார் 20 ஏக்கர் நிலப்பரப்பு இராணுவத்தின் கடும் பாதுகாப்பினுள் இருந்ததால் பொதுமக்கள் அதற்குள் நடப்பன குறித்து அறிந்திருக்க வில்லை. ஒரு தசாப்தத்துக்கு மேலாக மின்சார வசதியின்றி யிருந்த மக்கள் மின்சாரம் கிடைத்தமை குறித்து மகிழ்ந் தனரே அன்றி கேள்வி கேட்க விழையவில்லை.

## தவக்காலச் சிந்தனை

### உண்மைக்காக வாழ்வோம்

"இந்த மனிதனை எனக்குத் தெரியாது" தனது இருப்பைத் தக்கவைக்க இருப்பைத் தந்த இயேசுவையே மறுத்துரைத்தார் சீடரான பேதுரு. "நீர் மெசியா வாழும் கடவுளின் மகன் என அறிக்கையிட்டு 'யாரிடம் செல்வோம் இறைவா! வாழ்வு தரும் வார்த்தைகள் உம்மிடம் தானே உள்ளன' என்று அவரிலே தஞ்சமடைந்திருந்தவர் அவரையே தெரியாது என மறுதலிக்கும் அளவுக்கு சுயநலம் வெற்றி கொண்டு விட்டது.

ஒன்றாக வாழ்ந்து உண்டு, உறவாடி, உதவிகள் புரிந்தோரை பணிசெய்தோரை நண்பர்களை மறுதலிக்கும் பேதுருக்கள் இன்றும் நம் மத்தியில் இல்லையா?

வசதி வாய்ப்புக்கள் பெருகும்போது, நடந்துவந்த பாதையை மறந்துவிடுகிறோம். கணவன்- மனைவியை- பிள்ளைகள்- உறவுகளை மறுதலிக்கின்றோம். அழகில்லை என்றால் மறுதலிப்பு பிள்ளைகள் ஒழுக்கமில்லையென்றால் பெற்றோர் மறுதலிப்பு அநீதியை ஆதரித்து நீதியை புறந்தள்ளல், தானும் பொய்யுரைத்து பிறரையும் வாய் பொத்தியிருக்குமாறு அதட்டுவது, சந்தர்ப்பவாத இன, மத, அரசியல் மறுதலிப்பு தன்னலத்தால் தன்னைத் தானே மறுதலித்தல். இவையனைத்தும் இறைவனுக்கெதிரான, மனித மாண்புக்கெதிரான மறுதலிப்புக்களாகும்.

நாம் இம்மையில் மறுதலித்தால் இறைவன் எம்மை மறுமையில் மறுதலிப்பார். எனவே எமது நிலையை மாற்றிக்கொள்வோம். உண்மைக்கும் நீதிக்கும் நேர்மைக்கும் இயேசுவின் அழைப்புக்கும் குரல் கொடுப்போம். என்ன துன்பம் நேரிடினும் உண்மையை எடுத்துரைப்போம். அப்போது "நன்று நன்று நம்பிக்கைக்குரிய ஊழியனே!" என்று இறைவன் எம்மை ஏற்றுக்கொள்வார் என நம்புவோம்.

எஸ்.யேசுதாஸ்,
கொழும்புத்துறை.

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### அன்பு நிரந்தரமானது அல்ல

மனைவி தன் கணவனிடம் அன்பைச் செலுத்துகிறாள் என்று கூறுகிறோம். அவள் ஆன்மா முழுவதுமே அவனிடத்தில் ஆழ்ந்து கிடக்கிறது. என்று நினைக்கிறாள். ஒரு குழந்தை பிறக்கிறது. அவளுடைய அன்பின் பாதியோ பாதிக்கு மேலோ அந்தக்குழந்தை மீது செல்கிறது. கணவனிடத்தில் முன்பு இருந்தது போல் தனக்கு அவ்வளவு அன்பு இல்லாததை அவளே உணர்வாள். அதே போலத்தான்

தந்தைக்கும். ஆழ்ந்த அன்பை செலுத்தக் கூடிய பொருள்கள் கிடைத்ததும் பழைய அன்பு படிப்படியாக மறைகிறது. நீங்கள் பள்ளியிலிருந்தபோது தாய், தந்தையர் அல்லது பள்ளித்தோழர்கள் வாழ்க்கையில் மிகவும் அன்பானவர்கள் என்று நினைத்தீர்கள். அதற்குப் பிறகு கணவனோ, மனைவியோ ஆகும் நிலை வருகிறது. உடனே பழைய உணர்ச்சிகள் பறந்து விடுகின்றன. புதிய அன்பு உணர்ச்சிகளே தீவிரமடைகின்றன.

## நாளை

**மாசி-26**
**செவ்வாய்க்கிழமை**
**10.03.2015**

திதி: சதுர்த்தி கா.06.50 வரை
நட்சத்திரம்: சுவாதி மு.இ.07.53 வரை
சுபநேரம்: 10.53-12.23 வரை
இராகுகாலம்: 03.27-04.57 வரை

## கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்



| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 650 | 550 | 700 | 700 | 700 | 600 |
| நண்டு | 400 | 400 | 400 | 300 | 400 | – |
| கணவாய் | 450 | 450 | 550 | 500 | 500 | – |
| பாரை | 450 | 450 | 600 | 550 | 500 | 370 |
| சுறா | 500 | 500 | 600 | 600 | 700 | 500 |
| சீலா | 500 | 350 | 500 | 450 | 400 | 300 |
| விளை | 500 | 300 | 550 | 500 | 400 | 350 |
| முரல் | 350 | 250 | 300 | 300 | 300 | 250 |
| கும்பிளா | 400 | 300 | 500 | 400 | 400 | 300 |
| கிழாக்கன் | 400 | 500 | 400 | 400 | 400 | 300 |
| ஓரா | 350 | 250 | 350 | 350 | 200 | 300 |
| திரளி | 350 | 200 | 300 | 250 | 200 | – |
| நகரை | 350 | 200 | 300 | 350 | 200 | – |
| சூடை | 150 | 150 | 180 | 140 | 100 | 80 |
| ஒட்டி | 250 | 150 | 250 | 200 | 200 | 200 |
| திருக்கை | 150 | 300 | 250 | 200 | 300 | 170 |
| பாலை | 350 | 300 | 400 | 450 | 300 | – |
| வாளை | 150 | 150 | 250 | 300 | 200 | 250 |
| கொய் | 80 | 150 | 80 | 100 | 100 | – |
| மதனம் | 300 | 200 | 300 | 240 | 200 | 250 |

## காலையில் சுறுசுறுப்புடன் எழுவதற்கு



காலையில் நல்ல மனநிலையில் எழ வேண்டும் என்று பலரும் நினைப்பர். ஆனால் எல்லோருக்கும் இது சாத்தியமாகாத விடயமாக உள்ளது. இதற்கு முந்தைய நாளின் செயல்களே காரணமாக அமைகிறது. பல்வேறு காரணங்களில் தாமதமான தூக்கமும் ஒரு காரணம். தாமதமான தூக்கம், ஒருவரை தாமதமாக எழ வைக்கும். நல்ல தூக்கம் நல்ல மனநிலையில் நம்மை எழ வைக்கும். எனவே காலையில் எழுந்ததும், நன்கு புத்துணர்ச்சியுடனும், சுறுசுறுப்புடனும் இருப்பதற்கு பல வழிகளை பின்பற்றலாம். சரியான நேரத்தில் தூங்கச் செல்ல வேண்டும். காலையில் களிப்புடன் எழுவதற்கு, ஒருவருக்கு போதுமான தூக்கம் மிகவும் தேவை. நல்ல இரவு நேர தூக்கத்தைப் பெற, அறை போதுமான இருட்டுடன் இருக்கிறதா என்பதை உறுதிப்படுத்தவும். இல்லையெனில் சிறிய அளவிலான ஒளி மனதை விழிப்படையச் செய்யும். படுக்கும் முன் மன அழுத்தத்தை தவிர்க்க வேண்டும். தூங்கும் நேரத்தில் தொலைக்காட்சி செய்திகளைப் பார்க்க வேண்டாம். எதிர்மறையான செய்திகள் ஒரு நல்ல இரவு ஓய்வுக்கு உகந்ததல்ல. இரவு தூங்குவதற்கு முன் மறுநாள் காலைக்குத் தயாராக வேண்டும். அதாவது காலை நேரத்தில் எதையும் அவசரமாக செய்யாமல், அமைதியாகவும், பொறுமையாகவும் இருப்பதற்கு, இரவில் தூங்கும் முன் காலையில் போட வேண்டிய உடைகளை தயாராக எடுத்து வைக்க வேண்டும். படுக்கும் முன் நன்றியுரையை எழுத சில நிமிட்ங்களை எடுத்துக் கொள்ளவும். பகலில் எதனுடைய பிரதிபலிப்பு மகிழ்ச்சியடையச் செய்ததோ அல்லது நல்லதாக உணர வைத்ததோ, அது தான் மனதை நன்றியுள்ள மற்றும் மகிழ்ச்சியான மன நிலைக்கு இட்டுச் செல்ல உதவும். மனதை அலை பாய விடாமல் ஒருமுகப்படுத்தும் இந்த மனோநிலையில் தூங்கும் போது நல்ல தூக்கம்.

## மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 30–50 | 40–60 | 30–60 | 30–60 | 20–40 | 20–40 | 40–60 |
| கத்தரி | 90 | 80–100 | 100–120 | 90–110 | 80–120 | 90–120 | 80–100 |
| கரட் | 120–140 | 120–160 | 100 | 100 | 60–100 | 140 | 120–140 |
| மரவள்ளி | 50 | 50–70 | 40 | 50 | 40 | 50 | 45–60 |
| பயிற்றை | 70–90 | 60 | 50 | 70 | 60–100 | 120 | 80–100 |
| பாகல் | 80 | 90 | 100 | 90 | 60–120 | 140 | 80–100 |
| கருணைக்கிழங்கு | 50 | 60 | 50 | 30–60 | 40 | 60 | 80–100 |
| பெ.வெங்காயம் | 80 –110 | 80–100 | 80–100 | 50–80 | 50–100 | 80–110 | 80–100 |
| சி.வெங்காயம் | 40 –80 | 80–100 | 80–100 | 60–100 | 60–80 | 80–110 | 70–80 |
| பூசணி | 70 | 80 | 60 | 50 | 40–80 | 80 | 80–120 |
| தக்காளி | 40 | 60 | 40 | 40 | 30–60 | 60 | 40–80 |
| வாழைக்காய் | 70 | 70 | 60 | 60 | 60–80 | 80 | 80–100 |
| கீரை | 20 | 30 | 30 | 20 | 15 | 20 | 30 |
| பொன்னாங்காணி | 30 | 30 | 30 | 20 | 15 | 20 | 15 |
| மிளகாய் | 70 –120 | 60–120 | 80 | 80–120 | 60–80 | 120–140 | 80–100 |
| புடோல் | 50 | 30–60 | 60 | 40 | 40–80 | 80 | 80–100 |
| கோவா | 40 | 60 | 40 | 60 | 30–50 | 70 | 30–40 |
| வெண்டி | 60 | 40–60 | 40 | 50 | 40–60 | 60 | 60–80 |
| போஞ்சி | 140–180 | 120 | 100 | 100 | 60–120 | 140 | 180–220 |
| லீக்ஸ் | 160–220 | 200–240 | 160–180 | 110 –170 | 140–180 | 140–200 | 130–180 |
| தேங்காய் | 30–60 | 30–55 | 40–60 | 40 | 30–60 | 30–55 | 35–60 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 80–100 | 70 | 70 | 80 | 70–90 |
| தேசிக்காய் | 50 | 40 | 50 | 40 | 40 | 40 | 20–40 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 30 | 20 | 20 |
| கறிமிளகாய் | 120 | 200 | 200 | 130–200 | 160 | 160–210 | 140 |
| இராசவள்ளி | 120 | 100 | 100 | 120 | 80 | – | 120 |
| பனங்கிழங்கு | 04 | 02 | 05 | 04 | 02 | 05 | 03 |

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | | 5 | 4 | 3 | | 1 | 2 |
| 7 | | | 1 | | | 8 | 4 | |
| | | 4 | | 7 | 6 | | | |
| 2 | | | 4 | | 5 | 3 | | |
| | | | | 3 | | | | |
| | | 5 | 9 | | 1 | | | 4 |
| | | | 7 | 2 | | 9 | | |
| | 3 | 7 | | | 4 | | | 8 |
| 8 | 1 | | 3 | 5 | 9 | | | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல் களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வாராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 6 | 2 | 7 | 8 | 1 | 3 | 9 | 4 |
| 1 | 4 | 8 | 9 | 2 | 3 | 6 | 5 | 7 |
| 7 | 9 | 3 | 4 | 6 | 5 | 2 | 8 | 1 |
| 8 | 7 | 4 | 3 | 1 | 9 | 5 | 2 | 6 |
| 3 | 1 | 6 | 2 | 5 | 8 | 4 | 7 | 9 |
| 9 | 2 | 5 | 6 | 7 | 4 | 8 | 1 | 3 |
| 6 | 5 | 9 | 8 | 4 | 7 | 1 | 3 | 2 |
| 4 | 3 | 1 | 5 | 9 | 2 | 7 | 6 | 8 |
| 2 | 8 | 7 | 1 | 3 | 6 | 9 | 4 | 5 |

# தமிழ் மாதங்களில் பிறந்தவர்களின் பலன்கள்

## ஆவணி



ஆதித்தவனின் ஆட்சிமனையாகிய சிம்மராசியில் சூரியன் சஞ்சாரம் செய்யும் போது ஆவணி மாதம் என்று அழைக்கின்றோம். நவக்கிரகங்களுக்கு தலைவராக விளங்கும் சூரிய பகவான், எல்லா ஜீவராசிகளுக்கும் ஜீவாதார சக்தியை அளிக்கும் மூலக் கடவுள் என்றால் மிகையாகாது. உயிரினங்கள் தோன்றி மறையும் வரை சகல உறுப்புகளும் இமை கொட்டாது இயங்கும். ஜீவசக்தியை வழங்கும் இதய பாகத்தை ஆட்சிபுரிவது சூரியன். வான மண் டலத்தில் இதய பாகமாகிய சிம்மராசியை சர்வாதிகாரத்துடன் ஆட்சி புரியும் சூரிய பகவான், இங்கு கம்பீரமாய் பவனி வரும் சிறந்த மாதம் ஆவணி மாதமாகும். சூரியனைப் போலவே ஆவணி மாதத்தில் தோன்றியவர்கள் தம்முடைய இயக்கத்துக்குத் தலைவராகவே விளங்குவர். ஆத்மபலம் நிறைந் தவர். ஆக்கும் சக்தி வாய்ந்தவர். சிம்மமானது ரிஷ பத்தைப் போலவே ஸ்திர ராசிகளில் ஒன்றானது. ஆகையால், வைகாசி மாதத்தில் பிறந்தவர்களு டைய கொள்கைகளும் இவருடைய கொள்கை களும் ஏறத்தாழ ஒரே நிலையை உடையனவா கும். இவர் எதையும் பற்றுவதில் நிதானம், பற்றியதை விடுவதிலும், விட்டுக் கொடுப்பதிலும் நிதானந்தான்.

**தோற்றம்**

நடுத்தர உயரமுடையவர். ஒரு சிலர் அதிக உய ரமாகவும் காண்பர். பருத்த திரேகமுடையர். தலை உருண்டையாகவும், பெருத்தும் காணப்படும். தாடைகள் விரிந்திருக்கும். உரோமம் மெல்லிய தாகவும், சுருட்டை உடையதாகவும் தென்படும். கண்கள் அகன்று இருந்த போதிலும் மேற் புருவங்கள் குவிந்திருப்பதால் கண்கள் திறந்திருந் தும். சிறிது மூடியது போல் தோற்றம் அளிக்கும். பேசும்போது கண்ணை மூடிக் கொண்டு பேசுவர். கை, கால்கள் திரண்டு சக்தி வாய்ந்தனவாக விளங் கும்.திரண்ட மார் பையும், உருண்டை புஜங்களையும், கம்பீரமான சரீரத் தோற்றத்தையும் உடையவர். கண்கள் தேன் நிறமுடையவை. எனினும் கூர்மை யானவை. பார்வையில் அபயம், சாந்தம், அமைதி இம் மூன்று அம்சங்களும் பிரதிபலிக்கும். குணபா வங்கள் ஆடு, மாடுகள் இரை தேடப் பசுமையான இடங்களைத் தேடிச் செல்ல வேண்டும். அது போன்று சித்திரை, வைகாசியில் தோன்றியவர்கள் ஜீவனோபாயத்துக்குப் பல்வேறு இடங்களை ஏகித் தமக்கு வேண்டிய வழிகளைத் தாமாகவே ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். ஆனால், ஆவணியில் தோன்றியவர்களுடைய ராசியே வேறு.

காட்டு ராஜாவாகிய சிங்கமானது தன் இருப்பிடத் திலிருந்து கொண்டே பசி நேரத்தில் தன் வயப்படும் மிருகங்களை வேட்டையாடி, தன் பசியாற்றிக் கொள்வது போல் ஆவணி மாதத்தில் பிறந்தவர்களும் தம்முடைய காரியங்களைத் தம்முடைய இருப்பிடத்தில் இருந்து கொண்டே சாதித்துக் கொள்வர். பலர் இவரைத் தேடித் தம்முடைய காரியங் களைச் சாதித்துக் கொள்வதும், இதனால் இவருடைய தேவையும் பூர்த்தியாகும் என்பதைக் கண் கூடாகக் காணலாம். எதையும் ஒரு பொருட்டாகக் கருதமாட்டார்கள். இயற்கை வழியே இறைவன் வழியென்று இவர் கருதிடுவார். அவசரக்காரர் களல்லர். எதையும் ஆழ்ந்து சிந்தித்துச் சீர்தூக்கிப் பார்த்தபின் செயலில் ஈடுபடுவர். மற்றவர்கள் என்ன நினைத்துக் கொள்வார் களோ என்ற அச்சம் இவருக்கு என்றும் எந்தத் தருணத்திலும் ஏற்படுவது அரிதாம். மற்றவர் களுக்குத் தாம் வழிகாட்டிகளாக இருக்க வேண்டுமென்ற உயர்ந்த நோக்கமுடை யவர். எதை விரும்பினாலும், எதைச் செய்தாலும், எதைப் பற்றித் தம் கருத்தை வெளிப்படுத்துவ தாலும் அது உயர்ந்து நிகரற்றதாக இருக்கவேண்டு மென்பதே இவருடைய லட்சியமாகும். இவர் பிடிவாத குணமு டையவர் என்ற போதிலும் ஆடி மாதத்தில் தோன் றியவர்களைப் போல் தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று சாதிக்க மாட்டார்கள். ஆனால், எதிரியினிடத்தில் உண்மையிருக்குமாயின் கண்ணியமாக ஏற்றுக்கொள்வர். பிறரிடத்தில் உள்ள உயரிய குணங்களைப் போற்றிப் புகழ்ந்திடுவர். தாமும் அவற்றைப் பின்பற்றுவதற்குத் தயாராகுவர்.குடும்பத்தில் சிறியவரெனினும் இவருடைய கருத்துக்கு மதிப்புண்டு. இவரைக் கலந்தாலோசித்துப் பெரியவர்கள் செயலில் ஈடுபடுவர். சரித்திர சான்றுகளை உதாரணமாக எந்த விவகாரத்துக்கும் பயன்படுத்திக் கொள்வர். நன்றி மறவார். செய்த நன்றிக்குப் பிரதி உபகாரம் செய்வதே இவருக்கு முதற்கடமையாம், இரக்க குணமுடையவர். தம் மால் உதவி செய்ய முடியாவிட்டாலும், உதவி பெறக் கூடிய உயர்ந்த இடத்தை அடைய வழிகாட்டுவார். பழைய சம்பிரதாயங் களைக் கடைப் பிடிப்பதிலும் இவர் நூதன முறையைக் கையாள்வார். கடன் வாங்குவது இவருடைய கொள்கைக்கு விரோதமானது. ஆனால், இவர் உதவியை நாடு பவர்களுக்குக் கடன் இல்லை யென்று சொல்லுவதற்குப் பதில், கையில் கிடைத்ததை அந்தக் கணமே கொடுத்து இதற்கு மேல் என்னிடம் எதிர்பார்ப்பதில் பயனில்லையென்று முற்றுப்புள்ளி வைத்திடுவர். யாவரையும் தன்வசமாக்கிக் கொள்ளும் அற்புத சக்தியுடையவர். அன்பும், தயவும் தர்ம சிந்தனையுமுடையவர். தளரா ஊக்கமுடையவர். தம் காரியத்திலேயே கண்ணும் கருத்துமாய், உறுதியான நெறி யுடன் ஈடுபடுவர். தோல்வியைக் கண்டு இவர் மனத்தளர்ச் சியடையார். முன்னிருந்ததைவிட அதிக உற்சாகத்துடன் விளங்குவார். எப்பொருள் எத்தன்மையுடையதெனினும், யார் வாயிலாகக் கேட்பினும் உண்மையை அறிய முயன்று, அறிந்த பின்பு அமைதி கொள்வார். ஆனால், இளகிய உள்ளம் படைத்தவராகையால், கபட நெஞ்சமுடையவர்கள், இவரை எளி தில் ஏமாற்றி, இவருடைய பணத்தையும், பொருளையும் ...டி பறித்திடுவர்.

மேஷம், சிம்மம், தனுசு இந்த மூன்று ராசிகளையும், ராசி அல்லது லக்கினமாக உடையவர்கள், எவ்வாறு சனியின் நவாம்ச ஆதிக்கத்திலிருந்து தப்பியவர்களோ, அதே போன்று இந்த ஆவணி மாதத்தில் பிறந்தவர்களும் சனியின் நவாம்ச ஆதிக்கத்துக்குள் சூரியனைப் பெறாதவர்களாகை யால் எந்தக் காரியத்துக்கும் பிறர் உதவியை நாடாதவர்கள் என்றும், சுயநம்பிக்கையுடையவர்கள் என்றும், தன் கையே தனக்குதவியென்ற திட சித்தம் உடையவர்கள் என்றும் திட்டவட்டமாகக் கூற இடமேற்படுகிறது. வாழ்க்கையும் அவ்வாறே அமையும். வசதியும், வாய்ப்பும் தமக்கேற்ற வாறு அமைந்து, படிப்படியாக முன்னேற்றமளித்து உயர்ந்த பீடத்தை தம் சுயமுயற்சியால் அடையச் செய்திடும்.ஆவணி மாதத்தில் பிறந்தவர்கள் திறந்த உள்ளம் படைத்தவர். நண்பர்களிடத்திலும், அதிகப் பற்றுதல் உடையவர். பிறரு டைய கஷ்டத்தையும் கவலையையும் தம்முண்டயதாகப் பாவித்திடுவர்.

**நோயும்-தீரும் வகையும்**

ஆவணி மாதத்தில் பிறந்தவர்கள் ஓயாது உழைப்பர். சக்திக்கு மீறி காரியங்களையும், அலுப்பு சலிப்பின்றிச் செய்திடுவர். செய்யும் காரியங்களில் எதிர்ப்புகளும், முட்டுக்கட்டைகளும் தோன்றுவது இவர் வாழ்க்கையில் சர்வசாதாரணமாயினும் இவர் மிகவும் அதிர்ச்சி அடைந்திடுவர். இதன் விளைவாக இருதயக் கோளாறுகள், மார்பு வலி இதனால் தலைவலியும் ஏற்படும். அடுத்த படியாக வயிற்றுக் கோளாறு, நரம்புத்தளர்ச்சி, வாதம் போன்ற அசதிகளும் அவரை அடிக்கடி வாட்டிடும். இரத்த ஓட்டத்தில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்படும். இரத்தக்குழாய்கள், கொழுப்பின் அழுத்தத்தால் சிறுத்து விடுவதால், இருதயத்திலிருந்து அழுத் தப்படும் இரத்த வெள்ளத்தைத் தாங்கிச் செல்ல இயலாததால் இருதயத்துக்குத் தாக்குதல் ஏற்படும். இதனால் இருதயத்தின் ஒருபகுதி வீங்கி விடும். இரத்தக் குழாய்த் தடுப்பினால் ஏற்படும் இருதய நோயை இவரால் சில தருணங்களில் தாங்க முடி யாமல் தவிப்பார்.

இவர் அதிக பாரத்தைத் தூக்கவோ, படிக்கட்டுகளில் ஏறவோ, கஷ்டமான வேலைகளைச் செய்யவோ கூடாது. அதிக மூச்சு வாங்கினால், இருதயம் தாங்காமல் வெடித்து விடவும் நேரிடும். இவர் வேலைகளைக் குறைத்துக்கொள்வதாலும், தண்ணீர் அதிகமாக அருந்துவதாலும், தக்காளிப்பழத்தை அதிகமாகச் சேர்த்துக் கொள்வதாலும் இருதயக் கோளாறு ஏற்படாவண்ணம் தகுந்த முறையில் பாதுகாத்துத்திட ஆரோக் கியத்துடன் நூறாண்டுக்கு மேல் சுகமாக வாழ்ந்திடலாம்.அதிக சக்தி வாய்ந்த மருந்து வகைகளை உட்கொள்ளவோ, ஊசியின் மூலம் மருந்து ஏற்றிக் கொள்ளவோ கூடாது. பத்தியமான ஆகா ரத்தினாலும், உழைப்புக் குறைவினாலும், ஓய்வு மிகுதியினா லும் உற்ற பிணியை இயற்கையாகவே போக்கிக் கொள்ளலாம்.

**குறையும்-நிறையும்**

ஸ்திர புத்தியுடையவர், பிடித்ததை விடார். எதையும் கற்கும் வல்லமையுடையவர். அரிய பெரிய தத்துவங்களை எளிதில் கிரகித்துக் கொள் ளும் மெய்ஞ்ஞான உணர்வுடையவர். நிலப் பரப்பு அதிகம் இருப்பினும், ஒரு சிலவற்றைத் தம்முடைய ஆதிக்கத்தில் வைத்துக் கொள்வர். துரித காலத்தில் அதிக லாபத் தைச் சம்பாதிக்க வேண்டு மென்ற பேராவலுடையவர். வாழ்க்கையில் வாய்ப்புக்களை அவ்வாறே ஏற்படுத்திக் கொள்வர். எதிரிகளின் தொல்லை அதிகமிருப்பினும் பொருட்படுத்தார். எதிர்த்தவர்களைத் தகர்த்திடும் சாமர்த்தியமுடையவர். தைரிய சாலி. புதிய கருத்துகளுக்கும், ஆராய்ச்சிகளுக்கும் ஊக்க மளிப்பர். உறவினர்களிடத்தில் வாஞ்சையுடையவர். இருப் பது சிறிதெனினும் சுயமாகத் தேடுவது அதைவிட பன்மடங் காகும். துண்டித்த விவகாரங்களை மீண்டும் சரிப்படுத்துபவர். நற்குணமுடையவரெனினும் சீற்றமுடையவர். ஒழுக்கமற்ற வர்களைக் கண்டித்துப் பேசுவர். குற்றங்குறைகளை வன்மை யாகக் கண்டிப்பர். யாரையும் எளிதில் நம்பார். நம்பிக் கைக்குப் பாத்திரமானவர்களைக் கைவிடார். இவரும் சுயநலவாதி என்றாலும் தம்மை அடுத்தவர்களுக்கு நல்ல பாதுகாப்பளித் திடுவர். உதாரகுணமுடையவர். தர்மசிந்தையுடையவர். ஆனால் அதே தருணத்தில் சிறிய மனப்பான்மையுடைவயர்களிடத் தில் இவர் மனம் இரங்காது. தீர்க்கதரிசி. ஆத்திரத்தில் எதை வேண்டுமானாலும் செய்யத் துணிந்தவர். தொழில் ஸ்தாப னங்களுக்கு இவர்களை நிர்வாகிகளாகவும் அவைத் தலை வராகவும் போஷகராகவும், நடுவராகவும் நியமித்தால், நேர்மை யாகவும், நெறியாகவும், நீதி வழுவாமலும் செயலாற்றிடுவர். மார்கழி, சித்திரை மாதத்தில் பிறந்தவர்கள் வாழ்க்கைத் துணைவியாகவோ, கூட்டாளியாகவோ அமைவது சிறந்ததாகும். தை, மாசி மாதங்களில் பிறந்தவர்களும், ஆடி மாதத்தில் தோன்றியவர்களும் இவர்களுக்கு கஷ்டத்தையும், வம்பு வழக்குகளையும் உண்டாக்கிடுவர்.தொழில் முன் னணியில் நிற்கக்கூடிய பிரதான ஸ்தானங்களைத் திறமையு டன் ஏற்று வகிப்பர். நல்ல சங்கீத வித்துவான்களாகவும், கவிஞரா கவும், ஓவியராகவும், பொன்மகுட ஆபரணங் களைத் தயாரிப்பவர் களாகவும் விளங்குவர். உள்ளத்தை உருக்கும்படியான கருத்துக்களைச் சித்தரிப்பதிலும், இசையமைப்பதிலும் இவருக்கு நிகர் இவரே.இவர் அடிமைத் தொழிலைத்துச்சமாக மதிப்பவர். பிறருக்கு அஞ்சி, நடுங்கி ஒடுங்கி செயல் புரிவது இவருக்குப் பிடிக்காத விஷயங்கள். கடனில்லாத சோறு கால் வயிறு போதும் என்ற உறுதியான லட்சிய வாழ்க்கையில் மோகங் கொண்டவர். ஆன்மிகத் துறையில் ஈடுபட்டு உண்மை யைக் காண அரும்பாடுபடுவர். உண்மையை நாடிடுவர்.

கொழும்பிலிருந்து வெளியாகும்
தமிழ் பேசும் மக்களின் தன்மானப் பத்திரிகை
நாளிதழ்
Registered as a Newspaper in Sri Lanka
விலை ரூபா 25.00
சுடர் ஒளி
THE SUDAR OLI
வார வெளியீடு
Registered as a Newspaper in Sri Lanka
விலை ரூபா 35.00
ஞாயிறு வார வெளியீடு
சுடர் ஒளி
THE SUDAR OLI
தற்பொழுது வடமாகாணம் முழுவதும் வெளிவருகின்றது
தலைநகரில் இருந்து பல நெருக்கடிகளுக்கு மத்தியிலும் தமிழ் உரிமைக்காய் ஆற்றிவரும் பணியை தற்பொழுது வடமாகாணம் முழுவதும் விஸ்தரித்துள்ளோம் என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.
சகல பத்திரிகை முகவர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்.
விநியோகத் தொடர்புகளுக்கு 0718628379 / 0714273035
செய்தித் தொடர்புகளுக்கு 0718628377 / 0770968519
பகுதிநேர பிரதேச செய்தியாளர்கள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்
sudarolieditorial@gmail.com

# சோழனின் பெருமை

தஞ்சை பெரிய கோயில் கட்டும் பணி வேகமாக நடந்து கொண்டிருந்தது. சோழப் பேரரசர் ராஜராஜ சோழன் அந்தப் பணியில் மிகுந்த ஆர்வம் காட்டி வந்தார். ஒரு நாள், 'கோயில் வேலை எப்படி நடைபெறுகிறது?' என்பதை அறிய விரும்பிய அவர், ஒரு வழிப்போக்கனைப் போல் மாறுவேடம் பூண்டு கோயில் பணி நடக்கும் இடத்துக்குச் சென்றார். அவரை அரசர் என்று எவரும் அறிந்து கொள்ளவில்லை. அப்பொழுது ஒரு பெரிய பாறையைச் சுவரின் மேல் ஏற்றிக் கொண்டிருந்தார்கள். வேலையாள்கள்



பலரும் ஒன்று சேர்ந்து கயிறு போட்டு இழுத்தும் அந்தப் பாறை சிறிதும் நகரவில்லை. எல்லோரும் சோர்வு அடைந்தார்கள். அங்கிருந்த மேற்பார்வையாளரோ, 'என்னை எல்லோரும் ஏமாற்றுகிறீர்கள். இந்தப் பாறையை மேலே ஏற்ற முடியவில்லையா?' என்று கோபத்துடன் கத்திக் கொண்டிருந்தான். அவனருகில் போன அரசர், 'ஐயா! நீங்களும் அவர்களுடன் சேர்ந்து அந்தப் பாறையைத் தூக்க முயற்சி செய்யக்கூடாதா?' என்று கேட்டார். 'நான் இங்கு மேற்பார்வையாளன் என்பது உங்களுக்குத் தெரியவில்லையா?' என்று ஆணவத்துடன் கேட்டான் அவன். 'அப்படியா?' என்ற ராஜராஜசோழன் அங்கிருந்த வேலைக்காரர்களுடன் சேர்ந்து அந்தப் பாறையைத் தூக்க முயற்சி செய்தார். ஒரு வழியாக பாறை மேலே போய்ச் சேர்ந்தது. பெருஞ் செல்வந்தரைப் போலிருந்த அவர் வேலையாள்களுடன் சேர்ந்து வேலை செய்தது அந்த மேற்பார்வையாளனுக்கு ஆச்சரியமாக இருந்தது. மறுநாள் பேரரசரிடமிருந்து அந்த மேற்பார்வையாளருக்கு ஒரு ஓலை வந்தது. அதில், 'கோயில் திருப்பணிக்கு ஆள்கள் போதவில்லை என்றால் உடனே அரசருக்குச் சொல்லி அனுப்பவும். நேற்று வேலை செய்ததைப் போல் அவர் வந்து வேலை செய்வார்' என்று எழுதியிருந்தது. இதைப் படித்த மேற்பார்வையாளருக்கு ஆணவம் ஒழிந்தது. பின் அவனும் மற்ற வேலையாள்களுடன் சேர்ந்து வேலை செய்து அவர்களுக்கு ஊக்கமளித்தான்.

## நீங்கள் அதிகாரம் உள்ள நபரா?



இந்த உலகில் வாழும் ஒவ்வொரு உயிரும், தனது ஆளுகைக்கென்று சில எல்லைகளை வரையறுத்து வைத்துள்ளது.அது நில எல்லைகளாகவும் இருக்கலாம்,மன எல்லைகளாகவும் இருக்கலாம்.மனிதனைப் பொறுத்து மன எல்லைகள் எனப்படும் அதிகாரங்களாக இருக்கின்றன.

மனிதர் எவரும் அதிகாரம் இல்லாமல் வாழ முடியாது, குழந்தைகளாக இருக்கும் போது நமது பெற்றோரிடம் அவர்களது குழந்தைகள் என்று அதிகாரத்தைச் செலுத்துகின்றோம் அவர்கள் தங்களது குழந்தைகள் என்னும் முறையில் நம்மிடம் மட்டுமே அதிகாரத்தை செலுத்த வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். அதில் ஏதேனும் குறைகள் ஏற்பட்டால் அதற்கு எதிர் வினை செய்கின்றோம்.இப்படியே நாம் வளர வளர நமது அதிகார வட்டத்தைக் கூட்டியும் குறைத்தும் கொண்டு நமது வாழ்க்கையின் அந்திமக் காலம் வரை வாழுகின்றோம்.

ஒரு அதிகார எல்லையில் கவனம் செலுத்தவில்லை என்றால் அந்த இடத்திற்கு வேறு யாரேனும் வரவில்லை என்றால் ஒன்றும் பாதகமில்லை, ஆனால் அதிகார எல்லைகளை நாள் தோறும் உருவாக்கும் மனிதர்கள் எந்த அதிகார எல்லைகளையும் விட்டு வைப்பதில்லை.

ஒரு அதிகார மையம் தங்களுக்குத் தேவையில்லை என்றால் அதனை விடுவது தவிர வேறு வழியில்லை.ஆனால் ஒரு அதிகார எல்லையை கைவிடும் முன்பு நன்கு சிந்தனை செய்து அதனை கைவிட வேண்டும்.அதனை விடச் சிறந்த அதிகார எல்லைகள் இருந்தால் மட்டுமே இப்படிக் கைவிட வேண்டும் .

**அதிகார மையம் பற்றிய சில சிந்தனைகள்:**

மனிதன் மனிதனாக வாழ இப்படிப்பட்ட அதிகார மையங்கள் வேண்டும் என்பதை நாம் அனைவரும் உணர வேண்டும் . அதிகார எல்லைகள் என்பது நிரந்தரமானவைகள் அல்ல. அவ்வப்போது நாமாகவே மாற்ற வேண்டிய கட்டாயம் ஏற்படும், இல்லையென்றால் சூழ்நிலை களால் நாம் அதிகார மையத்தை இழக்கலாம். எப்படிப் பட்ட அதி கார வட்டத்தை நாம் உருவாக்குகின்றோம் என்பதனையும் எப்படிப்பட்ட அதிகாரமையத்தை நாம் நாமாக இழக்கின்றோம் அல்லது இழக்க வைக்கப்படுகின்றோம் என்பதைப் பொறுத்துத் தான் நமது வாழ்க்கை வெற்றிகள் இருக்கின்றன என்பதைச் சிந்தனைக்கு எடுத்துக் கொண்டு அதிகார வட்டத்தை உருவாக்கி , விரிவுபடுத்தி நலமுடன் வாழ்வோம்.



## தெரிந்து கொள்வோம்

காற்று வீசும் திசையிலேயே தலை வைத்துப் படுக்கும் பழக்கம் நாய்க்கு உண்டு.

மனிதன் ஒரு வார்த்தை பேச சுமார் 72 தசைகள் வேலை செய்ய வேண்டும்.

உலகிலேயே மிகச் சிறிய கண்டம் ஆஸ்திரேலியா.

சீனாவைச் சுற்றி மொத்தம் 11 நாடுகள் உள்ளன.


பிறந்த குழந்தைகள் அழுதால் கண்ணீர் வராது. ஏனென்றால் கண்ணீர்ச் சுரப்பி வளர்ந்து செயல்பட குறைந்தது 15 நாள்கள் ஆகும்.

காந்திஜி முதன்முதலில் சென்ற வெளிநாடு இங்கிலாந்து.

கைரேகையை வைத்து அடையாளம் கண்டுபிடிக்கும் பழக்கத்தைக் கண்டுபிடித்தவர்கள் சீனர்கள்.

சூரியனை மிக வேகமாக (மணிக்கு 1,72,248 கி.மீ.) சுற்றும் கிரகம் புதன்.

## வர்ணம் தீட்டலாம் வாங்க...




## விண்ணைத் தொட்ட மனிதர்கள்

### நீல் ஆம்ஸ்ரோங்

அப்பலோ 11 விண்கலத்தில் சென்று நிலவில் முதல் காலடி வைத்தவர் நீல் ஆம்ஸ்ரோங். அப்படிக் கால் பதித்தபோது அவர் சொன்ன வார்த்தைகள்தான், 'மனிதனைப் பொறுத்தவரை இது சிறிய காலடி, ஆனால் மனித இனத்துக்கு இது மிகப் பெரிய பாய்ச்சல்' என்று. நிலவில் நீல் ஆம்ஸ்ரோங் முதல் காலடியை எடுத்து வைக்கும் திட்டம் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டதல்ல. அந்த விண்கலத்தைத் தலைமையேற்றுச் செலுத்தும் பொறுப்பே அவருக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால், தரைக் கட்டுப்பாட்டுத் தளத்தில் இருந்து வந்த உத்தரவை, அவருடைய சக விண்வெளி வீரர்கள் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. உத்தரவைப் புரிந்துகொண்ட ஆம்ஸ்ரோங் முதலில் காலடி எடுத்து வைத்தார். நிலவில் கால் பதித்த முதல் மனிதராக மாறி வரலாறும் படைத்தார். அதிலும் முதலில் பதித்தது வலது காலை அல்ல, இடது காலை.

யூரி ககாரின்

ஆம்ஸ்ரோங் நிலவைத் தொடுவதற்கு 8 ஆண்டுகளுக்கு முன்பு, விண்வெளியில் முதலில் பறந்தார் ரஷ்யாவைச் சேர்ந்த யூரி ககாரின். வாஸ்டாக் 1 என்ற விண்கலம் மூலம் உலகைச் சுற்றி வந்து அவர் சாதனை படைத்தார். அவர் விண்வெளியில் பறந்தது, வரலாற்றில் மிகப் பெரிய திருப்புமுனை. விண்ணில் பறந்த முதல் மனிதரான அவர், அப்படிப் பறந்தபோது ஏற்பட்ட பதற்றத்தை 'வயிற்றுக்குள் பட்டாம்பூச்சிகள் சிறகடித்தது' போல இருந்தது என்று கூறியிருந்தார். அவரைச் சுமந்து சென்ற விண்கலம் வெறும் 108 நிமிடங்களில் உலகை வலம் வந்தது.



## பிரதமர் வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவே

### முன்னாள் அமைச்சர் காமினி லொக்குகே கூறுகின்றார்

கொழும்பு, மார்ச் 9
எதிர்வரும் பொதுத் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவே பிரதமர் வேட்பாளராக நிறுத்தப்பட வேண்டும் என்று முன்னாள் அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

"மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியில் இருக்கும் போது அரசியல்வாதிகளுக்கு அவரை தவிர எவரும் இருக்கவில்லை. அவர் தோல்வியடைந்து சில மணி நேரத்தில் அவரை திட்ட ஆரம்பித்து விட்டனர். குறை கூறினர். நாங்கள் அப்படி செய்யவில்லை."– என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

"பொதுத் தேர்தலில் சிறிலங்கா சுதந்தரக் கட்சியின் அனைத்து தலைவர்களும் ஒன்றிணைய வேண்டும். பிரதமர் வேட்பாளராக மஹிந்த ராஜபக்ஷவே நிறுத்தப்பட வேண்டும். அந்த நிலைப்பாட்டிலேயே நாங்கள் இருக்கின்றோம்."– என்றும் அவர் குறிப்பிட்டார்.

காமினி லொக்குகே, ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து கொண்டவராவார். (ற)

## 973 வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை

அரசு இடைக்கால வரவு செலவு திட்டத்தில் பொதுமக்களுக்கு வழங்கிய நிவாரணங்களை வழங்காத 973 வர்த்தகர்களுக்குஎதிராகசட்ட நடவடிக்கை எடுக்க பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது. நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப் புகளில் இந்த வர்த்தகர்கள் கைது செய்யப்பட்டனர். வரவு–செலவுத்திட்டத்தில் வழங்கப்பட்ட நிவாரணங்களை வழங்க மறுக்கும் வர்த்தகர்கள் தொடர்பாக 011 7755481 என்ற இலக்கத்துக்கு தொடர்பு கொண்டு முறைப்பாடு செய்ய முடியும் என்று பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது. (ற)

# உரிய ஆசனம் வழங்கும்வரை அமர்வுகளை புறக்கணிப்பேன்

### ராஜீவ விஜேசிங்க எம்.பி. பிடிவாதம்

கொழும்பு, மார்ச் 9
தமக்கு உரிய வரிசையில் ஆசனம் வழங்கப்படும் வரையில் நாடாளுமன்ற அமர்வுகளைப் புறக்கணிக்கப் போவதாக நாடாளுமன்ற உறுப்பினர் ராஜீவ விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

"அமைச்சர்களுக்கு மத்தியில் எனக்கு ஆசனம் ஒதுக்கப்பட்டுள்ளது. நான் அமைச்சர் அல்ல எனவே அந்த வரிசையில் அமர்வது பொருத்தமாக அமையாது. இந்த விடயம் குறித்து அவைத் தலைவருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளேன். மக்களுக்கு சேவையாற்றுவதே தவிர, நாடாளுமன்றில் சென்று அமர்ந்து கொள்வது எனது நோக்கமன்று"– என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

உயர்கல்வி இராஜாங்க அமைச்சராக கடமையாற்றி வந்த ராஜீவ விஜேசிங்க, உயர்கல்வி அமைச்சர் கபீர் ஹாசீமுடன் ஏற்பட்ட முரண்பாட்டைத் தொடர்ந்து பதவியிலிருந்து விலகியிருந்தார்.

இதேவேளை, அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வுகளின் போது பிரதமர் ரணில் விக்ரம சிங்க. ராஜீவ இன்னமும் அமைச்சரே என குறிப்பிட்டிருந்தார்.(ற)

# மஹிந்த அரசின் குறைபாட்டால் ஐ.நாவில் அழுத்தங்கள் ஏற்பட்டன

### முன்னாள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க கூறுகின்றார்

கொழும்பு, மார்ச் 9
மஹிந்த அரசில் வெளிநாட்டுக் கொள்கையில் இருந்த சில குறைபாடுகள் காரணமாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அழுத்தங்கள் ஏற்பட்டன. புதிய அரசால் ஐ.நா. அறிக்கை தாமதப்படுத்தப்பட்டமை வரவேற்கத்தக்கது. – இவ்வாறு தெரிவித்துள்ளார் முன்னாள் ஜனாதிபதியின் மனித உரிமைகள் விவகாரங்கள் தொடர்புக்கான விசேட பிரதிநிதியும் முன்னாள் அமைச்சருமான மஹிந்த சமரசிங்க.

சிங்கள மொழி ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"இலங்கை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு வெளியிட இருந்த அறிக்கை தாமதப்படுத்தப்பட்டமை புதிய அரசுக்குக் கிடைத்த மிகப் பெரிய வெற்றி. இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி இலங்கையில் முன்னேற்றகரமாக வேலைத்திட்டங்களை மேற்கொள்ள முடியும்.

மனித உரிமைகள் என்பது அரசில் இல்லை, மாறாக பொது நலன் கருதி மேற்கொள்ளப்படும். 30 ஆண்டு காலப் போரை நிறைவு செய்ய பல வழிகளில் உதவி செய்த இந்தியாவை நாம் இன்று மறந்துவிட்டோம், அதே போல் அமெரிக்காவின் ஆதிக்கத்தையும் மதிக்கவில்லை.

2009ஆம் ஆண்டு மனித உரிமை ஆணைக்குழுவில் இணைந்து கொண்ட அமெரிக்காவின் குடியரசுக் கட்சி மனித உரிமை விவகாரத்தில் பெரிதாக அக்கறைகாட்டாத போதிலும், பராக் ஒபாமாவின் அரசின் ஜனநாயக கட்சி மனித உரிமை விவகாரங்களில் முக்கிய கவனம் செலுத்தியது. இதற்கு ஐரோப்பா, ஆபிரிக்கா ஏனைய ஆசிய நாடுகள் ஒத்துழைப்பு வழங்கின, எனினும் நாம் இதனை புரிந்து கொள்ளவில்லை.

ஐ.நாவின் பாதுகாப்புச் சபையிலிருக்கும் சீனா, ரஷ்யா ஆகிய இரண்டு நாடுகளும் இலங்கைக்கு ஆதரவு வழங்கிய போதிலும் மனித உரிமைகள் ஆணைக்குழு நடத்திய வாக்கெடுப்பைத் திசைதிருப்ப முடியாமல் போனது. இது குறித்துத் தெளிவாக புரிந்துகொண்ட நான் முன்னாள் ஜனாதிபதியிடம் தெரிவித்தேன்.

எமது இராஜதந்திர சேவையில் அரசியல் ரீதியான நியமனங்கள் அதிகரித்து இருந்தன. லக்ஷமன் கதிர்காமர் காலத்தோடு ஒப்பிடுகையில் 65% அரசியல் நியமனங்கள் கடந்த அரசில் காணப்பட்டன. போரின் பின்னர் மனித உரிமை விவகார அமைச்சு ஒன்றை நாம் தவிர்த்தது பெரும் பிழை. 2014ஆம் ஆண்டு நான் ஜெனிவாவுக்கு செல்லும் போது நிலைமை தலைகீழாக இருந்தது.

இந்நிலையில் என்னால் சுதந்திரமாக செயற்பட முடியாத நிலையில் எனக்கு வழங்கப்பட்ட தற்காலிக அதிகாரங்களைக் கொண்டு நான் செயற்பட்டேன்"– என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)



உத்தியோகபூர்வ பயணமாக இலங்கை வந்திருந்த ஜப்பானிய வெளியுறவுத்துறை இராஜாங்க அமைச்சர் மினோறு கியூஷி ஜனாதிபதி மைத்திரிபாலவை கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார். (ற)

## மஹிந்த வென்றிருந்தால் சிறையில் இருந்திருப்பேன்

### அத்துரேலிய ரத்ன தேரர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 9
கடந்த ஜனாதிபதி தேர்தலில் மஹிந்த வெற்றி பெற்றிருந்தால் தான் தற்பொழுது சிறையில் இருந்திருக்க வேண்டும் என்று கூறியுள்ளார் ஜாதிக ஹெல உறுமயவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அத்துரலிய ரத்ன தேரர்.

ராஜகிரியவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் வெற்றி பெற்றிருந்தால் பல விதமான சூழ்ச்சிகள் இடம்பெற்றிருக்கும் எனவும் தன்னையும் சிறைக்கு அனுப்பியிருப்பார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற)

# பயணிகள் சேவைகள் மத்தளவில் நிறுத்தம்

### கடந்த மாதம் இரு பயணிகளே தரையிறங்கினராம்

கொழும்பு, மார்ச் 9
மத்தள மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்துக்கான சகல பயணிகள் விமானப் போக்குவரத்து சேவைகளையும் இரத்துச் செய்ய அரசு தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் பயணிகள் விமானப் போக்குவரத்து சேவைகள் இரத்துச் செய்யப்பட உள்ளன என்று விமான நிலையம் மற்றும் விமான சேவை, துணை தலைவர் சஞ்சீவ விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

விமான நிலையத்தைப் பராமரிப்பதற்காக 250 மில்லியன் ரூபா செலவிடப்பட்ட போதிலும், கடந்த மாதம் இரண்டு பயணிகள் மட்டுமே விமான நிலையத்தில் தரையிறங்கியிருந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பெருமளவு பணத்தைச் செலவிட்டு விமான நிலையத்தை பராமரிப்பது நாட்டின் பொருளாதாரத்திற்கு பாதக நிலைமையை ஏற்படுத்தும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

விமான நிலையத்தில் 450 பேர் பணியாற்றி வருவதாகவும் இதில் சிலர் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு இடமாற்றம் செய்யப்பட உள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் காலத்தில் சரக்கு விமானங்கள் தரையிறங்குவதற்காக இவ் விமான நிலையம் பயன் படுத்தப்படும் என்றும் கூறப்படுகின்றது.(ற)

## கண்டி சென்றோர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை

### சிறிலங்கா சுதந்திரக் கட்சி கூறுகின்றது

கொழும்பு, மார்ச் 9
கண்டியில் முன்னாள் ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷவுக்கு ஆதரவாக இடம்பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. அந்தக் கட்சியின் பேச்சாளர் டிலான் பெரேரா இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பிரதம வேட்பாளராக மகிந்தராஜபக்ஷவை நியமிக்க வலியுறுத்தி இந்த கூட்டம் நடத்தப்பட்டிருந்தது. அதில் கலந்து கொள்வதற்கு சிறிலங்கா சுதந்திர கட்சியின் உறுப்பினர்களுக்கு கட்சித் தலைமையால் தடைவிதிக்கப்பட்டிருந்தது.

எனினும் இதனை மீறி இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட சிறிலங்கா சுதந்திர கட்சியின் உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். (ற)

# கயிறுடன் காத்திருக்கும் விமல் தூங்க மறுக்கும் ராமநாயக்க

கொழும்பு, மார்ச் 9
சமூக சேவைகள், நலன்புரி மற்றும் கால்நடை வளர்ப்பு அபிவிருத்தி பிரதி ரஞ்சன் ராமநாயக்க சொன்னது போல தூக்கிட்டு தற்கொலை செய்து கொள்வதற்கு கயிறு தருகிறேன். தற்கொலை செய்து கொள்ள அவர் ஆயத்தமா? – இவ்வாறு கேள்வியெழுப்பியுள்ளார் முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ.

மஹிந்தவுக்கு ஆதரவு தெரிவித்து கடந்த வெள்ளியன்று கண்டியில் பேரணியொன்று இடம்பெற்றது. அதற்கு 10 ஆயிரத்திற்கும் அதிகமானோர் கலந்துகொண்டால் தான் தூக்கிட்டு தற்கொலை செய்து கொள்வதாக பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க கூறியிருந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது. அந்தப் பேரணிக்கு 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இந்தநிலையிலேயே கயிறு தயாராகவுள்ளது தாங்கள் தூக்கிட்டு தற்கொலை செய்து கொள்ள தயாரா? என விமல், ரஞ்சனிடம் கேள்வியெழுப்பியுள்ளார்.

அதற்குப் பதிலளித்துள்ள ராமநாயக்க, மக்கள் கூட்டத்தை காட்டி மக்களை தவறான பாதைக்கு அழைத்து செல்ல குறித்த குழு முயற்சிக்கின்றது. நான் அவ்வாறான ஒரு சவால் விடுக்கவில்லை, அவ்வாறு சவால் விட்டிருப்பின் அதனை நிரூபித்து காட்டுமாறும், இது தொடர்பில் தன்னுடன் விவாதத்துக்கு வருமாறும் பிரதி அமைச்சர் விமலுக்கு சவால் விடுத்துள்ளார்.

விமல் கூறியது முற்றிலும் உண்மைக்கு புறம்பான கருத்து, அரசியல் அனாதைகளாக்கபட்ட விமல் வீரவன்ச, கம்மன்பிலவின் அறிவித்தல்களுக்கு பதலளிக்க வேண்டிய அவசியம் எனக்கில்லை என ரஞ்சன் குறிப்பிட்டுள்ளார்.

இவர்களின் பேரணிகளுக்கு மக்களை அழைத்துவருவதற்கு 122 பஸ்களை பயன்படுத்தியுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் ராஜித சேனாரத்ன தெரிவித்ததை ரஞ்சன் சுட்டிகாட்டியுள்ளார்.

பேரணிக்கு அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவையில் இருந்து மக்களை அழைத்து வந்ததாக புகைப் படங்கள் மூலம் தெரியவந்துள்ளது. இதேவேளை ஜனாதிபதி தேர்தலில் நான்கரை இலட்ச வாக்குகளில் மஹிந்த தோல்வியுற்றார் என்பதையும் ரஞ்சன்ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

இணையத்தளங்கள் ஊடாக தனக்கு சேறு பூசுவதற்காக பல வித மான முயற்சிகளை மேற்கொண் டார்கள் என பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க குறிப்பிட்டுள்ளார். (ற)

# அதிகாரத்தைப் பகிர்ந்து மக்களின் பிரச்சினையைத் தீர்க்கவேண்டும்

**கூட்டமைப்பு மு.கா. இணைந்து செயற்பட வேண்டும் என்கிறார் ஹஸன் அலி**

கொழும்பு, மார்ச் 09

"வடக்கு, கிழக்கு மாகாணம் தமிழ், முஸ்லிம் சமூகங்களினது தாயகம் என்ற கோட்பாட்டை அடிப்படையாக வைத்துத்தான் முஸ்லிம் காங்கிரஸும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல்வாதிகளும் தங்களது அரசியல் சிந்தனைகள் மூலம் செயற்பட்டு வருகின்றார்கள். இதற்கான அனைத்து செயற்பாடுகளையும் எமது இரு இனங்களும் ஒன்றுசேர்ந்து பழைய மனக்கசப்புகளை மறந்து எமது மக்களுடைய பிரச்சினைகளுக்கு ஒன்றுசேர்ந்து அதிகாரங்களைப் பகிர்ந்து எமது மக்களின் குறைகளைப் போக்க உழைக்க வேண்டும்" என்று இராஜாங்க அமைச்சரும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகமுமான ஹஸன் அலி தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பிலுள்ள பல வைத்திய சாலைகளுக்கு நேற்று சென்ற போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:

"சகல அதிகாரங்களும் கொண்ட மாகாண சபையாக கிழக்கு மாகாணசபை திகழ வேண்டும் என்ற நோக்கத்திற் காக கிழக்கு மாகாண சபையில் அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கியதாக தேசிய அரசு ஒன்றை அமைத்திருக்கின்றோம். அதனூடாக அனைத்து வளங்களையும் பெற்றுக்கொள்ள அனைவரும் முன்வரவேண்டும்.

இலங்கையில் அனைத்து இனங்களுக்கும் அனைத்து அதிகாரங்களும் கிடைக்கவேண்டும் என்பதில் எமதுசுகாதார அமைச்சர்உறுதியாக இருந்து செயற்பட்டு வருகின்றார். அதனொரு கட்டமே இந்த நாட்டிலே 13ஆவது திருத்தச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும் என்றும், அதனூடாக சிறுபான்மை இனம் அனைத்து அதிகாரங்களையும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதிலும் அவர் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றார்.

மாகாணசபையின் கீழ் இயங்கும் அனைத்து வைத்திய சாலைகளும், தங்களை மா காண சபையின் கீழ் இருந்து விடுபடச்செய்து மத்திய அரசிற்குள் இணைப்பதற்கான வேலைத் திட்டங்களை செய்து தரவேண்டும் எனும் கோரிக்கையை முன்வைக்கின்றன.

ஆனால், மத்திய அரசு மாகாணத்தின்கீழ் உள்ள அனைத்து வைத்தியசாலைகளுக்கும் ஒழுங்கான வளங்களைப் பங்கீடு செய்திருக்குமானால் எந்தவொரு மாகாண சபையின் கீழ் உள்ள வைத்தியசாலைகளும் மத்திய அரசில் சேர்க்கவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்க மாட்டா. மாறாக, மத்திய அரசு ஒழுங்கான வளங்களைப் பங்கீடு செய்யாமையே இதற்கு முழுக் காரணமாகும்.

எதிர்வரும் காலத்தில் இவ்வாறான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காகவே 100 நாள் வேலைத் திட்டத்தை மையமாக வைத்து அமைச்சரின் வேண்டுதல்களுக்கு ஏற்ப அனைத்து கிழக்கு மாகாணங்களிலும் உள்ள வைத்தியசாலைகளுக்குச் சென்று பிரச்சினைகளை ஆராய்ந்து அமைச்சரிடம் கோரிக்கைகளை முன்வைக்க இருக்கின்றேன்.

அதனொரு கட்டமாக அண்மையில் அம்பாறையிலுள்ள 17 வைத்தியசாலைகளுக்குச் சென்று அங்குள்ள வைத்திய சாலைகளின் பிரச்சினைகளை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுசென்றிருக்கின்றேன்.

30 வருட போராட்ட காலத்தில் இரண்டு இனங்களுக்குள்ளும் கசப்புணர்வுகள் இருந்ததன் காரணமாக முஸ்லிம்கள் தமிழர் பிரதேசங்களுக்குச் செல்லாமலும், தமிழர்கள் முஸ்லிம் பிரதேசங்களுக்குச் செல்வதிலும் மனக்கசப்புற்றிருந்தார்கள். அந்நிலை இனிமேல் எவரிடமும் வரக்கூடாது அதனை ஓரங்கட்டிவிட்டு இரண்டு சமூகமும் ஒருவரை ஒருவர் புரிந்து செயற்படமுன்வரவேண்டும்'' எனத் தெரிவித்துள்ளார். (ற-சி)

# வெளிநாட்டில் பதுக்கப்பட்டுள்ள பணம் பற்றாக்குறையை போக்க போதுமானது

**நிதியமைச்சர் கூறுகின்றார்**



கொழும்பு, மார்ச் 9

சுவிட்ஸர்லாந்து, உக்ரைன் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்தில் உள்ள வங்கிகளில் முன்னைய அரச தலைவர்களும், உயர் அதிகாரிகளும் பல மில்லியன் ரூபாவைச் சட்டவிரோதமாக முதலீடு செய்துள்ளனர் என்று தெரிவித்துள்ள நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க, அந்த நிதி இலங்கையின் வரவு செலவுத்திட்ட பற்றாக்குறைக்கு தீர்வு காண்பதற்கு போதுமானது எனவும் தெரிவித்துள்ளார்.

அரசு இந்த பணத்தை நாட்டிற்கு திருப்பிக் கொண்டு வருவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது, ஆரம்பகட்ட விசாரணைகளின் போது அதில் தொடர்புபட்டவர்களின் பெயர்விவரங்கள் கிடைத்துள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

"2015 இல் வரவுசெலவுதிட்ட பற்றாக்குறை 521பில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. வெளிநாட்டு வங்கிகளில் மறைத்து வைக்கப்பட்டுள்ள பணம் இந்த பற்றாக்குறைக்கு 75 வீதம் தீர்வு காண்பதற்கு போதுமானது. மூன்று நாடுகள் இந்த ஆரம்பகட்ட விசாரணைகளில் ஒத்துழைப்பை வழங்கியுள்ள, குறிப்பிட்ட குற்றவாளிகளின் பெயர் விவரங்கள் விரைவில் பகிரங்கப்படுத்தப்படும். சட்டவிரோத பணப்பரிமாற்றம் என்பதன் அடிப்படையிலேயே விசாரணைகள் இடம்பெறுகின்றன. இந்த பணத்தை நாட்டிற்கு திருப்பிக் கொண்டுவரும் முயற்சிகளில் உதவுவதற்காக உலக வங்கியின் விசேட குழுவொன்று இலங்கை வந்துள்ளது."– என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ற)

# இராவணனுடைய விமானம் மஸ்கெலியாவில் தரித்ததா?

கொழும்பு, மார்ச் 9

மன்னன் இராவணவன் தனது புஷ்பக விமானத்தை நிறுத்தி ஓய்வெடுத்ததாக கூறப்படும் இடம் ஒன்று, மத்திய மலைநாட்டில் இருக்கின்றது என்று கூறப்படுவதுடன், அந்த இடத்தின் புகைப்படங்களும் வெளியாகியுள்ளன.

இராமாயணத்தில், இராவணன் மன்னனுக்கு புஷ்பக விமானம் இருந்தாக கூறப்படுகிறது. இராவணன், சீதையை மறைத்து வைத்த இடம்மெனக் கூறப்படும் நுவரெலியாவில் உள்ள சீதா எலிய பற்றியும் அதில் கூறப்பட்டுள்ளது.

சீதா எலிய கோயிலில் தற்போது இந்துக்கள் வழிபட்டு வருகின்றனர். சீதையை கடத்திவர பயன்படுத்திய புஷ்பக விமானத்தை, மன்னன் இராவணன் நிறுத்தி ஓய்வெடுத்ததாகக்? கூறப்படும் இடம் ஒன்றில் தோட்டத்தொழிலாளர்கள் பூஜை வழிபாடு செய்து வருகின்றனர்.

மஸ்கெலியா, மவுசாகலை நீர்த்?தேக்கம் மற்றும் கெனியோன் நீர்மின் நிலையத்திற்கு மேல் ஐந்து கன்னிமார் மலைக்கு அருகில் மவுசாகலை நய்சா தோட்டத்தின் கீடன் பிரிவில் சுமார் மூன்று ஏக்கர் பரப்பிலான கற்பாறையாக இந்த இடம் காணப்படுகிறது.

அந்த கற்பாறையில் சில அடையாளங்கள் காணப்படுகின்றன. அவை மன் னன் இராவணனின் புஷ்பக விமா னத்தின் சில்லுகளின் தடங்கள் என தோட்டத்தொழிலாளர்கள் நம்புகின்றனர்.

மட்டமான இந்த கற்பாறைக்கு அருகில் தடாகம் ஒன்றும் காணப்படுகிறது. சில வருடங்களுக்கு முன்னர் இந்த தடாகம் பெரியதாக காணப்பட்டதாகவும் அது பராமரிக்கப்படாத காரணத்தினால், சிறியதாக மாறியுள்ளது எனவும் அவர்கள் கூறு கின்றனர்.

மன்னன் இராவணனின் புஷ்பக விமானம் பாதரசத்தினால் இயங்கியதாக வரலாறு கூறுகிறது. இந்த கற்பாறை சிவனொளிபாத மலைக்கு அருகில் அமைந்துள்ளது. (ற)



# அடுத்த வாரமளவில் ஜெயக்குமாரி விடுவிக்கப்படலாம்?

கொழும்பு, மார்ச் 9

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள பாலேந்திரன் ஜெயக்குமாரி அடுத்த வாரமளவில் விடுதலை செய்யப்படலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

50 வயதான ஜெயக்குமாரி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் கைது செய்யப்பட்டிருந்தார். சுமார் ஓராண்டு காலம் அவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகளை மீள ஒருங் கிணையச் செய்ய முயற்சித்தவர் என குற்றம் சுமத்தப்பட்ட கோபி என்பவருக்கு அடைக்கலம் வழங்கினார் என்றே அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. எனினும் அவருக்கு எதிராக எவ்வித வழக்குகளும் இதுவரையில் தாக்கல் செய்யப்படவில்லை.

இந்தநிலையில் ஜெயக்குமாரி தொடர்பிலான அறிக்கையை ஒருவார காலத்திற்குள் சமர்ப்பிக்குமாறு பிரதமர் ரணில் விக்ரமசிங்க கோரியுள்ளார் என்று கூறப்படுகின்றது. இந்த அறிக்கையின் அடிப்படையில் விடுதலை செய்வது குறித்து தீர்மானிக்கப்படும் என பிரதமர் குறிப்பிட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. அதனால் பிரதமர் மோடியின் விஜயத்திற்கு சமாந்திரமாக ஜெயக்குமாரி விடுதலை செய்யப்படலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (ற)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்கள்

### திருவிளங்கம் பாலச்சந்திரன் (ரங்கூன் பாலா)

அளவெட்டியைப் பிறப்பிடமாவும் உரும்பிராய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருவிளங்கம் பாலச்சந்திரன் (07.03.2015) சனிக் கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக் கப்படும்.

182, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல். க. நாமநாதன்
077 9352775



### சின்னர் நல்லதம்பி

கரணவாய் மேற்கு, சிவரியோடையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னர் நல்லதம்பி நேற்று (08.03.205) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னர்-சந்தி தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற கந்தர் - அம்மா தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்றவர்களான சின்னக் குட்டி, சிவப்பி, சின்னத்தம்பி ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற சின்னப்பிள்ளையின் அன்புக் கணவரும், ஈசலாதேவி, காலஞ்சென்ற பவா மற்றும் கலாவதி, நாகேந்திரம், ஜெயேந்திரம் (சுவிஸ்) ஆகியோரின் அன் புத் தந்தையும், இராசதுரை, வேலும்மயிலும், மகாராசா, கௌசலாதேவி (பாப்பா), சுலோசினி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிவரியோடை, கரணவாய் மேற்கு,
கரணவாய்.

தகவல் :
குடும்பத்தினர்.

## 18 பொலிஸ் அதிகாரிகளுக்கு இடமாற்றம்

கொழும்பு, மார்ச் 9
சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் 18 பேரும், பொலிஸ் அதிகாரியொருவரும் உடன் நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமை அலுவலகம் அறிவித்துள்ளது.
பொதுமக்கள் சமாதானம் அனர்த்த முகாமைத்துவ மற்றும் கிறிஸ்தவ நடவடிக்கைகள் அமைச்சின் செயலாளரின் அனுமதியுடனேயே இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## பஸ் சாவியுடன் ஓடிய இளைஞன்!

கொழும்பு, மார்ச் 9
மாத்தறையிலிருந்து கொழும்பு நோக்கி சென்ற சொகுசு பஸ்ஸில் பயணித்த இளைஞரொருவர் பஸ்ஸில் இருந்து இறங்கும்போது பஸ்ஸின் சாவியை எடுத்து கொண்டு ஓடியுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு நடந்துள்ளது.
குறித்த இளைஞன், மாதம் பாகம சந்தியில் வைத்து பஸ்ஸிலிருந்து இறங்கும் போது, பஸ்ஸின் சாவியை எடுத்துகொண்டு இறங்கி ஓடியுள்ளார். அதன் காரணமாக குறித்த பஸ் 15–20 நிமிடங்கள் தாமதமாக பயணித்ததாக தெரிவிக்கப்படுகின்றது.
குறித்த இளைஞனுடன் எந்தவொரு பிரச்சினையும் ஏற்படவில்லை எனவும், எதனால் இளைஞன், சாவியை எடுத்து கொண்டு ஓடினார் என தமக்கு தெரியாது என்றும் பஸ்ஸின் சாரதி மற்றும் நடத்துனர் ஆகியோர் தெரிவித்துள்ளனர். (ற)

## ஜயரத்னவிடம் 15 அரச வாகனங்கள்!

கொழும்பு, மார்ச் 9
முன்னாள் பிரதமர் டி.எம். ஜயரத்ன பிரதமராக பதவி வகித்திருந்த காலத்தில் பயன்படுத்திய அரச வாகனங்கள் இன்னமும் ஒப்படைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.
முன்னாள்பிரதமர்ஜயரத்ன 15 அரசாங்க வாகனங்களை இன்னமும் ஒப்படைக்கவில்லை என அமைச்சர் கரு ஜயசூரிய அமைச்சரவையில் தெரிவித்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ற)

உதயன்
advt@uthayan.com
0215671111

# மரண அறிவித்தல்

## திருமதி கமலாம்பிகை சின்னத்துரை



தோற்றம்
02.05 1932

மறைவு
06 03. 2015


யாழ். அச்சுவேலி தோப்பைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கமலாம்பிகை சின்னத்துரை அவர்கள் 06-03-2015 (வெள்ளிக் கிழமை) அன்று யாழ்ப்பாணத்தில் இறைவனடி சேர்ந்தார்.
அன்னார், காலஞ்சென்ற சதாசிவம், செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி சின்னத்துரை அவர்களின் பாசமிகு மனைவியும், ஜெயலக்ஷ்மி (இலங்கை), பரலோகநாதன்(கனடா), சற்குணநாதன்(கனடா), சத்தியநாதன் (கனடா), நித்தியலக்ஷ்மி(கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ் சென்றவர்களான பாக்கியலஷ்மி, குலசிங்கம், கமலநாதன், பத்மநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற ஆனந்தராஜா, மற்றும் சிவராணி, சுகுணா, ரதிஜோதி, மதிசூடி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற கௌரி, மற்றும் ஜெயந்தி சாந்தகுமார், ஆனந்தி ரமணன், நகுலன் ரேணுகா, கஜேந்திகா ஜீவன், லாவன்யா, நேத்தன், சுரேஸ், சுபாங்கி, இந்துஜா, இளங்கோ ஆகியோரின் அன்புப் பேத்தியும்,
தர்சன், கௌசி, திவ்யா, லக்சனா, காவியன், வர்சன், அபிஷன், அக்ஷயன், அஞ்சனா, அர்ஜுனன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியை (10-03-2015) செவ்வாய்க்கிழமை அச்சுவேலி தோப்பில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் தோப்பு இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அச்சுவேலி, தோப்பு.
தகவல்:
குடும்பத்தினர்.
T.P:021 205 8418

இறைவன் எனது மீட்பானார் அவரே எனக்குத் துணையானார்
அவரைக் கொண்டு நான் வாழ எதனைக் கண்டும் பயமில்லை:

# மரண அறிவித்தல்

மண்ணில்
12
09
1946



மறைவு
07
03
2015

## அரியகுட்டி துரைலிங்கம்

[பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்க முன்னாள் பணியாளர்]

பருத்தித்துறை புனித அந்தோனியார் பதியினைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாக வும் கொண்ட திரு. அரியகுட்டி துரைலிங்கம் கடந்த (07.03.2015) சனிக்கிழமை காலமாகி விட்டார்.
அன்னார் திருமதி செபமாலை அம்மா வின் (மதுரம்) பாசமிகு கணவரும், அனஸ்ரின், பிரபாகரன், ஜான்சன், றொபின் சன், லூட்ராஜ், பிரதீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெலீமா, குகசாந்தினி ஆகியோ ரின் அன்பு மாமனும், சரணியா, ஷாம்சன், அபினா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான தங்கலிங்கம், புஸ்பமலர் - தவராசா மற்றும் யோகலிங்கம், சந்திரலிங்கம் (நோர்வே), கணேசலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.
அன்னாரின் இறுதி ஆராதனை நிகழ்விற்காக பூதவுடல் (09.03.2015) திங்கட்கிழமை பி.ப. 2.30 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி நிறை வேற்றப் பட்டு கோரியடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

4ஆம் குறுக்குத் தெரு,
பருத்தித்துறை.
தகவல் : து. பிரபாகரன் (மகன்)
077 4397240, 077 2654252

# மரண அறிவித்தல்

தோற்றம்
1967
11
01



மறைவு
2015
03
06

## சண்முகநாதன் கந்தகுமார்

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகநாதன் கந்தகுமார் கடந்த (06.03.2015) வெள் ளிக்கிழமை இறைபதம் அடைந் தார்.
அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்துவின் (சாமியார்) பேரனும், காலஞ்சென்ற சண்முக நாதன் (கிச்சி)- மற்றும் பூலோகநாயகி தம்பதியரின் அன்பு மகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், தர்மலிங்கம் -பூமணி தம்பதியரின் அன்பு மருமகனும், கரிஸ்மாவின் பாசமிகு தந்தையும், இராஜசிங்கம் - யோகேஸ்வரி (வட்டுக்கோட்டை), சிறிகாந்தன் - கருணைநாயகி (கன டா), ரவி-கலாநாயகி (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜெயபாலன்- கேதீஸ்வரி (லண் டன்), திருக்குமார் -யோகேஸ்வரி (பிரான்ஸ்), ஜெயந்திரன்-ரதீஸ்வரி (கனடா), சிவகுமார் - தனேஸ்வரி (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காயத்திரி, தீபா, விஸ்ணுஜன், அரன்ஜா, அம்புஜா, ஆருஜன், இலக்கியன் ஆகியோரின் பாசமிகு மாமாவும், கிரிதரன், தர்மினி, தர்சிகா, அனுசியா, கபிலன், கிருஸ்ணா, சுலக்சிகா, சக்திக்கா, சிவதர்சன், சிவப்பிரசன்னா, சிவேந்திரன் ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும். அஜந்தன், டுவாரகா, ரமேஸ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவா ர்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


காசிவாசி செந்தில்நாதையர் வீதி,
ஏழாலை கிழக்கு, ஏழாலை.
தகவல் : குடும்பத்தினர்.
021 2059356, 077 8604122

## நாகப்பர் தாமோதரம்பிள்ளை



தொல்புரம் மேற்கு, சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகப்பர் தாமோதரம்பிள்ளை 08.03.2015 ஞாயிற்றுக் கிழமை காலமானர்.
அன்னார் காலஞ்சென்றவர்களான நாகப்பர் - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கதிரேசு - இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கோவிந்தர், பொன்னையா மாஸ்ரர், தங்கச்சிப்பிள்ளை, தையல்முத்து மற்றும் கந்தையா ஆகியோரின் அன்புச் சகோதரனும், கமலாதேவி, சந்திரகுமார், சிவதேவி (நோர்வே), காலஞ்சென்ற விமலாதேவி ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெகசோதி, தயாநிதி, நிமலசோதிராஜா ஆகியோரின் அன்பு மாமனும், குணசீலன் (சுகந்தா- திருகோணமலை), சத்தியானந்தன் - விஜயா (டோகா), சுதாகரன்(அபுதாபி) - உஷா, பிரபாகரன் (பிரான்ஸ்), றஜிகரன் - தர்சா, சசிகரன் (ஏர்பில்), கார்த்திகா, கபிலா, மயூரன், தாரணி (நோர்வே) ஆகியோரின் அன்புப் பேரனும், சங்கீதா,உஷாளினி, உஷாந்தினி, கேசவன், பவித்திரா, சந்தோஷ் ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.03.2015) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பொன்னாலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொல்புரம் மேற்கு,
சுழிபுரம்.
(57632) (45.3)
தகவல் :
குடும்பத்தினர்.



## வைரவநாதர் விஸ்வலிங்கம்

விடத்தற்பளையைப் பிறப்பிடமாகவும் மீசாலை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வைரவநாதர் விஸ்வலிங்கம் (ஓய்வு நிலை ஆசிரியர், யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி) நேற்று (08. 03.2015) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.
அன்னார் வைரவநாதர் - அன்னமுத்து தம்பதியரின் அன்பு மகனும், தம்பு-தெய்வானைப் பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பொன்னம்மாவின் (ஓய்வு நிலை ஆசிரியை, யாழ். சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை) அன்புக் கணவரும், நகுலேஸ்வரன் (நகுலேந்திரா பல்பொருள் வாணிபம்- மீசாலைகிழக்கு), ரவீந்திரன் (சுவீடன்), வைத்தீஸ்வரன் (டென்மார்க்), மதி வதனி (கொழும்பு), ஜெயச்சந்திரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந் தையும், இந்திராதேவி (ஆசிரியர், யா/மீசாலை கமலாம்பிகை வித் தியாசாலை), அனெவி (சுவீடன்), புஸ்பலட்சுமி (சந்திரா - டென்மார்க்), காலஞ்சென்ற நவனகுமார் (இராசம் கொமினிகேசன்) அன்பு மாமனும், ராக வன், ராகவி, மார்க்குஸ், சுசானா, சந்திரன், இந்திரன், நிரோஜினி, கீர்த் தனா, நவீசன், சனோஜா, வர்ஜினி, வேணுசன் ஆகியோரின் அன்புப் பேர னும் , காலஞ்சென்ற முருகேசு மகேஸ்வரி (விடத்தற்பளை), தம்பிஐயா பரமேஸ்வரி (விடத்தற்பளை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ் சென்ற மயில் வாகனம், சுப்பிரமணியம் (மந்துவில்) ஆகியோரின் மைத் துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அல்லாரை வீதி,
மீசாலை கிழக்கு, மீசாலை.
தகவல் :
குடும்பத்தினர்.

# இன்னும் சில நாள்களில் சிலர் சட்டத்தின் பிடிக்குள்

## சட்டம் ஒழுங்கு அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 9

எந்த மட்டத்திலான அரசியல்வாதிகளாக இருந்தாலும் பரவாயில்லை, சட்டத்தை சரியான முறையில் நடைமுறைப்படுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது என்று சட்டம் ஒழுங்கு அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

ஊழல், மோசடிகளுடன் தொடர்புடைய சிலர் அண்மையில் கைது செய்யப்பட்டனர். அடுத்த சில நாள்களில் மேலும் சிலரை சட்டத்தின் பிடிக்குள் சிக்க வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் – எனவும் அவர் கூறியுள்ளார்.

தெனியாய பொலிஸ் நிலையத்தில் கட்டடம் ஒன்றை திறந்து வைக்கும் வைபவத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"கடந்த காலத்தில் இந்த பிரதேசத்தில் பொலிஸ் முழுமையாக அரசியல்மயப்படுத்தப்பட்டிருந்தது. பொலிஸாரை பொலிஸ் மா அதிபர் நிர்வாகம் செய்யவில்லை. வேறு நபர்களே பெலிஸாரை கட்டுப்படுத்தினர். நாம் பேசும் பொலிஸாரின் புகழ், கௌரவம் என்பன ஒரு புறம் ஒதுக்கி தள்ளப்பட்டிருந்தன.

பொலிஸாரை அரசியலுடன் தொடர்புபடுத்திக் கொள்ள வேண்டாம் என ஜனாதிபதியும் பிரதமரும் தயவுடன் கேட்டுக்கொண்டுள்ளனர். இதனை அச்சொட்டாக கடைப்பிடிக்க நாங்கள் உத்தேசித்துள்ளோம். பொலிஸாருக்கு கடந்த காலத்தில் மாற்றாந்தாய் மனப்பான்மை காட்டப்பட்டது."– என்றும் அவர் கூறியுள்ளார்.

"இராணுவத்திற்கு இருந்த மதிப்பு பொலிஸாருக்கு இருக்கவில்லை. இதனால், அவர்களுக்கு கிடைக்க வேண்டிய கௌவரத்தை மீண்டும் பெற்றுக்கொடுப்போம். கூடிய விரைவில் அரசியலமைப்புத் திருத்தத்தைமேற்கொண்டுபொலிஸ்



ஆணைக்குழுவை மீண்டும் ஸ்தாபித்து இழந்த கௌரவத்தை பெற்றுக்கொடுப்போம். அதற்கு பிறகு என்னால் கூட பொலிஸாருக்கு உத்தரவுகளை வழங்க முடியாது.

இது 100 நாள் வேலைத்திட்டத்தின் ஒரு வேலையாகும். அத்துடன் பிரஜைகள் பொலிஸை ஏற்படுத்தி, சிவில் பாதுகாப்பு குழுக்களை ஏற்படுத்த எண்ணியுள்ளோம்."– என்றும் அவர் தெரிவித்துள் ளார்.

(ற)

# பிரதமர் பதவி வகிக்க ரணில் தகுதியற்றவர்

## சாடுகின்றது இந்தியாவின் காங்கிரஸ் கட்சி

புதுடில்லி, மார்ச் 9

வழிதவறிச் செல்லும் மீனவர்களையும், ஊடுருவல்காரர்களையும் வேறுபடுத்திப் பார்க்க தெரியாத ரணில் விக்கிரமசிங்க, இலங்கையின் பிரதமராக இருப்பதற்கு தகுதி இல்லாதவர் என்று இந்தியாவின் காங்கிரஸ் கட்சி கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் இந்திய ஊடகங்களில் வெளியான செய்திகளில் கூறப்பட்டுள்ளதாவது:–

இலங்கை பிரதமர் ரணில் விக்ரமசிங்க, 'எல்லை தாண்டி வரும் தமிழக மீனவர்களை சுடுவோம்' என்று மறைமுகமாக கூறினார். 'என் வீட்டுக்குள் ஒருவர் அத்துமீறி நுழைய முயன்றால், அவரை நான் சுடலாம். அதில் அவர் கொல்லப்படலாம். ஆனாலும், அப் படி செய்ய சட்டம் எனக்கு அனுமதி அளிக்கிறது' என்று அவர் கூறினார்.

இதுபற்றி இந்தியாவின் காங்கிரஸ் கட்சியின் செய்தித்தொடர்பாளர் அபிஷேக் சிங்வி சமூக வலைத்தளத்தில் எழுதி இருப்பதாவது,

"ஆமாம், மிஸ்டர் ரணில், உங்கள் வீட்டில் ஊடுருபவர்களை நீங்கள் சுடலாம். ஆனால், பக்கத்தில் நின்று கொண்டிருக்கும் அப்பாவிகளை நீங்கள் சுட்டால், நீங்களும் சுடப்பட வேண்டியவர். கொலைக் குற்றத்துக்காக நீங்கள் விசாரிக்கப்படுவீர்கள்.

ஊடுருபவர்களையும், வழிதவறி செல்லும் மீனவர்களையும் வேறுபடுத்திப் பார்க்கத் தெரியாமல், சுடுவது ஒன்றே தீர்வு என்று கருதினால், ரணில் விக்கிரமசிங்க, பிரதமராக இருக்க தகுதி இல்லாதவர்.

தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியில், அண்டை நாடுகள் இந்தியாவை மிரட்டுகின்றன. அதற்கு அந்நாடுகளுக்கு மன உறுத்தல் இல்லாவிட்டால், இந்தியாவுக்கு மோசமான நாள்கள் நட்ப்பதாக அர்த்தம். 56 அங்குல மார்பு வேண்டும் எனக் கூறிய பிரதமர் மோடி, அதை வெளிநாட்டு அச் சுறுத்தல்களுக்கு பயன்படுத்த மாட்டார் என்று தோன்றுகிறது"– என்று குறிப்பிட்டுள்ளார்.

(ற)

### உதவி பெற

குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்கப் போவதாக அறிவித்துள்ளது. இதற்கான ஆரம்ப நடவடிக்கையாக பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கிராம அபிவிருத்திச் சங்கங்கள் அல்லது மாதர் கிராம அபிவிருத்திச் சங்கள் இயங்காத அல்லது இல்லாத கிராமங்களைச் சேர்ந்தோர், உதவிக்கான விண்ணப்பங்களை தமக்குரிய பிரதேச செயலகத்தில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் பெற்றுக்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்ததன் பின் கட்டாயமாகக் கிராம சேவையாளரின் பரிந்துரையுடன் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் மீளக் கையளிக்க முடியும்.

விண்ணப்பதாரி ஒருவர் முன்னாள் போராளியா?, மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவரா? தமிழ் அரசியல் கைதியின் குடும்பமா? என்பதை மாதர் அல்லது கிராம அபிவிருத்திச் சங்கத்தினராலோ, கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராலோ உறுதிப்படுத்த முடியவில்லையாயின் அதனைப் படிவத்தில் குறிப்பிட்டு அந்தப் படிவங்களையும் அனுப்பி வைக்க முடியும் என்றும் அமைச்சர் அறிவித்துள்ளார்.

இதனை விட, விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பத்தின் இடதுபக்க மேல் மூலையில், தமது தொடர்புக்கான தொலைபேசி இலக்கத்தையும்குறிப்பிட்டுஅனுப்பிவைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (உ–5)

### மூன்றாவது

"எங்களைக் கவனத்தில் கொள்ள எவருமே இல்லையா?", "எங்கள் குரல் கேட்கவில்லையா?", "பிள்ளைகளைக் காணாது தவிக்கும் தாயின் அவலத்துக்கு நீதி இல்லையா?", "சிறையில் வாடும் எம் உறவுகளின் நிலைதான் என்ன?", "சர்வதேச போர்க்குற்ற விசாரணைகளை உடனடியாக ஆரம்பியுங்கள்", போன்ற வாசகங்கள் மும்மொழிகளிலும் எழுதப்பட்ட பதாகைகளைப் போராட்டக்காரர்கள் தாங்கியிருந்தனர்.

காணாமற்போன தமது உறவுகளின் புகைப்படங்களை கையில் ஏந்தியவாறும் கண்ணீர் மல்க அமர்ந்திருந்தனர்.

போராட்டக்காரர்கள் இரவில் வீடுகளுக்குச் சென்று காலையில் மீண்டும் வந்து போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். போராட்டத்தை இரவு பகலாக முன்னெடுப்பதற்குப் போதிய பாதுகாப்பு வழங்கப்படாமையே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

இன்று போராட்டம் தொடரும் என்றோ நேற்றோடு போராட்டம் முடிவடைந்தது என்றோ எதுவும் அறிவிக்கப்படவில்லை. எனினும், தாம் வயதானவர்கள் என்பதால் போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கான உடல்நிலை தங்களிடம் இல்லை என்று பெரும்பாலான போராட்டக்காரர்கள் தெரிவித்தனர். இதனால் போராட்டம் இன்று கைவிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (உ–ரி,23)

### விதவைகளை

அங்கு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா மேலும் தெரிவித்ததாவது:

சர்வதேச மகளிர் தினத்தில் இந்த நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டமை மகிழ்ச்சி. இளம் பெண்களுக்கு எதிராக வன்முறைகள் – வன்புணர்வுகள் இலங்கையில் அதிகரித்து வருகின்றன. வடக்கு – கிழக்கு மாகாணங்களிலும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் பல இடம்பெற்றுள்ளன, இடம்பெற்று வருகின்றன. தமிழர் தாயகத்தில் காணப்படும் அதீத இராணுவக் குவிப்பும் இதற்குக் காரணமாகின்றது.

போரின் இறுதியில், பல பெண்கள் தமது கணவனை இராணுவத்தினரிடம் கையளித்தனர். தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்தவர்களை சரணடையுமாறு இராணுவம் விடுத்த கோரிக்கைக்கு அமைய அவர்கள் அவ்வாறு ஒப்படைத்தனர். பலர் முன்பாக அவர்கள் ஒப்படைக்கப்பட்டனர். அவ்வாறு ஒப்படைக்கப்பட்டவர்களுக்கு இன்று வரையில் என்ன நடந்தது என்று தெரியவில்லை. இன்றும் அவர்கள் கண்ணீருடன் அலைகின்றனர்.

பழைய அரசின் – மஹிந்த அரசின் – காலத்தில் அவை நடைபெற்றிருந்தன. ஆனாலும், தற்போதைய அரசு, ஓர் அரசு என்ற வகையில் அதற்குப் பொறுப்புக் கூறித்தானாக வேண்டும். ஆனால் இன்றைய அரசு இன்னமும் அதற்குப் பதில் சொல்லவில்லை. அவர்கள் சொல்ல வேண்டும் என வலியுறுத்துகின்றோம்.

அதேவேளை எமது சமூகத்திலும் மனமாற்றம் ஏற்படவேண்டும். இளம் விதவைகளை மறுமணம் செய்துகொள்ள இளைஞர்கள் முன்வர வேண்டும். இளம் விதவைகளையும், அவர்களது பிள்ளைகளையும் பாதுகாப்பதற்கு எமது இளைஞர்கள் அவர்களை மறுமணம் செய்து கொள்வதே ஒரே வழி.

எமது சமூகத்தில் இதற்கு பல்வேறு விமர்சனங்கள் வரும் என்று தெரியும். ஆனாலும் இந்த விடயத்தில் ஒரு சமூக மாற்றம் வேண்டும் – என்றார். (உ–5)

### மோடியின்

கொழும்பிலிருந்து சிறப்பு விமானத்தில் அநுராதபுரத்துக்கு வருகை தரும் மோடி அங்கு, மகாபோதியில் வழிபாடு நடத்தவுள்ளார். அதன் பின்னர் அங்கிருந்து மன்னார் மாவட்டத்திற்கு உலங்கு வானூர்தியில் செல்லவுள்ளார். அங்கு தலைமன்னார் வரையிலான ரயில் சேவையை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இதனைத் தொடர்ந்து அங்கிருந்து உலங்கு வானூர்தி மூலமாக, யாழ். மாநகரசபை மைதானத்தை வந்தடைவார். யாழ். பொதுநூலகத்துக்கு அருகில், இந்திய நிதி உதவியுடன் அமைக்கப்படவுள்ள கலாசார நிலையத்துக்கான அடிக்கலை நட்டு வைப்பார்.

அதன் பின்னர், யாழ். பொதுநூலகத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரையும், வடக்கு மாகாண முதலமைச்சரையும் சந்தித்துப் பேசுவார். தொடர்ந்து, கீரிமலையில் இந்திய வீட்டுத் திட்ட கையளிப்பு நிகழ்வில் பங்கெடுப்பார். அதன் பின்னர், கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயத்துக்குச் சென்று வழிபாடு செய்த பின்னர், பலாலிக்குச் சென்று அங்கிருந்து புறப்பட்டுச் செல்வார்.

எனினும் திட்டமிடப்பட்டுள்ள இந்தப் பயண ஒழுங்குகளை இன்று வருகை தரும் அதிகாரிகளே இறுதி செய்வர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (உ–5)

### லண்டனில்

ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட பலதரப்பில் இருந்தும் விடுக்கப்பட்ட கோரிக்கையின் பிரகாரமே ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டுள்ளது.

100 நாள் வேலைத்திட்டம் முடிவடைவதற்கு முன்னர், மைத்திரி அரசின் செயற்பாடுகளை விமர்சிப்பது உகந்ததல்ல எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இந்நிலையில், ஆர்ப்பாட்டங்களும் அவசியமில்லை எனவும் கூறப்பட்டுள்ளது. பிரிட்டிஷ் தமிழர் பேரவையே இந்த ஆர்ப்பாட்டத்துக்கான அழைப்பை விடுத்திருந்தது.

ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தபோதும், மிகச் சொற்ப அளவிலானோர் மைத்திரி வருகைக்கான எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் என்று கூறப்படுகின்றது. 10க்கும் குறைவானவர்கள் மைத்திரி வருகையை எதிர்க்கும் வாசகங்கள் அடங்கிய பதாகைகளுடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற–சி)

### ஜனாதிபதியிடம்

ஜனாதிபதி ஒருவரின் செயற்பாடுகள் குறித்து கேள்வி எழுப்ப முடியாது.ஆனால், 19ஆம் திருத்தச் சட்டத் தின் கீழ் இது குறித்து கேள்வி எழுப்ப வழி செய்யபப்பட்டுள்ளது."– என்று அவர் கூறியுள்ளார். (ற–சி)

### 27ஆம்

நடத்தியிருந்தார்.

இந்த நிலையில், தேர்தலில் மாற்றத்துக்காக வாக்களித்த வடபகுதி மக்களைச் சந்தித்து நன்றி தெரிவிப்பதற்காக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 27ஆம் திகதி வடக்கே வருகை தரவுள்ளார் என்று பிரதமர் அலுவலகம் தெரிவித்தது.

வடக்குப் பயணத்தின் போது முதன்மையான சந்திப்புக்கள் யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் என்றும், எனினும் வடக்கின் ஏனைய மாவட்டங்களுக்கும்கூட பிரதமர் செல்வார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ–5)

### 29 புதிய

தெரிவித்துள்ளார்.

"இதற்காக 29 புதிய தூதுவர்களை நியமிக்க நடவடிக்கை எடுகப்பட்டுள்ளது"– என்றும் அவர் கூறியுள்ளார்.

"முன்னைய அரசின்போது அரசியல் ஆதரவுடன் பலருக்கு இராஜதந்திர நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. அவ்வாறான நியமனங்களை ரத்து செய்து, புதிய நியமனங்கள் வழங்கப்படவுள்ளன" என்றும் அவர் குறிப்பிட்டார். (ற)

### மனிதாபிமானத்துடன்

தமிழக மீனவர்கள் எல்லையைத் தாண்டி இலங்கைக் கடல் எல்லைக்குள் ஊடுருவினால், அவர்களைச் சுட்டுத் தள்ளுவதில் தவறில்லை என்று பிரதமர் ரணில் விக்ரமசிங்க அண்மையில் 'தந்தி' தொலைக் காட்சிக்கு வழங்கிய செய்தியில் தெரிவித்திருந்தார்.

"வட மாகாண மீனவர்களின் வாழ்வாதாரத்தை தமிழக மீனவர்கள் பறித்துக் கொள்கின்றனர். எனவே, எல்லை தாண்டி வரும் மீனவர்களை கடற்படையினர் சுடுவதில் எவ்வித மனித உரிமை மீறலும் இல்லை. இதை சட்டம் அனுமதிக்கிறது. உதாரணமாக, மர்ம நபர் ஒருவர் எனது வீட்டில் அத்துமீறி நுழைய முயன்றால், அவரை நான் சுட்டுத் தள்ளலாம். இதனால், அந்த நபர் உயிரிழக்கவும் நேரலாம். இதற்கு சட்டம் அனுமதி அளிக்கிறது. எல்லை தாண்டும் தமிழக மீனவர்களை சிறைபிடிக்கக் கூடாது என்று கூறும் இந்திய அரசு, இந்திய கடல் பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களை சுட்டுக்கொன்ற இத்தாலி கடற்படை வீரர்களை கைது செய்தது ஏன்? எங்கள் நாட்டிடம் எதிர்பார்க்கும் அதே கருணையை இத்தாலி வீரர்களிடமும் காட்டியிருக்கலாமே" என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்தக் கருத்து தமிழகத்தில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறானதொரு நிலையிலேயே, இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா, நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

இந்தச் சந்திப்பில், ரணில் விக்கிரமசிங்கவின் சர்ச்சைக்குரிய கருத்துக் குறித்து சுஷ்மா கேள்வி எழுப்பினார் என்று இந்தியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

"தமிழக மீனவர்கள் பிரச்சினையை இத்தாலி கடற்படையினர் கைது விவகாரத்துடன் பிரதமர் ரணில் இணைத்துப் பேசியுள்ளார். இந்த இரண்டு விவகாரங்களும் வெவ்வேறானவை. இதைத் தொடர்புபடுத்த முடியாது" – என்றும் சுஷ்மா கருத்துத் தெரிவித்துள்ளார். (உ–5)

# நிலாவரை நீரூற்று மறு சீரமைப்பு

அச்சுவேலி, மார்ச் 9

புத்தூர் நிலாவரை வற்றா நீர் ஊற்று வளாகம் சுற்றுலா மையமாக மறுசீரமைப்புச் செய்யப்படுகின்றது.

வடக்கு மாகாணசபை நிதி உதவியுடன் வலி.கிழக்கு பிரதேச சபையால் மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

யாழ்.குடாநாட்டுக்கு வருகை தரும் வெளிநாட்டு உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளை கவரும் இடமாக நிலாவரை வற்றா நீர் ஊற்று அமைந்திருப்பதால் நாளாந்தம் பல நூற்றுக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் கூடுகின்றனர்.

அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்காக அடிப்படை வசதிகள் இல்லாத நிலையில் பல்வேறு



இடர்பாடுகளுக்கு உள்ளாகி வந்தனர்.

நிலாவரை வற்றா நீர் ஊற்று வளாக சுற்றுலா மைய மறுசீரமைப்புத் திட்டத்தின் கீழ் சுற்றுலாப் பயணிகளின் பயன்பாட்டுக்காக மலசல கூட வசதி மற்றும் குளியல் அறைகள், வாகனத் தரிப்பிடம் என்பன வற்றோடு சுற்றுலாப் பயணிகளுக்கான இருக்கைகள், சிறுவர்களுக்கான விளையாட்டு அலகு என்பனவும் நிறுவப்படவுள்ளன. அத்துடன் வியாபார நிலையங்களும் நிர்மாணிக்கப்படவுள்ளன.

நிலாவரை வற்றா நீர் ஊற்றும் அதனோடு இணைந்த நிலையில் அமைந்துள்ள நவசைலேஸ்வரம் (சிவன்கோயில்) ஆலயமும் புராண இதிகாச கதைகளோடு தொடர் புபடுத்தப்பட்ட நிலையில் கூறப்படுகின்றன.

நிலாவரை வற்றா நீர் ஊற்று 50 x 35 விஸ்தீரணம் கொண்ட நீள் சதுர நீர் நிலையாகும். நீர் நிலையின் ஆழம் தொடர்பாக இதுவரை உத்தியோகபூர்வ தகவல் தெரியாத நிலையில் உள்ளது. (வ)

## கழிவு தேயிலையுடன் மூவர் கைதாகினர்

கொழும்பு, மார்ச் 9

கழிவு தேயிலையை விற்பனைக்காகக் கொண்டு செல்ல முயன்ற சந்தேகநபர்கள் மூன்று பேர், யக்கலமுல்ல நகரத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்களிடமிருந்து சுமார் 2,677 கிலோகிராம் கழிவு தேயிலை கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த கழிவு தேயிலையை லொறி ஒன்றில் ஏற்றி விற்பனைக்காகக் கொண்டு செல்ல முயற்சித்த போது, அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள், ஏத்கந்துர, யக்கலமுல்ல மற்றும் பட்டதோல ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள்.

குறித்த சந்தேக நபர்கள் மூவரையும் கொட்டாவ மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர். (வ)

## வீதி விபத்தில் இருவர் காயம்

மட்டக்களப்பு, மார்ச் 9

காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள காத்தான்குடி பிரதான வீதியில் சனிக்கிழமை கிழமை இரவு இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு 8.30 மணியளவில் காத்தான்குடி 6 ஆம் குறிச்சி பிரதான வீதியில் மீராபாலிகா மகா வித்தியாலயத்துக்கு முன்பாக இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. காத்தான்குடி அமானுல்லாஹ் வீதியிலிருந்து பிரதான வீதியைக் கடக்க முற்பட்ட மோட்டார் சைக்கிளுடன் பிரதான வீதியூடாகச் சென்ற மோட்டார் சைக்கிள் மோதியதில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது. இதில் படுகாயமடைந்த இருவர் மட்டக்களப்பு மருத்துவமனையில்சேர்க்கப்பட்டுள்ளனர். (வ)

## துப்பாக்கி மீட்பு

அம்பாறை, மார்ச் 9

சட்ட விரோதமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த துப்பாக்கி ஒன்றை அக்கரைப்பற்று-அம்பாறை வீதி 3ஆம் கட்டை வயல் பிரதேசத்தில் வெள்ளிக்கிழமை மீட்டுள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.எல். எம். ஜெமில் தெரிவித்தார்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து, குறித்த வயல் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போதே பை ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் துப்பாக்கியை பொலிஸார் மீட்டுள்ளனர்.

இந்தச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (வ)



## உணவகங்களில் வேட்டை

அம்பாறை, மார்ச் 9

அம்பாறை மாவட்ட கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்கு உட்பட்ட அக்கரைப்பற்று நகரிலுள்ள உணவகங்கள் மற்றும் பலசரக்குக் கடைகள், நேற்று முன்தினம் சனிக்கிழமை பொதுச் சுகாதார பரிசோதகர்களால் சுற்றிவளைக்கப்பட்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்தச் சுற்றிவளைப்பை அக்கரைப்பற்று, ஆலையடி வேம்பு மற்றும் அட்டாளைச்சேனை பிரதேசங்களில் கடமையாற்றும் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் இணைந்து மேற்கொண்டிருந்தனர். இதன்போது, 24 உணவகங்களும் 13 பலசரக்குக் கடைகளும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. (வ)

## கண் கிளினிக் நடைபெறாது

தென்மராட்சி, மார்ச் 9

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் புதன்கிழமைகளில் நடைபெறும் கண் கிளினிக் தவிர்க்க முடியாத காரணங்களால் எதிர்வரும் 11, 18 ஆகிய திகதிகளில் நடைபெறமாட்டாது என்று மருத்துவமனை செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)



கிளிநொச்சி, ஆனந்தபுரம், உதயநகரை இணைக்கும் பிரதான பாதையூடாகச் செல்லும் ரயில் பாதைக்கான கடவை இதுவரை அமைக்கப்படவில்லை. தினமும் அந்தப்பாதையூடாக அதிகமானோர் பயணம் செய்கின்றனர். (வ)

## கடை உடைத்து பொருள்கள் திருட்டு

மட்டக்களப்பு, மார்ச் 9

ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஏறாவூர் 4ஆம் குறிச்சிப் பகுதி பிரதான வீதியிலுள்ள கடை ஒன்றை உடைத்து பணம் மற்றும் சிகரெட் திருடப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

கடை உரிமையாளர் வெள்ளிக்கிழமை இரவு 9 மணிக்கு கடையைப் பூட்டி விட்டு வீட்டுக்குச்சென்று, மறுநாள் காலை 6.30 மணிக்கு கடைக்கு வந்து பார்த்துள்ளார்.

இதன்போது கடையின் பின் கதவு மற்றும் முன் கதவுகள் உடைக்கப்பட்டு, தனது கடையிலிருந்த இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பணமும் 10 கோல்ட் லீப் சிகரெட் பக்கெற்றுகளும் திருடப்பட்டுள்ளதாக அவர் பொலிஸ் முறைப்பாட்டில் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தத் திருட்டுச் சம்பவம் குறித்து ஏறாவூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (வ)

## ஒலுவில்-அஷ்ரப் வீதி மிக மோசமான நிலை

### திருத்துமாறு மக்கள் கோரிக்கை

ஒலுவில் அஷ்ரப் நகர் பிரதான வீதி நீண்ட காலமாக சேதமடைந்துள்ளதால் போக்குவரத்து செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

ஒலுவிலிருந்து அம்பாறை மற்றும் தீகவாபி ஆகிய நகரங்களுக்குச் செல்லும் இவ் வீதி பெரியளவில் சேதமடைந்து காணப்படுவதால் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதோடு இரவு நேரங்களில் விபத்துகள் ஏற்படுவதாகவும் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். ஆற்று நீர் [illegible]யை அரிப்பதால் வீதியின் [illegible]ங்கு சேதமுற்று பெருங் [illegible]ழி ஏற்பட்டுள்ளதால் கனரக வாகனங்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

குறித்த வீதியால் நாளாந்தம் பாடசாலை மாணவர்களுக்கான பஸ் சேவை இடம் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. எனவே குறித்த வீதியைச் செப்பனிட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ)

## ஓட்டோச் சங்கங்கள் விதிகளை பின்பற்றுக

### தென்மராட்சியில் இடம்பெற்ற கலந்துரையாடலில் அறிவுறுத்து

தென்மராட்சி, மார்ச் 9

தென்மராட்சியில் உள்ள ஓட்டோச் சங்கங்களை யாப்பு விதிகளின் பிரகாரம் புனரமைத்து அதன்படி செயற்படுமாறு சாவகச்சேரி நீதிவான் அறிவுறுத்தியுள்ளார். தென்மராட்சி பிரதேச ஓட்டோஉரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் வெள்ளிக்கிழமை பிற்பகல் சாவகச்சேரி நீதிமன்றில் இடம்பெற்ற போது இவ்வாறு அறிவுறுத்தப்பட்டது. கலந்துரையாடலில் சாவகச்சேரி, கொடிகாமம் ஆகிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் சாவகச்சேரி நகரசபைத் தலைவர், தென்மராட்சி பிரதேச செயலர் கலந்து கொண்டனர். (வ-9)



பிரமணாளங்குளம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரால் அமைக்கப்பட்ட வெதுப் பகத்தை வட மாகாண அமைச்சர்களான பா.டெனீஸ்வரன், ப.சத்தியலிங்கம் மற்றும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் திறந்து

## செட்டிகுளத்தில் திறக்கப்பட்டது வெதுப்பகம்

வவுனியா, மார்ச் 9

வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பிரமணாளங்குளம் கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் அமைக்கப்பட்ட வெதுப்பகம் கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. 1.5 மில்லியன் ரூபா செலவில் இக்கட்டடம் கிராம மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பும் நோக்குடன் வட மாகாண மீன்பிடி போக்குவரத்து கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் முயற்சியால் அமைக்கப்பட்டது. நிகழ்வில் அவருடன் வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வன்னி மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர் ந.சிவசக்தி ஆனந்தன், வடமாகாண்சபை உறுப்பினர்கள் மற்றும் லர் கலந்து கொண்டனர்.(வ-56-402)

## புதிய பணிப்பாளர்

பனை அபிவிருத்திச் சபையின் பணிப்பாளராக நல்லூரைச் சேர்ந்த பொன்னையா சிவபாதம் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் முன்னர் பனை அபிவிருத்திச் சபையின் தலைவராகவும் பணியாற்றியிருந்தார். ஏற்கனவே சபையில் தலைவராக முல்லைத்தீவைச் சேர்ந்த கே.விஜிந்தன் நியமிக்கப்பட்டார்.

மொத்தம் 5 பணிப்பாளர்களைக் கொண்டதாகவுள்ள இந்த சபையில் தலைவரும் மற்றும் பணிப்பாளர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மற்றைய 3 பணிப்பாளர்களும் அடுத்து வரும் நாள்களில் நியமிக்கப்படலாம் என்று சபை வட்டாரங்கள் தெரிவித்தன. அவர்களில் ஒருவர் திறைசேரியில் இருந்து பணிப்பாளராக நியமிக்கப்படுவார் என்று தெரிவிக்கப்பட்டது.(வ17)

## தென்மராட்சியில் ஆரம்பித்தது காலபோக நெல் கொள்வனவு

தென்மராட்சி, மார்ச் 9

தென்மராட்சி பிரதேச நெற்செய்கையாளர்களிடமிருந்து காலபோக நெல் கொள்வனவை நெல் சந்தைப்படுத்தும் சபையினர் நேற்று முன்தினம் ஆரம்பித்துள்ளனர். மீசாலை புத்தூர் சந்தியில் உள்ள கமநல சேவைகள் நிலையத்தில் நேற்று முன்தினம் பெருமளவு வாகனங்களில் நெல் ஏற்றி வரப்பட்டு நிலையத்தில் வைத்து நெல் சந்தைப்படுத்தும் சபையினரால்கொள்வனவு செய்யப்பட்டது. (வ-9)

## கொடுப்பனவு வழங்கவில்லை

தென்மராட்சி,மார்ச் 9

தென்மராட்சிப் பிரதேசத்தின் பல பிரிவுகளில் சமுர்த்தி பயனாளிகளுக்கு கடந்த ஓகஸ்ட் மாதத்தின் பின்னர் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இதுதொடர்பாக பிரதேசசமுர்த்தி மகா சங்கத்துடன் தொடர்பு கொண்டபோது டிசெம்பர் மாதம் வரையான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு மறுதலித்த சமுர்த்தி பயனாளிகள் சமுர்த்திச் சங்கத்தில் கடன் பெற்றவர்கள் மட்டும் அழைக்கப்பட்டு கடன் தொகை அறவீட்டுப் பற்றுச்சீட்டு வழங்கப்பட்டதாகவும் ஏனைய பயனாளிகளுக்கு இது வரை கொடுப்பனவு வழங்கவில்லை என்றும் தெரிவித்தனர். கடந்த ஆறு மாதங்களுக்கு உரிய சமுர்த்திக் கொடுப்பனவுகள் வழங்கப்படாததால் பொருளாதாரக் கஷ்டத்தை அனுபவிப்பதாகவும் இந்தக் கொடுப்பனவை வழங்க உரிய அதிகாரிகள் நடவ டிக்கை எடுக்கவேண்டும் என்றும் தெரிவித்தனர். (வ-9)

# அபிவிருத்தி பணிகளுக்கு முட்டுக்கட்டை

### மன்னாரில் சரணாலயம் என்ற போர்வையில் காணிகள் பல அபகரிக்கப்படுவதால்

மன்னார், மார்ச் 9

மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர சபை பிரிவுக்கு உட்பட்ட கிராமங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி திட்டங்களுக்கு பல்வேறு முட்டுக்கட்டைகள்,மற்றும் இடையூறுகள் ஏற்படுவதாக மன்னார் நகர சபை உறுப்பினர் இரட்ணசிங்கம் குமரேஸ் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:

கடந்த அரசால் கொண்டு வரப்பட்ட வன விலங்குகள்,பறவைகள் சரணாலயம் என்ற போர்வையில் மன்னாரில் குடியேற்றப்பகுதிகளில் அபகரிக்கப்பட்டுள்ள காணிகளால் தற்போதைய அபிவிருத்திப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக வங்காலை தொடக்கம் சிறுநாவற்குளம்,திருக்கேதீஸ்வரம் போன்ற பகுதிகளிலும்,மன்னார் நகரப் பகுதியான பள்ளிமுனை,மன்னார் கோட்டை, சௌத்பார், ஸ்ரேசன் போன்ற பகுதிகளிலும் இவ்வாறு



காணிகள் வன விலங்குகள்,பறவைகள் சரணாலயம் என்ற போர்வையில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

குறித்த ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளன. இதனால் அபிவிருத்தித் திட்டங்கள் முடக்கப்பட்டுள்ளன''-என்றார். (வ-56)

## வவுனியாவில் நுகர்வோர் கோரிக்கை

வவுனியா, மார்ச் 9

பொருள்களின் காலாவதியாகும் திகதி மற்றும் விலைகளைத் தெளிவாகக் குறிப்பிட்டு பொருள்களை விற்பனை செய்யுமாறு நுகர்வோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வவுனியா கடைகள் சிலவற்றில் அண்மைக்காலமாக விற்பனை செய்யப்பட்ட பொருள்கள் பலவற்றில் பாவனை திகதிகள் தெளிவாகக் குறிப்பிடப்படாத நிலையிலும் அவை சிறிய எழுத்துக்களில் இருப்பதாகவும் திகதி காலாவதியான பொருள்கள் விற்பனை செய்யப்படுவதாகவும் அத்தியாவசிய பொருள்களின் விலைகள் குறைக்கப்படாமலும் விற்பனை செய்யப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதனை வவுனியா மவட்ட சுகாதார பிரிவினரும் நுகர்வோர் பாதுகாப்புச் சபையும் கவனத்தில் எடுத்து உரிய வகையில் மக்கள் நலன் கருதி பொருள்களை, குறித்த வர்த்தக நிலையங்கள் உரிய வகையில் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ்-402)

# வவுனியாவில் உள்ளூர் பஸ் சேவை நேரத்தை நீடிக்குமாறு கோரிக்கை

வவுனியா, மார்ச் 9


வவுனியா உள்ளூர் பயணிகள் பஸ்சேவையை இரவு 9 மணிவரை நீடிக்குமாறு பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வவுனியாவில் உள்ளூர் பஸ் சேவை இரவு 7 மணியுடன் நிறைவுறுகிறது. வவுனியா மன்னார் வீதி,நேரியகுளம் வீதி, ஹொரவப்பத்தான வீதி, சிதம்பரபுரம், பூந்தோட்டம், கூமாங்குளம் உட்பட பல்வேறு பகுதிகளுக்கான தனியார், இ.போ.சபை பஸ் சேவைகள் இரவு வேளை போதியளவு இல்லை. அதேவேளை 7 மணிக்கு பின்னர் தூர இடங்களுக்குச் சென்று திரும்பும் அரச, தனியார் ஊழியர்கள் மற்றும் ரயிலில் வரும் பயணிகள் பலரும் தமது வீடுகளுக்குச் செல்வதற்கு பஸ் சேவை இல்லாததால் அதிக பணம் கொடுத்து ஓட்டோவில் செல்ல வேண்டியுள்ளது. குறிப்பாக பெண்கள் இரவு வேளையில் ஓட்டோவில் செல்லும் போது சில நெருக்கடிகளை எதிர்கொள்வதால் இரவு நேர பஸ் சேவையை இரவு 9 வரை நீடிக்க வேண்டும் என்று பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-402)

> பெண்கள் இரவு வேளையில் ஓட்டோவில் செல்லும்போது நெருக்கடிகளை எதிர்நோக்குகின்றனர்.

# எதிர்க்கட்சியினருக்கும் நன்மையே செய்கிறோம்

## வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், மார்ச் 9

எப்போதும் எம்மைக் குற்றஞ்சாட்டிக் குறைகூறும் எதிர்க்கட்சியினருக்கு நாம் நன்மையே செய்கி[illegible]. அவர்கள் நன்மை கூறு[illegible]களோ? இல்லையோ? நாம் நல் மனத்துடன்தான் வாழ்த்தி வாழ்ந்து வருகின்றோம் – இவ்வாறு தெரி வித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கம் நடத்திய தமிழ் விழாவும் 12 ஆவது திருக்குறள் மாநாடும் கிளிநொச்சி, கூட்டுறவு மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"அரசு எமக்குத் தந்த கொடைப் பணத்தை எமது கட்சிக்கு மட்டுமே கொடுக்க வேண்டும் அல்லது எமது கட்சிக்கு அதிகமாகத் கொடுக்க வேண்டும் என்று சிந்திக்காது எதிர்க் கட்சியினருக்கும் ஒரே அளவைப் பகிர்ந்து கொண்டோம். நன்னயம் செய்து விட்டோம்.

அரசியலில் பொய் பேசாமல் இருப்பது மிக மிகக் கடினம். சில தடவைகளில் மற்றவர்கள் நலம் கருதி நாங்கள் பொய் உரைக்க வேண்டிய ஒரு கடப்பாடு எம்மை நோக்கி வந்தடையும். குற்றமற்ற நன்மைகளைப் பிறருக்கு வழங்குவதாக அமைந்தால் பொய்மைச் சொற்கள் கூட வாய்மை எனவே ஏற்கப்படும். குற்றமானது எப்பொழுது ஏற்படுகிறது? சுயநலத்துடன் செயற்படும் போதுதான் குற்றம் குடி கொள்கின்றது''– என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ற–4)



யாழ். குடாநாட்டில் வைக்கோலுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளதோடு அதன் விலையும் அதிகரித்துள்ளது. ஒரு லோட் ( டிராக்டர் பெட்டி) வைக்கோல் பத்தாயிரம் ரூபா வரை விற்கப்படுகின்றது. பெரும்போக நெற்செய்கையாளர்களில் கூடுதலானோர் இயந்திரம் மூலம் அறுவடை செய்வதால் வைக்கோல் சிதறி சேதமடைவதன் காரணத்தாலேயே வைக்கோலுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது. (வ–17)

# மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு உதவிகள்



வவுனியா, மார்ச் 9

வவுனியா மாவட்டத்தின் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கும் செயற்றிட்டம், வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தால் கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்டது. இந்த நிகழ்வு வவுனியா மாவட்ட கிராம அபிவிருத்தி மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த, தெரிவு செய்யப்பட்ட 6 மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு பாத்திரங்களும், அலுவலக தளபாடங்கள், கதிரைகள் என்பனவும், சுமார் 25 பெண்களுக்கு அவர்களது வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கோடு தையல் இயந்திரங்களும் வழங்கப்பட்டன.

நிகழ்வுக்கு வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து, கிராம அபிவிருத்தி, வர்த்தக வாணிபம், வீதி அபிவிருத்தி மற்றும் போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன், சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான வினோநோகராதலிங்கம், ந.சிவசக்தி ஆனந்தன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான திரு.ஜி.டி.லிங்கநாதன், வவுனியா மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி மோகநாதன், மாகாண கிராம அபிவிருத்திப் பணிப்பாளர் பெலிசியன், மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர். (ற)

# வீதிகளுக்கு விளக்குகள் அமைக்கும் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 9

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதான வீதிகளில் வீதி விளக்குகள் [illegible]க்கப்பட்டு வருகின்றன.

[illegible]விருத்தி அதிகார சபையின் ஏற்பாட்டில் குறித்த வீதி விளக்குகளை மின்சார சபை ஏற்படுத்தி வருகின்றன.

பலாலி வீதியில் பரமேஸ்வராச் சந்தியில் இருந்து கோண்டாவில் சந்தி வரைக்கும் வீதி விளக்குகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதேசமயம் சபைக்கு உட்பட்ட ஏனைய பிரதேசங்களிலும் தேவைப்படும் இடங்களுக்கு இந்த வீதி விளக்குகள் அமைக்கப்படவும் உள்ளதாகவும் சபையின் தவிசாளர் ப.வசந்தகுமார் தெரிவித்தார்.

சபைக்கு உட்பட்ட அனேகமான வீதிகள் மற்றும் குறுக்கு வீதிகள், ஒழுங்கைகள் என்பன [illegible] வெளிச்சம் இன்றி இருளில் மூழ்கியும் காணப்படுகின்றன. (வ–17)

# கழிவு ஒயில் பிரச்சினைக்கு தீர்வுகாண கட்டட ஆராய்ச்சி மையத்திடம் உதவி

## அமைச்சர் ஐங்கரநேசன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், மார்ச் 9

சுன்னாகம் நிலத்தடி நீரில் கழிவு ஒயில் கலந்துள்ளமை தொடர்பில் தீர்வு காண தேசிய கட்டட ஆராய்ச்சி மையத்திடம் உதவி கோரப்பட்டுள்ளது என வடமாகாண விவசாயம், கால்நடை, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இலங்கைக்கான நோர்வே தூதுவர் கேட்ஜோலோசன் வடமாகாண விவசாய அமைச்சரை அவரது அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார். இந்தக் கலந்துரையாடலின் பின்னர் கருத்துத் தெரிவித்தபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"தேசிய கட்டட ஆராய்ச்சி மையத்தினரிடம் உள்ள ராடர் கருவியால் தரையை ஊடுருவி ஆராய்ச்சி செய்ய முடியும். சுன்னாகப் பகுதியில் நிலவும் எண்ணெய்க் கசிவுப் பிரச்சனைக்கு தீர்வு காணும் நோக்கில் அந்த கருவியின் தேவை எமக்குள்ளது. இது தொடர்பில் தேசிய கட்டட ஆராய்ச்சி மையத்தின் உதவியை கேட்டுள்ளோம். இருப்பினும் தற்போது அந்தக் கருவி மண்சரிவு அபாயங்களை எதிர்நோக்கியுள்ள மாத்தளைப் பகுதியில் செயற்பாட்டில் உள்ளது.

அண்மையில் இலங்கையில் துறை சார்ந்த நிபுணர்கள், நோர்வே விஞ்ஞானிகள் உள்ளிட்ட குழுவினர் சுன்னாகப் பகுதிக்கு வந்து எண்ணெய்க்கசிவு தொடர்பில் ஆராய்ந்தனர். அதன் தொடர்ச்சியாக தற்போது இந்தச் சந்திப்பு நடைபெறுகின்றது.

அமெரிக்க நிதியுதவியுடன் 'வுறொக் 4000' என்ற சாதனம் இங்கு கொண்டு வரப்படவுள்ளது. இந்தக் கருவி தண்ணீரில் எண்ணெய்க்கசிவு உள்ளதா என 20 நிமிடங்களில் கண்டறியும் சக்தி வாய்ந்தது"– என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற–10)

# மன்னார் வரும் மோடியிடம் மீனவர் பிரச்சினை பற்றி மனு

## அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவிப்பு

மன்னார், மார்ச் 9

தலைமன்னார் வரும் இந்திய பிரதமர் நரேந்திர மோடியிடம் எமது பிரச்சினைகள் தொடர்பான மனு ஒன்றைக் கையளிக்கவுள்ளேன். எ[illegible]து மீனவர்கள் படுகின்ற கஷ்டங்[illegible], இந்திய மீனவர்களின் இழுவை[illegible]குகள் தொடர்பான விடயங்களைச் சுட்டிகாட்டவுள்ளேன். – இவ்வாறு தெரிவித்தார் வட மாகாண கடற்றொழில் போக்குவரத்து கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன்.

கடந்த வியாழக்கிழமை மன்னார் நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற வட மாகாண மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் விசேட கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"எமது மீனவர்கள் படுகின்ற கஷ்டங்கள், இந்திய மீனவர்களின் இழுவைபடகுகள் தொடர்பான விடயங்களைச் சுட்டிகாட்ட இருப்பதோடு கடந்த காலங்களில் இந்திய அரசால் ஐம்பது ஆயிரம் வீட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்டமைக்கு நன்றி தெரிவிக்கப்படும். அத்துடன் குறைந்தது முப்பது ஆயிரம் வீடுகள் எமது வடமாகாணத்துக்கு தேவைப்படுகிறது. இது தொடர்பாகவும் எனது கோரிக்கையை முன்வைக்க இருக்கிறேன்.''– என்று அவர் மேலும் தெரிவித்தார்.



"மக்களின் கோரிக்கைகள் அடங்கிய மனு கையளிக்க வேண்டும் என்று சொன்னால் சம்பந்தப்பட்ட தரப்பினர் அதை தெரியப்படுத்தினால் அதை இந்திய பிரதமரிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படும். இலங்கைக்குவரும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி தலைமன்னார் வரும்பொழுது அவரை வரவேற்க வேண்டும். இது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விடயம்."– என்றும் அவர் தெரிவித்தார்.

"எமது கடல்வளம் நாளாந்தம் அழிவடைந்து வருகிறது. இந்த கடல் வளத்தை பாதுகாப்பதற்காக ஆரம்ப காலத்தில் இருந்து மத்திய் அரசோடு இது தொடர்பான விடயங்களை தெளிவுபடுத்தியுள்ளேன். இவை தொடருமானால் எமது மக்கள் எதிர்வரும் காலங்களில் மீனுக்கு கை ஏந்து நிலைவரும். எனவே, இவற்றை எவ்வாறு தடைசெய்வது தொடர்பாக ஆராய்ந்து வருகிறோம். கடந்த காலங்களில் பல பேச்சுக்கள் இந்திய படகுகள் தொடர்பாக நடைபெற்றிருந்த போதிலும், முன்னேற்றம் எதுவும் காணப்படவில்லை. எனினும், குறித்த பிரச்சினை எதிர்காலத்தில் நீண்டு செல்ல விடாது இதனை தீர்த்துவைக்க வேண்டும்."– என்றும் அவர் தெரிவித்தார். (ற)

# விறுவிறுப்பான ஆட்டத்தில்


# றோயல், யங்கம்பன்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச் 9

நெடியகாடு இளைஞர் விளையாட்டு கழகம் யாழ். மாவட்ட ரீதியில் நடத்தும் யாழ்ப்பாணம் வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்ட தொடரின் ஆட்டங்கள் நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் வல்வெட்டி கருணாகரன் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி மோதியது. அதில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாம் சுற்றுக் குத் தகுதி பெற்றது.

ஆட்டத்தின் முதல் பாதியில் கருணாகரன் அணி 2:0 என்ற அடிப்படையில் முன்னிலையில் இருந்தது. ஆட்டத்தின் முடிவு கருணாகரன் அணிக்குச் சார்பாகவே இருக்கும் என்று பலத்த எதிர்பார்ப்புக்கள் நிலவின. எதிர்பார்ப்புக்கள் மத்தியில் ஆரம்பமானது ஆட்டத்தின் இரண்டாவது பாதி. எதிர் அணிகளினதும் பார்வையாளர்களதும் எதிர்பார்புக்களை பொய்யாக்கி அடுத்தடுத்து ஹற்றிக் கோல்களை அடித்து ஆட்டத்தின்போக்கை தன் பக்கம் மாற்றி எழுதியது ஊரெழு றோயல் அணி. றோயல் அணி சார்பாக கஜகோபன், மு.நிதர்சன், நிதர்சன் ஆகியோர் தலா ஒரு கோலை அடித்தனர்.



கம்பர்மலை யங்கம்பன்ஸ் மற்றும் சிவானந்தா அணிகளுக்கிடையிலான ஆட்டத்தின் சில பதிவுகள்



ஊரெழு ரோயல், வல்வெட்டித்துறை கருணகரன் அணிகளுக்கிடையிலான ஆட்டத்தின் சில பதிவுகள்

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் சிவானந்தா விளையாட்டு கழக அணியை எதிர்த்து கம்பர்மலை யங் கம்பன்ஸ் விளையாட்டு கழக அணி மோதிக்கொண்டது. அதில் கம்பர்மலை யங் கம்பன்ஸ் விளையாட்டு கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாம் சுற்றுக்குத் தகுதி பெற்றது. யங் கம்பன்ஸ் அணி சார்பாக பிரியதர்சன் 3 கோல்களையும், பிரகாஸ் 1 கோலையும் பதிவு செய்தனர். (ற–ரி,23)

# மகாஜனவை வீழ்த்தி மகுடம் சூடியது யூனியன்

யாழ்ப்பாணம், மார்ச் 9

தெல்லிப்பழை பாடசாலைகளுக்கு இடையிலான 15வயது, 17வயது, 19 வயதுப்பிரிவு பெண்களுக்கான கோட்ட மட்ட வலைப்பந்தாட்டத் தொடரில் மூன்று பிரிவுகளிலும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி வெற்றிபெற்று சம்பியனானது.

கடந்த வெள்ளிக்கிழமை யூனியன் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற இந்த இறுதி ஆட்டங்களில் முதலாவதாக இடம்பெற்ற 15 வயதுப்பிரிவு அணிகளுக்கான இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி மோதியது. அதில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி 20:4 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

17 வயதுப்பிரிவினருக்கான இறுதியாட்டத்திலும் தெல்லிப்பழை யூனியன்கல்லூரியை எதிர்த்து தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி மோதியது. அதில் தெல்லிப்பழை யூனியன்கல்லூரி 29:5 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று கிண்ணத்தை கைப்பற்றியது. 19 வயதுப்பிரிவு அணிகளுக்கான இறுதியாட்டத்திலும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணியே மோதியது. அதிலும் தெல்லிப்பழை யூனியன்கல்லூரி அணி 24:2 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் ஆனது. (ற–ரி,23)


## யாழ். கிண்ணத்துக்கான நாளைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 9

நெடியகாடு இளைஞர் விளையாட்டு கழகம் யாழ். மாவட்ட ரீதியில் நடத்தும் யாழ்ப்பாணம் வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்ட தொடரின் ஆட்டங்கள் நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

நாளை செவ்வாய்க்கிழமை மாலை 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் எதிர் சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இளவாலை யங்கென்றிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ரி)

## கரப்பந்து தொடர் நாளை



யாழ்ப்பாணம், மார்ச்9

தெல்லிப்பழை கல்விக் கோட்ட மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 15, 17, 19 வயதுப்பிரிவு ஆண், பெண் இருபாலருக்குமான கரப்பந்தாட்ட தொடர் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ற–ரி,23)

## எறிபந்துத் தொடர் சாதித்தது யூனியன்

வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான 19 வயதுப் பிரிவினரின் எறி பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவின் இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும், மானிப்பாய் மெமோறியல் கல்லூரியும் மோதின. இதில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வெற்றி பெற்றது. இதே பிரிவில் பெண்களுக்கான இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை யூனியனும் இளவாலை கன்னியர் மடமும் மோதின. இதிலும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வெற்றி பெற்று ஆண்கள், பெண்கள் என இரு பிரிவிலும் கிண்ணத்தை சுவீகரித்தது. (422)

# மானிப்பாய் தாண்டவம்

# அனுராதபுரத்துக்கு மரண அடி

யாழ்ப்பாணம், மார்ச் 9

வையூரனின் ஹட்றிக் கோல்களின் உதவியுடன் அனுராதபுரம் றூவன் கல்லூரியை வீழ்த்தியது மானிப்பாய் இந்துக்கல்லூரி.

இலங்கை பாடசாலை உதைபந்தாட்டச்சங்கத்தால் நடத்தப்படும் 19 வயதுப்பிரிவு உதைபந்தாட்டத் தொடரின் முதலாவது லீக் கடந்த வெள்ளிக்கிழமை மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

அதில் அனுராதபுரம் றூவன் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் இந்துக்கல்லூரி அணி மோதிக்கொண்டது. ஆட்டம் ஆரம்பமாகி சில நிமிடங்களிலேயே மானிப்பாய் இந்துக்கல்லூரி அணியினருக்கு ஓர் பெனால்டி உதை கிடைந்தது அதனை அகிலன் அழகான முறையில் கோலாக மாற்றினார். பதிலுக்கு அனுராதபுரம் றூவன் கல்லூரி அணியினர் தமது அணிக்கான கோல்களைப் பெறுவதற்காக மானிப்பாயின் தடுப்புச்சுவரை தகர்க்கும் திட்டத்தில் மும்முரம் காட்டினர். ஆனால் மானிப்பாயின் தீவிர வேகத்துக்கு அனுராதபுரத்தால் ஈடுகொடுக்க முடியவில்லை.

ஆட்டத்தின் 16ஆவது நிமிடத்தில் மானிப்பாய் இந்துக்கல்லூரி அணி வீரன் தனுசன் தனக்கு கிடைந்த வாய்ப்பினை துல்லியமாக பயன்படுத்த ஆட்டத்தின் முதல் பாதியில் மானிப்பாய் இந்துக்கல்லூரி 2:0 என்ற அடிப்படையில் முன்னிலை பெற்றது.

ஆட்டத்தின் இரண்டாவது பாதியின் போதும் தொடர்ந்து மானிப்பாயே ஆதிக்கம் செலுத்தியது. இரண்டாவது பாதியின் 41ஆவது நிமிடத்தில் மானிப்பாய் இந்துக்கல்லூரி அணி வீரன் கிளாறின் றூவன் கல்லூரி அணியினருக்கு கண்கட்டி வித்தை காட்டி மேலும் ஒரு கோலை மானிப்பாய் சார்பாக பதிவுசெய் தார். அதையடுத்து மானிப்பாய் இந்துக்கல்லூரி 3:0 என்ற என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது. ஆட்டம் நிறைவடைய சில நிமிடங்களே இருந்தது. எதிர் அணியினர் மானிப்பாயின் ஆதிக்கத்தை தடுக்க முடியாது என்ற மனச்சலிப்பில் இருந்தனர். அனுராதபுரத்தின் ஆட்டத்தில் தீவிரம் இருக்கவில்லை.



வாய்ப்பை பயன்படுத்திய வையூரன் ஆட்டத்தின் 44ஆவது, 48 ஆவது 59 ஆவது நிமிடங்களில் ஹட்றிக் கோலினை அடித்தார். தமது பங்குக்கு ஆட்டத்தின் 55 ஆவது நிமிடத்தில் சஜீவனும், ஆட்டத்தின் 67ஆவது நிமிடத்தில் அகிலனும் கோல்களை அடித்தனர். ஆட்ட நேர முடிவில் மானிப்பாய் இந்துக்கல்லூரி அணி 8:0 என்ற கோல் கணக்கில் இமாலய வெற்றி பெற்றது. (ற–ரி,23)

பொருளியல்
பிரத்தியேக மற்றும் குழு வகுப்புகள்
A/L 2015 2016 2017
தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலம்
ஆசிரியர்:- L . றெஜினோல்ட்
தொடர்பு: 077 8448535

வீடு வாடகைக்கு
இல.68, கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள மாடி வீடு வாடகைக்குண்டு.
நிறுவனங்கள் விரும்பத்தக்கது
தொடர்பு: 077 582 3346, 077 975 8046

பயணிகளின் மனதைத் தொட்ட நம்பிக்கையின் உச்சத்தில்
nation popular travels & tours
Colombo-Madurai 15700/= Colombo-London 45900/=
Colombo- Frankfurt 43900/= Colombo-Paris 45900/=
JET AIRWAYS பயணிகளுக்கு விமான நிலையத்துக்கான வாகன வசதி இலவசம்
NATION POPULAR TRAVELS & TOURS
Colombo-0114378117 | Jaffna-0214920920
Vavuniya-0244930830

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.03.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.